ஓம் பரப்ரஹ்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED.

கமலம்-5.	சென்னை: பிரமோதூதஹூ மார்கழிமீ 1உ	இதழ்-57.
Vol. 5.	1930-ஹூ டிசம்பர்மீ 16உ	No. 57.

ஆநந்த  தர்சனம்

"ஹரி ஹரன்" என்று சிலருக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். இதன் தாத்பரியம் ஹரியும் ஹரனும் ஒன்றென்பதைக் குறிப்பிடவே யன்றி வேறில்லை. ஒரு மூர்த்தியை மட்டும் உபாஸித்து மற்றொரு மூர்த்தியை யலக்ஷியம் செய்வது நியாயமல்லவென்றும், அரிக்கும் அரனுக்கும் பேதமின்றி யிருக்கட்டுமென்றும் கொண்ட ஆழ்ந்த யோசனையால் முன்னோர்கள் தங்கள் பிள்ளைகட்கு ஹரிஹரன், சிவராமன் முதலிய இரட்டைப் பெயர்களை வைத்தார்கள். சிதம்பர க்ஷேத்திரத்தில் நடராஜனும் கோவிந்தராஜனும் எழுந்தருளி நாளதுவரை பூஜிக்கப்படுகின்றனர்: இந்த மார்கழி மாதத்தில் சிதம்பரத்திலும் ஸ்ரீரங்கத்திலும் திவ்யோத்ஸவங்கள் நடந்தேறும். இவ்விரு ஸ்தலங்கட்கும் சென்று இரு மூர்த்திகளையும் தரிசிப்பவர் அடையும் ஆநந்தம் அனுபவித்தாலன்றி சொல்ல முடியாது. ஃ

"சிவராம கிருஷ்ண" என்று அநேக பக்தர்கள் மூன்று மூர்த்திகளையும் ஒரே காலத்தில் தியானிப்பதுண்டு. இவர்களுடைய கருத்து யாதெனில், சிவமூர்த்தியும், ஸ்ரீராமபிரானும், ஸ்ரீ கிருஷ்ணபகவானும் முக்காலத்திலும் தங்களைக் கைவிடாமல் காப்பாற்றட்டு மென்பதே. நமஸ்காரம், பிரதக்ஷிணம் முதலியன மூன்றே செய்கிறோம். மூன்றுமுறை ஜெபித்தால் சில மந்திரங்

எவரையும் முதல்தரம் பார்த்தவுடனே அவர்களோடு முகமலர்ந்து சிரித்துப்பேசி, கண்டவுடன் கொண்டுவிடும் கத்திரிக்காய்போல்,—அவர்களைச் சிநேகர் ஆக்கிக் கொள்வது வழக்கம். இது தப்பிதம். அநுபவமற்ற தன்மை.

கள் சித்தியாவதுண்டு. அதுபோல் மூன்று மூர்த்திகளை உபாஸித்தால் பிரயோஜன முண்டென்பது பெரியோர்களின் கருத்து. ஒவ்வொரு நாமத்திலும் இரண்டெழுத்துக ளிருப்பதின் தாத்பரியம் ஒரு எழுத்தை யுச்சரித்த மாத்திரத்தில் இருதயத்திலுள்ள அசுத்தம் நீங்குகிறதென்பதும், மற்றொரு அக்ஷரத்தைச் சொல்லி வாயை மூடிக்கொள்ளுவதால் வெளியே போன அசுத்தம் மறுபடியும் உள்ளே வந்து இருதயத்தை யடையாதென்பதுமே. ஆகலின், நாமும் அதை நம்பி சிவராமகிருஷ்ணவென்று உச்சரிக்கக்கடவோம்.

ஃ

"பகவந் நாமஸ்மரணை" ஒரு மரத்திலிருக்கும் அநேக காக்கைகளை சிறு பையன் ஒரு கல்லாலெறிந்து ஓட்டிவிடுவதுபோல் அஞ்ஞானத்திலாழ்ந்து கிடக்கும் மனிதன் பகவந் நாமங்களைச் சொல்லித் தன்னைப் பீடிக்கும் ஸகல பாபங்களையும் பறக்கடிக்கிறான். தியானத்தால் மனம் திரும்பி ஒரு நிலையில் நிற்பதற்குப் பக்குவம் பெறுகின்றது. ஆகலின் நாமஸ்மரணை முக்கியமாயிற்று.

ஃ

"தெய்வத்தை நம்பினவன் க்ஷேம மடைவான்." துஷ்டர்கள் சதா கெட்ட எண்ணமுடையவர்களாய் ஒருவரை யொருவர் கெடுக்கவெண்ணி மடிந்துபோவர். அடைக்கலமென்று ஓடி வருவோரை மாத்திரம் அரசர்கள் ஆதரிப்பர். ஏனையோரை வாளால் வெட்டித் தண்டிப்பர். அதுபோல், தம்மை ஆசிரயிக்கும் பக்தர்களிடம் மட்டுமே பகவான் பரம கருணையோடிருப்பர். மற்றவர்களிடம் கருணை பாராட்டார். இதற்கு உதாரணமாக, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தமது பாதத்தி லுட்கார்ந்த அர்ஜுனனுக்கு உதவி செய்து, தலைமாட்டி லுட்கார்ந்த துரியோதனனை யழித்த கதையைச் சொல்லலாம். ஸ்ரீராமபிரானும் அவ்வாறே செய்திருக்கிறார். அடைக்கலம் புகுந்த விபீஷணனைக் காப்பாற்றித் தோழமை கொண்டு, எதிர்த்து நின்ற இலங்கேசுவரனைக் கொன்றுவிட்டாரன்றோ?

ஃ

"பிரகாச மில்லையேல் பதார்த்தம் தெரியாது." ஓர் இருட்டறையில் பொற்பாத்திரங்கள் பல விருப்பினும், ஓர் கள்வன் ஒளிந்திருப்பினும், ஒரு மலைப்பாம்பு கிடப்பினும் தீபம் முதலிய வெளிச்சங்க ளில்லையேல் அவை தெரியவாராது. அதுபோல், "நான் யார்? உலகம் எப்படி யுண்டாயிற்று?" என்ற கேள்விகளைக் கேட்டுத் தத்துவத்தை விசாரியாதவனுக்கு ஞானமுண்டாகாது. அவனுக்குத் துக்க நிவர்த்தியு மில்லை.

ஃ

"ஓர் இடத்திற்கு மூன்று வழி." பல குழந்தைகளைப் பெற்ற தாயானவள் ஒரு குழந்தைக்கு முலைப்பாலும், ஒரு குழந்தைக்கு அன்னமும், ஒரு குழந்தைக்குப் பக்ஷணமும் கொடுத்துப் பசியாற்றிச் சமாதானப்படுத்துவது போல், பகவான் ஒவ்வொருவருடைய நிலைமைக்கும் தகுந்தபடி முக்தியடைவதற்கான பல வழிகளை ஏற்படுத்தியிருக்கின்றார். ஆதலின், எல்லோரும் ஒரே மார்க்கத்தை யனுஸரிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமு மில்லை. சிலர் கர்ம மார்க்கத்தையும், சிலர் பக்தி மார்க்கத்தையும், சிலர் ஞான மார்க்கத்தையும்

படுத்தவன் அப்படியே அசையா திருந்தால் தூங்கின மாதிரிதான். புரண்டு புரண்டு படுப்பினோ நாம் பேசுவதைக் கவனிக்கிறா னென்றோ, அல்லது நாம் என்ன செய்கிறோ மென்பதை மெதுவாகத் தன் கண்களைத் திறந்துகொண்டு உற்று நோக்குகிறானென்றோ, அதற்குப் பொருளாம்.

அனுசரிக்கின்றனர். எவ்வித ஆகாரத்தை யுட்கொண்டாலும் பசி தீருவது நிச்சயமேபோல், எந்த மார்க்கத்தை யனுசரித்தாலும் சுத்த சித்தமுள்ளவர்கள் மூக்தியை யடைவது நிச்சயமே. ஃ

"பகவத் தியானம் பரம சாதனம்." உன்னுடைய உடையிலும் நடையிலும் சதா கடவுளையே நினைத்துக்கொண்டிருந்தால், அதாவது, மனப்பூர்வமாக எம்போதும் பகவானையே தியானம் செய்துகொண்டிருந்தால், உலகெங்கும் பகவத் ஸ்வரூபமாகவே தோன்றும். இந்த உத்தமமான நிலைமையை யடைவதற்குத்தான் பெரியோர்கள் எப்போதும் பகவானைத் தியானிக்கிறார்கள்.

ஃ

"வசீகர காந்த சக்தி" பொய் வேஷக்காரர்கள் எங்கும் மலிந்து கிடப்பதனாலேயே மெய்ஞ்ஞானிகள் உலகிலில்லை யென்று சொல்லக்கூடாது. பாபிகள் ஓரிடம் மலிந்து கிடப்பதைக் கண்டு புண்ணியவான்கள் இல்லை யென்று சொல்லப்போகாது. பெரியோரது சக்தியால் உயிர்கள் க்ஷேமமடையும். பிணிகளை யொழித்து ஆரோக்கியம் தரும் சக்தி மகான்களிடம் அற்புதமாக வெளிப்படுகின்றது. பல தேசங்களில் பல பெரியோர் பற்பல காலங்களில் ஹஸ்ததீக்ஷையால் சர்வ வியாதிகளையும் சொஸ்தப்படுத்தினர். காந்தம்போன்ற அற்புத நரம்புசக்தி மனித சரீரத்தில் குடிகொண்டுள்ளது. சிற்சில மனிதரை நாம் முதற் கண்டவுடன் அவர்கள் வசம் நமது மனம் இடையறாது சென்று பாய்வதற்கும், மற்றும் சிலரை நாம் முதற் கண்டபோதே நிஷ்காரணமாக அன்னார்மீது ஒருவிதமான வெறுப்படைவதற்கும் காரணம் இஃதே. வசீகர காந்தசக்தி வாய்ந்தோர் எங்கும் பூஜிக்கப் பெறுவர். இந்த சக்தி ஞானிகளிடமும், அருள்பெற்றோரிடமும், பக்தர்களிடமும் விசேஷமாய் ஜ்வலிக்கின்றது. ஃ

"ஆத்ம-பரமாத்ம சம்பந்தம்" இளைப்பும் களைப்பும் என்னணமொழிவன? ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் அத்வைத சம்பந்த முண்டு. ஜீவன் சிவனோடொன்றுபடவேண்டும். உடனே இளைப்பும் களைப்பும் ஒழிந்துபோம். அதற்கு ஒருவழி இங்கு தெரிவிப்போம். எந்தவிதமான பலவீனம் ஒருவனுக்கு நேரிட்டாலும், அவன் ஒரு தனியிடத்தமர்ந்து (ஒரு ஆசனத்திலோ ஒரு பீடத்திலோ உட்கார்ந்து) வெளியில் மக்கள் செய்யும் சந்தடியைக் கவனியாமல் மனசை உள்ளே யிழுத்துக்கொண்டு, மனசினால்,—உலகமெல்லாம் வாழ்க—ஸர்வ பிராணிகட்கும் மங்களமுண்டாகுக—சாந்தம் சாசுவதமெங்கும் ஓங்குக—திருவருட் பெருங்கருணை யாவுமடைக.—என்று உறுதியாகக் கூறி, பின்னர்—ஆத்மாவாகிய தனக்கும் பரமாத்மாவுக்கும் சம்பந்தம் உண்டு—என்று தியானித்தல்வேண்டும். பிறகு—யான் இதுகாறும், யான் பரமாத்ம சம்பந்தமுடைய பொருள் என்பதை மறந்திருந்தேன்; அஞ்ஞானம்—எனக்கும் பரமாத்மாவுக்கும் இடையில் தடையாக நின்றது. இப்போது அஞ்ஞானமாகிய தடையை நிவர்த்தி செய்துவிட்டேன். இதோ!

பழங்காலத்துப் புஸ்தகம் விலைக்குக் கிடைக்கும், நான் வாங்கித் தருகிறேன் பணம் எடு என்றால் அதற்கு வஸந்தகால நண்பர்கள் பதில் சொல்வதில்லை. பணச்செலவில்லாமல் சும்மா சும்மா தூக்கிக்கொடுத்தால் அப்போது மட்டும் ஆசையுடன் கை நீட்டுவார்கள். மனைவி, தாசி இதுகூட இலவசத்தில் எங்கிருந்தாவது வந்தால் இவர்கள் வெகு சந்தோஷப்படுவார்களாக்கும்!

பரமாத்மாவின் அபார அற்புத சக்தி என் மனசிலும் தேகத்திலும் அற்புத வேகத்தோடும் பாய்ந்தோடுகிறது. பரமாத்மாவாகிய பெரிய சுகவாரியில் துக்கமில்லை, நோயில்லை, பலவீனம் என்றதொன்றுமில்லை. எனவே, என் மனசிலும் தேகத்திலும் குடிபுகுந்த அழுக்கு (நோய் அல்லது பலவீனம்) ஒழிந்துபோயிற்று. கடவுள் வாழ்வு என் மனத்தினும் நுழைந்து பாவி யோடுகிறது. அற்புதம்! அற்புதம்! அற்புதம்! இதோ! இந்தக் கணத்தினும் உண்மையாகப் பரமபதியின் ஆநந்தவெள்ளம் என்னுள்ளம் புகுந்து—தேகம் புகுந்து ஓடுகிறதே! இனி நோய் ஒழிந்தது; பலவீனம் பறந்து போயிற்று—என்று இவ்விதமாகச் சொல்லித் தியானிக்கவேண்டும். உடனே தியானித்தபடியே நோயும் ஒழிந்துபோம்; பலவீனமும் போய்விடும்; சுகம் உண்டாகும். நம்பிக்கையுடன் செய்தவர்க்கே இது சித்திக்கும்.

ஃ

1. "பகவத் பிரார்த்தனை." சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்திருக, மோக்ஷப்பிரத, ஸர்வக்ஞ, சர்வசக்த, ஆநந்தமய, ஸத்ஸ்வரூப, அதிருசிய, அத்விதீய, ஏக, பரம புருஷனாகிய கடவுளே! எங்கள் மணி வண்ணனே! நின்னை அன்பாலும், நின்பொருட்டுச் செய்யப்படுஞ் சத்கருமங்களாலும் வணங்குகின்றோம்.

2. சிருஷ்டி ஸ்திதி லயகாரண பூதனாய், திரிலோகவியாபியாய் எமது மனோவிருத்திகளைப் பிரேரேபிக்காநின்ற ஓ பரமாத்மாவே! உன்னைத் தியானிக்கின்றோம்.

3. எவன் யாவற்றையும் விளங்கச் செய்கின்றானோ, எவன் எல்லாவற்றையும் ரக்ஷிக்கின்றானோ, எவனிடத்தினின்று யாவும் ஜனிக்கின்றனவோ, எவனிடத்து யாவும் மீண்டு லயிக்கின்றனவோ, மோக்ஷத்தின் பொருட்டு எம் மனோ விருத்திகளைச் சன்மார்க்கத்திலே பிரவர்த்திக்கும்படி எவன் உதவுகின்றானோ—அப்படிப்பட்ட திவ்ய சந்நிதானமாகிய பரமோத்தமனே! உன்னை மேன்மேலும் கொண்டாடித் தொழுவோமாக.

4. பராபர வஸ்துவாகியும், அஞ்ஞானத்துக்குப் புறம்பாகியும், சூரியனைப்போல் ஜ்வலித்துக்கொண்டும் இருக்கின்ற மஹாபுருஷனாகிய உம்மைத் தியானமார்க்கத்தில் அறிந்தன்றோ மனிதன் அமிருதனாகக் கடவான். பரம பதப் பிராப்திக்கு உமது அருட்பிரகாசத்தைத் தவிர வேறு வழியு முண்டோ?

5. ஓ புருஷோத்தமா! மஹா புருஷனாகிய உன்னை ஒருவனையே என்றும் மறவாமலும், பிற மதங்களிற் சென்றுழலாமலும், உனது அருளே நிறைந்தொளிர்கின்ற சத்தியமார்க்கமாகிய இந்த எனது பூர்வ மதத்தில் தானே நான் எனது முன்னோர்களைப்போலப் பிரவர்த்திக்கும்படியும், அவ்வழியிலேயே நின்று உன்னை அடையுமாறும் கடாக்ஷிப்பாயாக.

6. சர்வ சங்கேத கருமங்களையும் பரித்தியஜித்து, ஏகநாயகனாகிய நின்னை யொருவனையே சரண மடைந்தனம். அடியாரைச் சகல பாபங்களினின்றும் விடுவித்து அபயம் கொடுத்தருள்வாயாக. ஓம் தத்ஸத்.

கோபம்—அதிருப்தி—ஆயாசம் எதுவும் கனவிலும் வாராவண்ணம் உங்களின் வீட்டுக் குடித்தனத்தை நடத்துங்கள் துரைகளே! துரைசானிகளே!!

அமிர்தகுணபோதினி

பிரமோதூத௵ மார்கழி௴ 1௳

உடனே திரும்பிப் பார்.

ஆத்திரத்திலும், அவசரத்திலும், பிறரது தூண்டுதலின்மேலும், அல்லது உடனே ஒரு பதில் சொல்லிவிடுவதிலும் அவ்விதம் செய்வதை அந்த சமயம் நிறுத்திக்கொண்டு, அதன் முடிவு என்னாகுமென்று உடனே திரும்பிப் பார். உன் ஆத்திரத்தில் பிறகு நீ வருந்தக்கூடிய ஒன்றைச் செய்துவிடலாம்; அவசரத்தில் நீ எல்லைமீறிச் சென்றோ, உன்னை யறியாமலே சிக்கிக்கொண்டோ தவிக்கும்படியாகலாம்; பிறர் தூண்டுதல் போடுவதில் உன் அறிவையே நீ இழந்து அவர்கள் ஏவியபடி செய்துவிட்டுப் பிறகு நொந்துகொள்ள நேரலாம்; உடனே பதில் சொல்லிவிடுவதில், ஒரு பகையையோ, ஒரு மனஸ்தாபத்தையோ, ஒரு பெரும் செலவையோ, ஒரு பாரச் சுமையையோ, ஒரு நிர்வகிப்பையோ, தொல்லையையோ நீ தூக்கிச் சமாளித்துக் கலங்கும்படி யிருக்கலாம். ஒருவன் தன் சகோதரர்களுடனோ, தன் பெற்றோருடனோ மனஸ்தாபப்பட்டுக்கொண்டு தனக்கு மிக்க வேண்டியவனாயுள்ள உன்னிடம் சில தினங்களுக்கு உன் வீட்டில் இடம் தரும்படி வேண்டுகிறான். ஆகட்டுமென்று அப்பொழுதே பதில் சொல்லிவிடுவதைவிட உடனே திரும்பிப் பார். நீயே இடம் தரக்கூடிய சக்தியுள்ளவனாகில் ஆகட்டுமென்று உடனே சொல்லிவிடலாம். அது காலசகாயமுமாகும். அந்த சக்தி இல்லையாகில், நீ உன் வீட்டுடன் கலந்து யோசித்து அவர்கள் சம்மதி தெரிந்தே பதில் சொல்லவேண்டி யிருக்கும். முதலில் நீ ஒப்புக்கொண்டு, பிறகு வீட்டில் இணங்கிவாராததைக் காண்கையில், ஏன் அங்கு வாக்குத் தந்தோமென்று வருந்தும்படி வரும். பிறகு "வீட்டில் ஒப்பவில்லை, நான் என் செய்வது?" என்று தெரிவித்துக் கையை விரிப்பதிலும், "வீட்டில் கேட்டுவந்து சொல்லுகிறேன்"

என்று முதலிலேயே நிதானித்துப் பதில் சொல்வது சிலாக்கியமன்றோ? இது திரும்பிப் பார்ப்பதிலுள்ள நன்மை.

ஃ

நான்கு நாளைக்குப் பிறகு வருகிற புதன்கிழமையன்று பிரயாணம் நிச்சயமென்று உன்னுடைய நண்பர்களுக்கு எழுதிவிடுகிறாய். அப்பொழுது புதன்கிழமை வெகு தூரத்திலிருப்பதாக உன் எண்ணம். அவ்விதம் எண்ணாமல் உடனே திரும்பிப் பார். புதன்கிழமை ஒரு நிமிஷத்தில் வந்துவிடும்; உன் பிரயாணமோ நீ எதிர்பாராத விதமாய்த் தடைபட்டுவிடலாம்; உன் நண்பர்களோ ரயிலுக்கு வந்திருந்து ஏமாறிச் செல்லலாம். இதைவிட ஒரு தினத்திற்கு முன்பு நிச்சயமான கடிதம் இன்னென்று எழுதுவதாக முன் கடிதத்தில் தெரிவித்து அவ்விதமே செய்வது மேல். வீட்டில் ஒரு கலகம் சச்சரவு நேர்ந்து அந்த ஆத்திரத்தில் பயணம் தொடங்குகிறாய். உன் புறப்பாட்டைப்பற்றி உன் நண்பர்களுக்கும் எழுதிவிடுகிற அவசா மனிதனாகிறாய். அவ்விதமின்றி உடனே திரும்பிப் பார். வீட்டில் கலகம் சச்சாவிட்டுக்கொண்டு கடைவீதிக்குச் சென்றாலும் கூட, அங்கும் சச்சாவும் தொந்தரவும் அலைச்சலுமாய்ப் போனகாரியம் ஆகாமல் திரும்பவேண்டியிருக்கும்; கடைவீதிக்கே இவ்வாறானால், ஊர்பிரயாணம் தொடங்குகையிலோ அங்குப் போனகாரியம் ஆகாமல், காரியத்தைச் சாதித்துத் தரும் மனுஷ்யர்களும் அவ்வூரில் இல்லாமல், வயிறும் ஒட்டி வாடி தன் ஊருக்குத் திரும்பும்படியும் ஆகலாம்—என்று உன் மனமே உன்னைக் குத்திக் காண்பிக்கும். அந்தக் குத்துதல் உன் பிரயாணத்தைப் பின்னடையச் செய்துவிடலாம். நீ நினைத்தபடி புறப்பட எத்தனையோ தடைகள் அணுகலாம்; உனக்கும் பிரயாணமாவதற்குப் பிரியமற்றுப் போகலாம். ஆதலின் கலகம்—சச்சரவு—ஆத்திரம் இந்தச் சமயங்களில் எவ்வித தீர்மானமும் கொள்ளாதிருத்தல் மேல். அந்தக் கலக நெருப்புச்சமயம் பிரயாணம் தொடங்காதிருத்தலும் நன்று.

ஃ

கொண்ட கணவனோடு தினமும் போர். கணவனின் வீட்டை விட்டுத் தாய்வீடு சென்றுவிடப் புறப்படுகிறாய். அவ்விதம் ஓடிவிடுவதற்கு முன் உடனே திரும்பிப் பார். சம்சார வாழ்க்கையில் எத்தனையோ ரகசியங்களுண்டு. அதிலே உன் கணவன் உன் பிரிவைச் சகியாது உன் நினைவே பெரிதாகி வாட்டமுற்று எங்குமாறு

பசிக்கிற வயிற்றில் பாலுந் தேனும் கலந்தூற்றினாரை மறப்போர் எத்தனை பேர்? மறந்தோர்தான் நன்றாக வாழ்கின்றனர்.

பிராணிகளை ஹிம்ஸிப்பது பாபம் என்று நீளப் பிரஸங்கம் செய்வது! ஆனால் மாமிசம் இல்லாமல் சாதம் உள்ளுக்கு இறங்க மாட்டேனென்கிறதாம்!

புரிவதும் ஒரு ரகசியமாகும். அவ்விதம் எங்கும் சுபாவம் உன் கணவனருக்கு இருக்கும்வரையில் உனக்கு க்ஷேமகரமே; உன் அதிகாரமும் செல்லக்கூடியதே. உன்மீது அவாது பிரியமும் அதிகரித்தபடியே இருக்குந்தான். நீ கலகமிட்டுக்கொண்டு ஓடி விடுவதில் உன்னைப் பிரிந்து நிற்கிற ஒரு சகிப்பை உன் கணவனுக்கு ஊட்டிவிடுகிறாய். அதனால் அந்தக் கணவனும் “தொலைந்தால் அப்படியே தொலைந்துபோ” என்று மனம் வெறுத்துக் கூறி ஏகாங்கியாகவே இருந்துவிடுகிறான். “கஷ்டம்” என்பதெல்லாம், ஒரு சங்கதி கஷ்டமாகப்படுவதெல்லாம்—நான்கு நாளைக்கே. பிறகு அந்தக் கஷ்டம் வழக்கமாகிப்போய் கஷ்டம் என்று தோன்றாமலே சாதாரணமாகிவிடும். இவ்விதம் சாதாரணமாகி உன்னைப் பிரிந்துவிட்டிருப்பது உன் கணவனின் மனதில் துன்பத்தைச் செய்யாமல் பலநாளும் போக்குவதற்கு சாத்தியப்பட்டுவிடுமானால் பிறகு உன் எண்ணத்தையே உன் பர்த்தா கொள்ள இடமிராது. நீ இல்லாததே கலகம் சண்டை யில்லாத சமாதானப் பொழுதாக உன் கணவன் நினைத்துவிடலாம். அப்பொழுது உன் தேவையே அவனுக்கு வேண்டாததாகிப் போய், நீ அலக்ஷியம் செய்யப்படுகிறவளாகி, அது உன் க்ஷேமத்திற்கும் வாழ்வுக்கும் தீங்காக முடியலாம். இவ்வித சமயத்தில் உன் கணவன் வேறொரு அன்னிய ஸ்திரீயின் வசமாகிவிடுவானாகில், அது உன் சுகத்துக்கு இன்னும் அதிக கஷ்டத்தையே விளைததுவிடும். இனி, நீ போய்ச் சேருகிற உன் தாய்வீட்டில் நடக்கப்போகிற சங்கதிகளையும் கொஞ்சம் திரும்பிப் பார். கணவனார் வீட்டிலிருந்து கௌரவமாய்த் தாய்வீடு பார்க்கவந்து உட்காருகிற பெண்ணுக்கே அதிக சிறப்பு நடக்கும். அவள் எத்தனை நாள் தங்கினாலும், சீக்கிரம் புருஷன்வீடு போய் விடக்கூடுமானதால் அவள் இருப்பு ஒரு பாரமாகப் படாது. சகல மரியாதைகளுடன் வைத்திருந்து பிரயாணப்படுத்தி அனுப்புவர். கணவனுடன் சண்டையிட்டுக்கொண்டு தாய்வீடுவந்த வாழாவெட்டிக்கு முதல் மூன்று தினத்தில் மட்டுமே நல்ல நெய்ச்சோறு கிடைக்கலாம். பிறகு சலிப்பும், திட்டும், வெறுப்பும் தோன்றிக்கொண்டு அவள் இருப்பே ஒரு பாரமாகிவிடலாம். “வாழவேண்டிய வீட்டிலிருக்காமல் இப்படி இங்கே கிடந்து என் பிராணனைப் பிடுங்குகிறாயே” என்று பெற்ற தாயே சொல்லிக்காட்டவும் நேர்ந்துவிடும். பிறகு நாலுபக்கமும் நாலு குத்துச் சொற்கள் தான். இது கணவனின் வீட்டை விட்டுச் செல்லுமுன் உடனே திரும்பிப் பார்த்து யோசிக்க வேண்டிய விஷயமாகும். ஃ

வைத்தியராயிருப்போர் கவிராயராகவும் இருந்தால், வைத்தியப்புளுகும் கவிப்புளுகும் ஒருங்கு கூடிக்கொண்டு ஊரை மயக்கவல்ல பெரிய புளுகுபர்வதமாகி விடுமாம். பணம் பறிப்பதிலுள்ள கவனம் நன்மை செய்வதி விராது.

நீ ஒருவனுடன் அன்புகொண்டு குலாவுகையில் உனக்கு உன் ஊரிலிருந்து ஒரு கடிதம் வருகிறது. உன் அன்பன் "இது எவர் கடிதம்?" என்று கேட்கிறான். அவனுக்குப் பதில் சொல்லுவதற்கு முன் உடனே திரும்பிப் பார். அக்கடிதம் எழுதியவன்மீது உனக்குள்ள ஆத்திரத்தையும் பழய வாலாறுகளையும் உன் அன்பனுக்கு நீ தெரிவித்துவிடுவாயானல், அத்துடன் உன் குணசுபாவங்களையும் அவன் தப்பிதமாய் எண்ணிக்கொள்ள நேர்கிறது. வந்த கடிதத்தில் தன் செலவுக்குப் பணம் அனுப்பும்படி கேட்டிருக்கிறது. நீ அனுப்ப மனமில்லாமலிருப்பதையும் உன் நண்பனுக்குச் சொல்லுகிறாய். கடைசியில், நீ கடிதம் எழுதியவனுக்குப் பழங்களும் பக்ஷணங்களும் வாங்கிக்கொண்டு ஊர்போய்ச் சேருகிறாய். சேர்ந்த பிறகு உன் நண்பனைக் கண்டு சிலதினங்களானதும் அவன் இறந்து போக, அதைக் குறித்து வருந்தி ஒருவருக்கு நீ கடிதம் எழுதுகிறாய். உன் முந்திய அன்பன், தான் உன்னிடமிருந்து கேட்ட சங்கதிகளை அந்த ஒருவருக்குத் தெரிவித்துவிட்டிருப்பதால்; உன் கடிதம் பெற்ற அந்த ஒருவர், உனக்குப் பதில் எழுதுகையில்,— "எவ்வளவுதான் வருத்தங்கள் உண்டாயிருந்தாலும், நம்மைக் கேட்ட பணத்தை அனுப்புவதற்குக்கூட மனம்ஒப்பாமற் போயிருந்தாலும், "இறந்தார்" என்றபோது எல்லா வருத்தங்களையும் மறந்து துக்கிக்கும்படி செய்வதுடன், நம்மைக் கேட்ட பணத்தைக் கொடுக்காமற்போனேமே யென்று நொந்துகொள்ளவும் வரும்தான்; என்ன செய்கிறது," ——என்று குறிப்பிட்டு அனுப்புகிறார். அந்தக் கடிதம் உனக்குத் தலைஇரக்கமாகி, இந்தப் பண விஷயமும் அனுப்பாமற்போனதும் இவருக்கு எப்படித் தெரிந்ததென்று நீ திகைக்கையில் உன்னிடம் கேட்ட அன்பன் அவருக்குத் தெரிவித்திருக்கலாமென்று ஏற்படுகிறது. ஆகவே, நீ ஆரம்பத்திலேயே உன் அன்பனுக்குப் பதில் சொல்வதற்குமுன் உடனே திரும்பிப் பார்த்து யோசித்துப் பதில் சொல்லாமல் நிறுத்தியிருந்தால் உன் இரகசியங்களும் உன் மானங்களும் இப்படி அனுவசியமாய் வெளிவந்து கெட நேர்ந்திராது. ஃ

ஒரு விஷமத்தனத்தைச் செய்துவிட எண்ணும்போதும், ஹிம்ஸிப்பும்—நீதிக்கு முறனுமான ஒரு காரியத்திற்குத் துணியமுயலும்போதும் உடனே திரும்பிப் பார். அதன் முடிவு எவ்வாறாகுமென்றும், அதைச் செய்யாதிருந்தால் எவ்வளவு உத்தமமென்றும் யோசி. யோசித்து இன்னொரு தடவையும் திரும்பிப் பார். இவ்வி

தாம் புகுந்த குடும்பத்தில் எல்லோரையும் கண்ணீர் விடும்படி கலக்கிவதைத்து தனித்தனியாகக் குடும்பத்தைப் பிரித்துச் சிதைத்து அலங்கோலப்படுத்திய அங்கனாமணிகள் எத்தனைபேர்? இவர்களின் வாழ்வு ஓங்கியதா?

தமே, ஒவ்வொரு மனிதனுடைய முக ஜாடையையும், பிரித்து வைத்துக் கெடுக்கும் குணமுடையோரது காரியங்களையும் சிந்தித்துத் திரும்பிப் பார். ஃ

ஒரு தபாற்காரர் தாம் ஒருவீட்டில் தபால்களும் மணியார்டர்களும் தருவதற்கு உட்கார்ந்து யாவும் தந்து எழுந்து செல்லுகையில், தாம் உட்கார்ந்த இடத்தை உடனே திரும்பிப்பார்த்துச் சிறிது நின்று, அதன்பின் அவ்விடத்தை விட்டுச் செல்வது வழக்கம். ரூபாய்களோ, கடிதம் முதலியவைகளோ தவறி வைத்திருந்தாலும், திரும்பிப் பார்த்துக் கவனிப்பதில் அதிக நன்மை யிருக்கிறதன்றோ? இவ்விதமே வீட்டைவிட்டுச் செல்லுகையிலும் திரும்பிப் பார்ப்பது மேல். மறந்தவை உடனே ஞாபகத்திற்கு வந்து மறுபடியும் வீட்டிற்குள் புகும்படி யிருக்கலாம். வீட்டில் நெய்யும் பல சாமான்களும் வாங்கிவரச்சொல்ல, சரியென்று தலை அசைத்துச் செல்லுகையில் மறுபடியும் திரும்பிப் பார்ப்பானானால் தான் நெய் வாங்குவதற்குப் பாத்திரம் எடுக்காமற்போவதை அவன் அறிந்துகொள்வான். இவ்விதமே ஊர் பிரயாணத்தின்போதும் வாயிலைத் தாண்டிய பிறகு உடனே திரும்பிப் பார்த்தால், மறந்தவை ஏதாவது ஞாபகத்துக்கு வந்துவிடலாம். வண்டியைவிட்டு இறங்குகையில் உடனே திரும்பி வண்டியைப் பார்த்தால் தான் மறந்த பாதரக்ஷை, குடை, சிறுமூட்டை இவைகள் தென்படும். ஓரிடத்திற்குப் போய்ப் பிறகு அங்கிருந்து புறப்படுகையில் உடனே திரும்பிப் பார்த்துத் தன்னை நன்றாகக் கவனித்தால் பெட்டியோ, குடையோ, பாதரக்ஷையோ மறந்துபோனது தெரியும்; அல்லது தான் எடுத்துவரவேண்டிய சாமான்களின் ஞாபகமும், இன்னும் வாங்கவேண்டிய இரண்டொருவஸ்துக்களின் நினைவும் தோன்றும். ஊர்போகிறவன் திரும்பிப் பார்த்தால் தான் செல்வதையே கவனித்து வீதியில் நிற்கிற அன்பான உருவங்களைக் கண்டு மனம் உருகி மகிழும்படி வரும். வாங்கிய சாமான்கள் சரியானதுதானா என்று முன்பு பார்த்திருந்தாலுங்கூட மறுபடியும் திரும்பிப் பார்த்தால் அவற்றிலுள்ள பழுதுகளும் குறைவும் தெரியவரும். ஆற்றில் நீராடிப் புறப்படுகையில் திரும்பிப் பார்த்து சற்று யோசிப்பின் தான் பாதரக்ஷையையோ, ஒரு மூலையில் வைத்த பணத்தையோ, பாத்திரத்தையோ எதையோ மறந்துவிட்டுச் செல்வது தெரியும்.

ஃ

கடன் வைத்த தந்தை, கற்பு கெட்ட தாய், விசேஷ ரூபவதியான பாரியை, கல்வியற்ற மைந்தன் இந்நால்வரும் பகைவராவர்.

காலைப்பொழுது கிடைக்காதடா. காலைப்பொழுது தங்கமப்பா. இரவுப் பொழுது வெள்ளியப்பா. காலைக்கல்வி சிலையி லெழுத்தடா கண்ணே!

சென்ற நாட்கள் திரும்புவதில்லையெனினும், நீ அந்த நாட்களின் ஸம்பவங்களை அடிக்கடி திரும்பிப் பார். விசேஷித்த அநுபவ ஞானமணிகள் அந்த நாட்களிலிருந்தும் பொறுக்கிக் கொள்ளக் கிடைக்கும். சென்ற காலத்துச் சம்பவங்கள் வருங்காலத்துக்கு நல்ல படிப்பினையாகும். வீதியிற் செல்லுகையிலும் சற்று திரும்பிப் பார். உடனே சில விஷயங்கள் உனக்குத் தெரியவரலாம். வேகமாய் வருகிற ஒரு வண்டிக்கு நீ அந்த சமயம் அதிகமாய் ஒதுங்கவேண்டியிருப்பதை அறிவாய்; உன்னை எவரோ அழைப்பதையும் காணலாம்; அல்லது—உன்னைக் கண்டு பேச ஒருவர் ஓடியும் வரலாம்.

ஃ

வியாபாரத்திலும், உத்தியோக வகையிலும் பிறர் வயிறு எரியும்படி நீ அக்கிரமமாய் லாபம் அடைந்துவிடலாம். ஆனால், அவ்விதம் லாபமடைந்த குடும்பங்களின் பிற்கால கதியை நினைத்துக் கொண்டு, அந்த சங்கதிகளைக் கொஞ்சம் திரும்பிப் பார். விருத்தி என்பது சூன்யமாகிப் போயிருப்பதை அறிவாய். புத்திரி மலடியாக, குமாரன் சந்ததியற்றுவிட, சொத்துக்கள் தாயாதிகளுக்கும் பிறருக்கும் செலவழியவேண்டியதில் சிக்கிக்கொண்டு புலம்புவதையும் காண்பாய்.

ஃ

தான் ஆதரிக்க வேண்டியவர்களைக் கைவிட்டுவிட்டு அவர்களுக்குத் துரோகம் நினைப்பதில் அதன் பயன் யாதாகுமென்று உடனே திரும்பிப் பார். தான் சபித்தவர்கள் வாழ, தான் அன்பு வைத்தவர்கள் மாள, வாழக்கூடாதென்றோர்க்கே நாலு வாழ்வுங்கூடிவர, தன் தகாத நினைவுகளுக்கு இது தண்டனையாக முடிகின்றது.

ஃ

அவன் கெட்டுக் குட்டிச்சுவராகவேண்டுமென்று இவன் நினைக்க, இவன் கெட்டுக் குட்டிச்சுவராகவேண்டுமென்று அவன் நினைக்க, கடைசியில் திரும்பிப் பார்த்தால் இருவரும் குட்டிச்சுவரானதையே காண்கிறார்கள். இருவரில் ஒருவனாவது நல்ல நினைவின் பக்கம் திரும்பிப் பார்த்திருந்தால் கொஞ்சமாவது க்ஷேமப்பட்டிருக்கலாம்.

ஃ

நல்லோர் மனம் நோகும்படி, அவர்களின் ஆபத்திலோ பிணியிலோ தவிப்பிலோ அநுதாபமற்று அவர்கள் கதறிப் புலம்பும்படி நடக்க முற்படுபவர்கள் உடனே திரும்பிப் பார்க்கட்டும்.

அவர் வைத்த பிரியத்தின் ஆழம் இவ்வளவு தானா?—இந்தக் கூழுக்கா இத்தனை நாமம் என்ற கண்டுகொண்டு தெளிவு பிறந்து விட்டபிறகு மறுபடி சேர மனம் ஒன்ற படுவதில்லை; பழய யதார்த்தமும் பரிசுத்தமுமான அன்பை மீண்டும் காட்ட முடிகிறதில்லை. அத்துடன் அவ்வுறவு தொலைகிறது.

அவ்விதம் செய்தோர் குடும்பத்தோடு ஸர்வநாசமானதை நன்கு காண்பர். ஃ

கூட்டுவர்த்தகத்தில் ஒருவரை யொருவர் மோசம் செய்ய நினைக்குமுன் உடனே திரும்பி இதற்கு முன்பு நடந்தவைகளைப் பார்க்கட்டும். மோசம் செய்தவனின் குடும்பம் அடுத்த தலைமுறையில் விடியாதபடி போனதை அறியலாம். மோசக்காரனின் காலத்திலேயே நாசம் நேர்ந்திடலாம். ஃ

ஒருவனால் தனக்கு ஆகவேண்டிய காரியங்களைச் சாதித்துக் கொண்டு பிறகு அவனைக் கைவிட எண்ணுகையில் உடனே திரும்பிப் பார்க்கட்டும். அவ்வித துரோகம் செய்த பாபிகள் நல்ல வாழ்வு வாழவில்லையென்றும், நல்ல சாவு சாகவில்லையென்றும் காண்பர். அவர்கள்மடமடவென்று விருத்திபெற்று மழமழவென்று முறிந்து வீழ்ந்துவிடலாம். ஏமாறியவனின் கொதிப்பு ஒரு போதும் வீணாகாது. ஃ

"**வேண்டும்**"—"**வேண்டாம்**" என்று எழுதுவதிலும் உடனே திரும்பிப் பார். அனுப்பவேண்டும் என்பதற்கு **வேண்டாம்** என்றும், **புறப்படவேண்டாம்** என்பதற்கு **வேண்டும்** என்றும் உன் கையே தவறுதலாய் எழுதியிருப்பதை அறிவாய். இவ்விதமே தபாலுக்கு அனுப்புமுன் கடிதங்களை உடனே திரும்பிப் பார். நீ புத்திசாலியாயினும் எழுத்துப் பிழையாவது இருக்கும். விஷயப் பிழையும் கண்டுணர அது ஒரு உதவி. சில சமயம் அக்கடிதத்தைத் தபாலுக்கு அனுப்பவேண்டாமே யென்றுகூட உன் மனதிற்குத் தோன்றிவிடும்; அனுப்பாமற் போனதே பிறகு நல்லதாகியும் விடலாம். ஃ

மாற்றாந்தாயின் வசமான உன் தந்தைக்கு நீ கொடுத்து வரும் பணஉதவியை நிறுத்திவிடலாம். ஆனால், உடனே திரும்பிப் பார். அதன் காரணமாக உன் தந்தை உன் பகைவனாகி உனக்குச் சேரவேண்டிய சொத்துக்களையும் வேறொருவர்க்காக்கி வெகு கெடுதிகள் செய்யத் தயாராகிவிடலாம். இவ்விதமே, உன் மனைவியை நீக்கிவிட நினைக்கிறபோதும் திரும்பிப் பார். உன் நினைவுக்கு உன் குழந்தைகள் ஒப்பாரென்பதையும், மனைவியில்லாத வீடு மங்கள விருத்தி தாராதென்பதையும் உன் அறிவு உனக்கு எடுத்துக்காட்டும்.

ஃ

☞ உத்தமனான தந்தைக்குதித்த மக்கள் தீயோராவது கூடுமாயினும், உத்தமத் தாய்க்குப் பிறந்தவர்கள் துஷ்டர்களாவது அபூர்வ ஸம்பவம்.

ஒரு பெண் வாழ்வதைக் கெடுக்க முயல்பவன் பாவியிலும் பாவி. அவன் தன் பெண் வாழாமற்போவதைத் தன் கண்ணாலேயே காண்பான்.

"அவர்கள்" வேற்றுமைப்பட்டு வேறுவிதமானார்களென்று நீயும் வேற்றுமைப்படுகிறாய். அதில் நீ உடனே திரும்பிப் பார். அவர்கள் உண்மையாகவே வேற்றுமைப்பட்டிருந்தாலும், அவ்விதம் படாததுபோல் நடித்துக்காட்டி, நீயே வேற்றுமைப்படுவது போலத் தெரிவித்து,—உன் மனதில் வித்தியாசமில்லாவிட்டால் இங்கும் வித்தியாசமில்லைதான்; உன் மனதில் பேதம் ஏற்பட்டால் இங்கும் பேதம் தான்,—என்று சொல்லிக் காட்டுகிறார்கள். அவர்கள் போகிற தந்திரத்தைப்போல், நீயும் பேதப்படாதவன் போலவும், அப்படியே அவர்களையும் பேதப்படாதவர்கள் என்று நீ அறிகிறது போலவும் காட்டிக்கொண்டு அவர்களைத் தழுவி நின்றபடியே தாளம் கொட்டுவதுதான் பதிலுக்குப் பதில் செய்யும் சாமர்த்தியமாகும்.

ஃ

உன் வீட்டுக்குக் குடிவந்தவர்கள் உன்னை மீறிப் பேசினால், அவர்களை நீ பதிலுக்குப் பதில் எதிர்ப்பதை நிறுத்திக்கொண்டு உடனே நீ திரும்பிப் பார். அவர்கள் உன் மாமிக்கு நல்லவர்கள் போல் நடந்துகொண்டு, உன் மாமி கொடுத்த பலத்தால் உன்னை மீறிப் பேசினார்கள் என்று கண்டுகொள்வாய். பிறகு நீ செய்வதென்ன? உன் மாமிக்கு நீ நல்லவளாக நடந்துகொள்ள முயன்று அந்த பலத்தைத் தேடிக்கொண்டால் உன்னை எதிர்த்த சண்டாளர்களைச் சீக்கிரம் வெளியில் துரத்திவிடலாம். நீ புத்திசாலியாக இருந்தால்மட்டுமே சாதுர்யமான இப்பாதையில் நடந்து கலகம் சண்டை ஏதுமில்லாமல் வெற்றிகொள்ள முடியும். நீ அறிவு கெட்டவளானால் உன் மாமியையும் கணவனையும் எதிர்த்துக்கொண்டு, வீட்டில் குடியிருப்பவர்களையும் எதிர்த்துக்கொண்டு தொல்லைப்பட நேரும்.

ஃ

எப்பொழுதும் எந்தக் காரியத்திலும் தொடங்குமுன்பும், முடிந்த பின்பும் உடனே திரும்பிப் பார். அதில் பல பிழைகளைச் சீர்திருத்த முடியும். விவாகம் முதலிய பெரிய காரியங்களிலும் உடனே திரும்பிப் பார். இன்னும் அலசிப்பார்த்து நிதானிக்கவேண்டிய சங்கதிகள் உனக்குத் தோற்றும். நீ விலக்கிவிட எண்ணும் நண்பர், உறவினர், பின்னும் பலரது விஷயத்திலும் உடனே திரும்பிப் பார். விலக்கியவரே பிறகு உதவுபவராகலாம். எவனை உண்மையானவன் என்று நம்புகிறாயோ அவனையும் உடனே திரும்பிப் பார். உன்னை மயக்குகிற கபட மனிதனாகவும் அந்த உண்மை ஆள் இருக்கலாம். பகவத் தரிசனத்திலும் மற்றொருமுறை திரும்பிப் பார். இதுவரை சேவித்ததைவிட பகவானுடைய உருவம் இன்னும் அதிக அழகாக

உண்மையாக உழைக்கும் சந்திர சூரியர்களுக்குத்தான் கிரகண பீடைகள் சம்பவிக்கின்றன. எந்த உதவியும் செய்யாது அழகுக்கு மட்டும் இரவில் வானத்தில் தோன்றும் நக்ஷத்திரங்களை எந்த கிரகணமும் பிடிக்கக் காணோம்.

வும் தேஜஸுடனும் தோன்றும். நீ ஜெபித்து முடிந்தபிறகுங் கூட மறுபடியொருமுறை திரும்பி ஜெபித்துப் பார். அதில் மிகுந்த பக்திப் பரவசம் காண்பாய். முடியாத எந்த வேலையிலும் மறுபடியும் திருப்பிப் பார். அதை முடித்துவிடப் புதிய ஆற்றல் தோன்றும். ஒழுங்குபட்டுவராத கவியையும், வியாசத்தையும் அப்படியே விட்டுவிட்டு மறுநாள் திரும்பிப் பார். அழகுடன் அமைக்கும் வழி தெரிந்துவிடும். முத்தமிட்டபிறகும் உடனே திரும்பிப் பார். மீண்டும் முத்தங் கொடுத்து மீறின இன்பம் கொள்ள முடியும். ஆநந்த உருவின் தரிசனத்தை அடுத்தடுத்துத் திரும்பிப் பார். எல்லையற்ற பரவசம் கண்டு மறுபடியும் அதில் குதிப்பாய். வராத பாடத்தையோ முயற்சியையோ மீண்டும் திரும்பிப் பார். சீக்கிரம் அதனில் வெற்றி பெறுவாய். எப்பொழுதும் திரும்பிப் பார்த்து நிதான சீலனுகுக. ஜெயவீரனுய் விளங்குக.

இன்ஷியூரன்ஸில் சேருதல்.

ஒவ்வொருவரும் தமது ஜீவிய காலத்திற்குப்பின் தமது குடும்ப க்ஷேமத்திற்கு ஒரு நிதி சேர்த்து வைப்பது அவசியந்தான். அதற்கு இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் சேருவதும் முக்கியம்தான். ஆனல், பல இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் கிளம்பி யிருக்கின்றன. இதில் எந்த இன்ஷியூரன்ஸ் கம்பெனி படுத்துக்கொண்டு ஊராரின் வாயில் மண்ணைப் போடுமோவென்ற கவலையும் ஒருபக்கம் இல்லாமலில்லை. இன்ஷியூரன்ஸின் ஏஜண்டுக்கு வேலையும்கொஞ்சமே. முதலில் எப்படியாவது ஒருவனை இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் சேர்த்துவிட்டால் பிறகு ஏஜண்டுக்குக் கவலையே இல்லை. பிறகு தொடர்ந்து பணம் செலுத்திவரவேண்டியதானது சேர்ந்துகொண்டவனின் தலைஎழுத்து. அவன்பணம் செலுத்தாவிடிலோ அதுவரையில் போட்ட பணம் போனது போனதே. அதைப்பற்றி ஏஜண்டும் கவலைப்படார். அது அவரது வேலையுமல்ல. இன்ஷியூரன்ஸில் சேர்ந்தவர்கள் எக்கேடு கெடினும் அதற்கு அவர் விசாரப்படப்போவதுமில்லை. ஏஜண்டு என்ன மாமனுமைத்துனனு நமக்காக வருத்தப்பட?

என்னல் இங்கு இருக்கமுடியாது, என்தாய் வீட்டுக்குப் போய் விடுகிறேன் என்று சொல்லும் பெண்ணை அவன் பிரியப்படி போகவிட்டு விட்டால்தான்—பிறகு புத்திதிருத்தி கணவன் வீட்டு அருமையும் தெரியும்.



கடன்பட்டுக் கலங்கியவரின் கண்ணீர்.

"உள்ளதே போதுமென உள்ளநிறை வில்லாதிங்
குழன்ற தாலே,
விள்ளவே மிகநாளும் விதமான தொருநிலைமை
மேவி னேனே!
தெள்ளறிவால் பின்விளைவைத் தேராதே, பணத்திமிரால்
செருக்கி னேனே!
எள்ளவே இடறுதும் இந்நிலைமை எய்தியவாறு
என்னே! என்னே!! (1)

குடியனலேன் வெறியனலேன் கூத்தியிலேன்
இழிநேசர்க் கொண்டு மில்லேன்
நெடியபகை வழக்காடி நின்றும்லேன்
அறமென்றும் நினைக்கி லாத
கொடியனலேன் வரைவமிஞ்சிக் கொழுத்தசில
வியற்றுமொரு துணையு மல்லேன்
அடிமையலேன் பிறரெவர்க்கும்; ஆயினுமின்(று)
எய்தியஎன் அல்லல் என்னே! (2)

ஏலத்தில் குறைந்தவிலைக் கெய்தியநன்
னிலங்களையான் எய்த எண்ணி,
ஞாலத்திற் புகழ்பெறவே நன்மனைகள்
பலகட்டி நற்கிராக்கிக்
காலத்திற் பொருள்குவிக்கக் கருதிபல
ரிடமன்று கடன்பட்டேன்: அம்
மூலத்தில் வட்டியென மொழிதொகையே
பெருநெருப்பாய் மூண்ட தந்தோ! (3)

என்னிடம்முன் கடன்பட்டார் ஈந்திடுமப்
பொருள்கொண்டும், ஈராண்டுக்குள்
நன்னிலங்கள் விளைவதனால் நன்றுபெறும்
பொருள்கொண்டும், நவின்றதொல்லை
என்றுமந்த கடனொழிக்க எண்ணியிருந்
தேனந்தோ! ஏமாந்தேனே!
பன்றுமந்த இருவழியிற் பயன்பெரிதும்
கிடைக்கவில்லை பாவியேற்கே! (4)

கிடைத்தசிறு தொகையை வட்டி கேடுறவே
விழுங்கியது :என் கீர்த்தியெல்லாம்
படித்ததொரு பழங்கதையாய்ப் பறந்ததையோ !
தொடர்வழக்குப் பலவும் மன்றம்
அடுத்தனவே ; கடனடைக்க அறிகிலனே
ஒருவழியை ; அந்தோ ! யானும்
எடுத்தனனே 'இன்சால்வெண்ட்' எனும்பெயரை
மதிப்பையெலாம் இழந்தேனின்றே ! (5)

மனைவியோ பழிக்கின்றள் : மைந்தர்க்குப் பிற்காலம்
வழங்க லென்னே ?
எனைகனவா றய்ப்பிறநம் எண்ணிமதித்
திருந்ததினம் ஏகிற்றையோ !
மனையிலோ இன்பமில! மடஅசட்டுத்
துணிவாலே வந்ததேஇவ்
வினையிதே பெருந்துயராய் விளைந்ததையோ !
என்செய்கேன் ? வினையினேனே ! (6)

ஆரியூர் - வ. பதுமநாப பிள்ளை.

[*கடன் வாங்குகையில் அதைத் தீர்த்துவிட ஒரு உத்தேசத்தை நாம் கொள்கிறோம். அந்த உத்தேசம் நிறைவேறிவிட்டால் கடனை ஒழித்து செல்வமும் மதிப்பும் பெறுகிறோம். அந்த உத்தேசம் பூர்த்தியாகாது போயினே, நாம் எண்ணியதனைத்தும் வீணாகிக் கடனும் தீராது கைவசம் இருந்ததுந் தொலைந்து மானமழிந்து மதிகெட்டு இழிநிலை காண நேர்கின்றது.* ப - ர்.]

II

ஓடு–நீரில் ஆடுக நீயே.

தாய் :— ஆணும் பெண்ணும் அணிஅணி எனவே
பானையுங் குடமும் பக்கத் திருத்தி
தோளில் சுமைதுணி தொங்கிக் கிடக்க
நாளும் போதல் நோக்காய் மகனே !

குழந்தை :— எங்கே அவர்கள் ஏகுறூர் அம்மா ?
ஊரில் என்ன ? ஓடுவது எதற்கோ ?

தாய் :— ஒன்றும் இல்லை ஊரில் கண்ணே !
காலையில் எழுந்து கனிவுடன் அவர்கள்
சாலை வழியே சடுதியிற் சென்று
ஆற்றிற் குளிக்க அடைகுவர் இவ்வழி.

குழந்தை :— குளித்தல் ஏனே ? கூறுவீர் அம்மா !

தாய் :— அருமைக் கண்ணே ! அறிவுடைக் கேள்வி
நன்றே கேட்டாய் நவில்வேன் யானும்.
சுத்தம் சோறெனச் சொன்னர் பெரியர்

சுத்தமா யிருத்தல் மேத்தவும் மேலாம்
சிக்குஞ் சிரங்கும் நீக்க முற்றுல்
நீயே ராஜா ! நோயும் பாயும்
நொடியில் மறைய இதுவொரு வழியாம்.

குழந்தை :—நதியுள வழியோ நாழிகை தூரம்;
விடியற் காலம் வீட்டிற் குளிக்க
முடிவது கடிதோ ?

தாய் :— கடிதில்லை மகனே !
காலையில் நடத்தல் சாலவும் நன்று;
துயிலும் போது பயிலா உருப்பு
பயிலப் பெற்று பலனைப் பெறும்
பெற்ற பலத்தால் சற்றுங் குறையா
சீரண முண்டாம், செவ்வனே இருப்பாய்
நடத்தலில் இல்லை நஷ்டம். ஆனுல்,
படித்தவர் தம்முடன் *பண்டிதர் பலரும்
பன்முறை பகரும் மந்திரம் யாதெனில்,
“சுகம்பெற எண்ணில் இதமுடன் நீவீர்
குளிர்ந்த நீரில் குளித்திட வேண்டும்;”
இரவெலாம் வேதும்பும் பரவெளி நீரோ
பருதி வருமுன் குளிர்ந்தே இருக்கும்
கண்ணுக் கெட்டா நுண்ணிய கிருமிகள்
தண்ணீர்க் குளிர்ச்சியால் தரையில் பதுங்கும்
அப்போது குளித்தல் தப்பா முறையே
ஆகையால், ஆற்றிற் குளித்தல் போற்றற் பாலதே.

குழந்தை :—குளந்தனில் குளித்தலும் கொடிதோ அம்ம ?
குளிர்ந்த நீரே குளத்தில் இலையோ ?

தாய் :— ஓடும் நீரை ஓர்குழி தன்னில்
தேக்கியே வைத்துத் தினமும் குளிப்பர்
நோக்கில் அதிலே சாக்கடைச் சரக்கும்
சாணியும் சகதியும் காணக் கிடக்கும்
ஆட்டையும் அதிலே மாட்டையும் அதிலே
கேட்டை விளைக்கும் கசடர் கழுவுவர்.
அழுகச் சிரங்கும் அரிக்குஞ் சொரியும்
பற்றுமே யாரையும் படைப்படை ஆகவே.


குழந்தை :—அம்மா ! வேண்டாம் அசுத்தக் குளமே,
சும்மா யிருப்பேன் சுகமாய் அதைவிட,
நதியிற் குளித்தல் நலந்தரு மாயின்
மதிகுண அம்மா! வருவேன் உடனே.

சி. ராமசுப்பிரமணியன்.

* வைத்தியர்.

அடக்கமுடைமை

" அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும்."



புத்திமான் பெரிய அரசன். அவனுக்குத் தன்னுள்ளேயே ஒரு ராஜ்யமுண்டு ;—அறிவு ஆள்பவனாகிச் சிங்காதனத்தின்மேல் வீற்றிருந்து செங்கோலைச் செலுத்தும். அவனுடைய அந்தக்கரணங்களெல்லாம் வணக்கமுள்ள ஏவலாளர்களைப்போல் அவனைப் பணியும். அந்த ராஜ்யம் சிறியதும், ஒடுக்கமுள்ளதுமாகக் காணப்பட்டாலும் அதின் அரசன் மிகுந்த செல்வாக்கும் ராஜரீகமுமுள்ளவனாகிச் சக்கரவர்த்தியிலும் மேலாவான். அந்தக்கரணத்துக்கும் அறிவுக்கும் ஒற்றுமையின்றி என்றைக்கும் நம்முள் ஊர்க் கலகம்போலச் சண்டை நடந்துகொண்டே யிருக்கும். இவ்விரண்டினுள் எது மேற்கொள்ளுமோ அதற்குத் தக்கபடிதான் நாம் நல்லோராவதும் தீயோராவதும் இருக்கும். நாம் இந்திரிய நிக்கிரகஞ் செய்து, அதை அறிவோடு இணங்கச்செய்ய வல்லோமாயின், அதைப்போலப் பேரானந்தம் வேறொன்றிலு மில்லை. பகைவரது கூறிய அம்பினும், அடங்காப் புலன்களே கொடியனவாம். அவற்றிற்கு நாம் ஆட்பட்டிருத்தலானது பகைவரிட்ட கைவிலங்கினுங் கொடியது. தன்னைக் குடிகெடுக்கும் நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின் அதனினும் அபாயம் வேறில்லை. இயற்கையிற் சினமுள்ள ஒருவன் எப்பொழுதும் சான்றோரினத் திருத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதினால் அவன் எளிதில் நற்குணமுள்ளவனாகலாம்; ஸகவாஸமானது மிகவும் முக்கியமானது; அதனால் ஒழுக்கமும் குணமும் மாத்திரமல்ல; நமது விருப்பமும் நம்மை யறியாமலே சீர்படும். தன்னை யடக்கி ஆள்பவன் இவ்வுலகத்தையும் ஆள்கிறான் ; நாம் மற்றவர்களை அடக்கி ஆள்வதிலும், நம்மையே அதிகமாக அடக்கி ஆளவேண்டும்.

" நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன் ?—நின்னை
அறப்பெறு கிற்பேனேற் பெற்றேன்மற் றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்."

பிறரிழைத்த சிறுபிழைகளை எண்ணாமல் மறப்பதே நன்று; அவற்றை மறப்பதினால் உயர்ந்தோராவோம்; மறவாமல் தீங்கு செய்தவர்க்குத் தீங்கிழைப் போமாயின் அவரினும் இழிந்தோ ராகவேண்டும்.

நமக்குப் பக்கத்துத் துணையாக இருப்பானென்று ஒருவனை நம்முடன் சேர்த்துவைக்கப் போக, அவனே நமது பலஹீனத்தையும் கேவலத்தையும் அறிந்துகொண்டு நம்மையே எதிர்க்கவும் அலக்ஷியம் செய்யவும் தொடங்கி விடுகிறான். அதுமுதல் நமது சங்கதிகளை அவனுக்கு மறைக்க நேர்கின்றது.

" அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை."

சினமானது மனதிற்குள்ளே உண்டாகிற ஓர்வகையான ஜ்வரமாம். ஜ்வரம் நீங்கியபின்பு துர்ப்பல முண்டாவதுபோலவே, சினங்கொண்டவர்களுக்கும் அது நீங்கினபின்பு தேகத்தில் பலக்குறைவுண்டாகும். இந்திரியங்களையெல்லாம் ஒருங்கே அடக்கி ஆள்வது சிலருக்கு அதிக வருத்தமாதலால், அவர்கள் அவற்றை ஒருவாறு சாந்தப்படுத்தவேனும் முயல்வது நன்று.

மிகைபடக் கூறும்படி வழக்கப்பட லாகாது. நமது நாவினின்றும் வார்த்தைகள் வெளிப்படுமுன்னமே ஆராய்ந்து பார்த்து அறிந்து சொல்ல வேண்டும். முன்னதாக யோசித்துப் பாராவிடில் பின்பு வார்த்தைகள் நமது நாவினின்றும் பதறி வெளிப்படாதிரா.

" காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்—ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து."

நமது சினம் செல்லு மிடமுண்டு; செல்லாத இடமுமுண்டு; நம்மினும் மேலானோரைச் சினந்துகொள்ளுதல் புத்தியீனம்; கீழானோரிடத்தில் கோபத்தைச் செலுத்துதல் இழிவாகும்.

" செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என்?"

அறிவினும் இந்திரியங்களே முற்பிறந்தவை; நாம் பிறக்கும்போதே இந்திரியங்கள் நம்மோடுகூடப் பிறக்கின்றன; நாம் அறிவுடையாதற்குப் பிறந்து சிலகாலம் செல்லுகிறது. இந்திரியங்களை அவற்றின் போக்கின்படி விடாமல், அடக்கிக்கொள்ளவேண்டும். ஒரு கோட்டையைப் பிடித்துக் கொள்ளுவதிலும், கரணங்களை யெல்லாம் நமது வசமாக்கிக் கொள்ளுதலே சிறந்தது. பிரமாணஞ்செய்து நாவைக் கெடுத்துக்கொள்ளாமலும், பகவானுடைய நாமத்தை வீணில் வழங்காமலும் இருத்தல் வேண்டும். ஹேல் என்னும் நியாயாதிபதி, " ஆசையற்றவனே தனிகன்; தன்னைத் தானடங்கப் பெற்றவனே பெரியோன்; மரணத்தை ஆநந்தத்தோடு எதிர்பார்ப்பவனே சந்தோஷமுள்ளவன்; மற்றவைகளைப்பற்றியோவெனில் நான் கவலைப்படேன்; மேற்சொன்ன மூன்றனுள் முற்கூறிய இரண்டைப்பற்றிக்கூட நான் அத்தனை கவலைப்படேன்; மூன்றாவதைப்பற்றி எவ்வளவு கவலை வைத்திருந்தாலுந் தகும்" என்று சொல்லுகிறார். கோபம் வரும்போதே அதை வேரோடு களைந்துவிடவேண்டும். ஆரம்பத்தில் அப்படிச் செய்யாவிட்டால், அது வேர்க்கொண்டு விருத்தியாகி, ஆதியில் நகத்தாற் கிள்ளி எறிவதைப் பின்பு

மூத்தாள் பிள்ளைக்கு ஜலம் கொடுத்து வளர்ப்பது. தன் பிள்ளைக்கோ பால் கொடுத்து வளர்ப்பது. இந்த மாற்றாந்தாய்க் கொடுமையை அந்த மூடத் தந்தை கவனிக்கவும்—நினைக்கவும் நேரமேது? அந்த மங்கையின் மோக மயக்கிலேயே அவன் சிந்தை. பெற்ற தாய் போனால் பெற்ற அப்பன் சிற்றப்பன்.

கோடரி கொண்டு வெட்டுவதுபோலாகும். எவ்விடத்தில் அறிவும் நீதியும் ஆள்கின்றனவோ, அங்கே அமைதியும் ஸமாதானமும் பல்கிப் பெருகும்; அடக்கமுள்ளவர்களிடத்தில் ஸதா ஆநந்தங் குடிகொண்டிருக்கும்.

மிதமான செல்வமும் பெருந்தன்மையு மிருந்தால், அவ்விடத்தில் அச்சமாவது பொறாமையாவது கொஞ்சமேனு மிராது. இப்படி வாழ்ந்திருத்தலே இன்புற்று வாழ்ந்திருத்தல் என்று சொல்லப்படும். பொல்லாங்கிழைத்தற்காக அதிகாரத்தை வகிக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் சிலரே. அடக்கமான மனசாக்ஷியும், கபடமற்றதும் உருக்கமுடையதுமான மனமுமே தேவை.

நம்மிடத்தில் இவ்வுலக இன்ப இச்சை குடிகொண்டிருந்தால், அது காரணமாகத் தெய்வபக்தி குன்றிப்போம்; ஆதலால், நாம் இவ்வுலக இன்பத்தைத் துறந்து பகவானுடைய கிருபைக்குப் பாத்திராகும்படிப் பார்க்கவேண்டும். பகவத் தரிசன இன்பம் என்றைக்கும் அழிவற்றது; ஈசுவர கடாக்ஷமிருந்தால் அது ஏழுவகையான விஷநோய்க்கு மருந்தாகும்:—(1) புல்லறிவைப்போக்கி ஞானத்தைத் தரும்; (2) சோம்பலைக் கொன்று பகுத்தறிவை நுட்பமாக்கும்; (3) மறதியைப் போக்கி ஞாபகசக்தியை நிலைநிறுத்தும். (4) அச்சத்தை அகற்றி ஆண்மையைத் தரும்; (5) பேதமையை நீக்கி அறிவைப் பெருக்கும்; (6) தெய்வநிந்தையைப் போக்கி பக்தியைத் தரும்; (7) வீண் பெருமையை ஒழித்து விநயந் தரும்.

பிறர் செய்யும் நிந்தனைக்காகக் கிலேசப்பட லாகாது. தான் எவ்வித குற்றமும் செய்யாதிருந்தும் மற்றவர் தன்னை அபாண்டமாகத் தூஷித்தால் அதனைத் தெய்வம் பார்த்துக்கொள்ளட்டுமென்று விட்டுவிடுவதே தக்கது. யாரென்ன நிந்தித்தாலும் மவுனமாய்ப் பொறுத்திருத்தலே நன்று.

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தந்
தகுதியான் வென்று விடல்."

தெய்வஸங்கல்பத்துக்கு மாறாக ஒன்றும் நடவாது. நம்மைப் படைத்த கடவுள் நமக்குச் செய்யவேண்டியவற்றையெல்லாம் அறிந்திருக்கிறார். ஒவ்வொருவருடைய நிலைமையையும் நன்றாய்ச் சீர்தூக்கிப் பார்த்தால் ஒருவரைப் போலவே எல்லாருடைய நிலைமைகளும் நல்லதாகவே இருக்கும். அவரவர் நிலைக்கு அதது பொருந்தி சரிப்பட்டுப்போயிருக்கும்.

நற்குணங்கள் பலவற்றுள்ளும் நாவடக்கம் மேலானது. நாம் நாவடக்கமுள்ளவர்களா யிருந்தால், நமது குற்றம் வெளிப்படாமல்—மற்றவர்களுடைய குற்றங்களை அறிவது எளிதாகும். நாம் பெரியோருடைய அநுஷ்டானத்தை

ஸ்திரீ—புருஷ சம்பந்தவிஷயமே ஒரு மனிதனை அதிக ஆராய்ச்சியுள்ளவனாகவும்; தேர்ந்த அறிவாளியாகவும் ஆக்குகிறது. அந்த சம்பந்தத்திற்கு முன் அதனை அறிந்துகொள்வதற்காக எத்தனையோ மறைக்கும் திரைகளையெல்லாம் அவன் தாண்டி வெகுவேகமாக அந்த ஸ்வர்க்கத்தைக் காணப் போகிறான்.

அநுஷ்டிக்கையில், குற்றமுள்ளவற்றை நீக்கிக் குணமானவைகளைமட்டுமே கொள்ளவேண்டும். யாரும் சினத்தைப் பொருளென்று கொள்ள லாகாது.

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று."

ப்ளோடோ என்னும் வித்வான், கோபமுள்ளவர்கள் தலைகீழாய் நிற்பவர்களைப்போலே இருக்கிறார்களென்றும், அவர்களுக்குத் தங்களைப்போலவே எல்லாம் விபரீதமாய்த் தலைகீழாகக் காணப்படுமென்றும் சொல்லியிருக்கிறார். தலை கீழும் கால் மேலுமாய் நிற்பவர்களுக்கு எல்லாந் தலைகீழாய்த் தோன்றும் வண்ணமே, கோபமுள்ளவர்களுக்கும் எல்லாம் மாறாகவே தோற்றும். கோபம் சிலகாலங்களில் மட்டும் நம்மண்டை வருகிறதுண்டு; ஆனால், உண்மை என்னவெனில், அடிக்கடி நாமே அந்தக் கோபத்தை வலிய வரவழைத்துக்கொண்டு அவதிப்படுகிறோம். கோபத்தை விட்டவனுக்கே அடக்கமானகுணம் கைகூடும்.

"அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து—பொறுவதினால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது."

எல்லாருக்கும் கும்பிடு போடு!

போடு! போடு! போடு! எல்லாருக்குமே கும்பிடு போடு! இதில்தான் இருக்கிறது வசிய சங்கதி! ஒரு வீட்டில் நுழைந்தால் ஒருவரிடம் நேசம், ஒருவரிடம் பகை என்று வைத்துக்கொள்வது சாமர்த்திய மாகாது. எல்லோரிடமும் க்ஷேமம் கேட்டு, எல்லோருக்கும் பல்லிளித்து, எல்லோருக்கும் கும்பிடு கோவிந்தம் போட்டு, எல்லோரும் விரும்பும்படி நின்று, நடுவே தன் காரியத்தைப் பார்த்துக் கொண்டு நழுவுவதே சாமர்த்தியமாகும். கோபமே வரக் கூடாது. சிரித்துக்கொண்டே ஒதுங்கியிருந்து எவரிடமும் நல்ல பெயர் பெறுவதே பெரிய ஜெகஜால சித்துவேலை.

வைத்த சுமையெல்லாம் தாங்குகிற குடும்பத் தலைவர்கள் சிலருண்டு. பொறுமையைப்பற்றி இவர்களிடம் வெகு நன்றாகப் பாடம் கேட்கலாம்.

மலப்பிரவர்த்திக்கான குறிகள் தோன்றிவிட்டபோது அதை சமாளித்துக்கொண்டு உட்கார்ந்தபடியே ஒரு பெரிய யோசனை செய்யப்புகின் புத்தி அந்த யோசனையிற் பாய்வதில்லையாம்.

பழமொழிக் குறிப்புகள்

3. இல்லறம்.

(469-ம் பக்கத் தொடர்ச்சி.)

207. "நல்ல மாட்டிற்கு ஒரு அடி, நல்ல பெண்ணுக்கு ஒரு சொல்."

இது ஒரு அழகான பழமொழி. இவ்விதமாக மாடும், மனைவியும் கிடைக்கப் பூர்வ புண்ணியம் இருந்தாலன்றி முடியாது. சில மாடுகள் வண்டியை ஓட்ட ஆரம்பித்ததும் வேகமாகப்போவதே அதன் சுபாவம். அத்தகைய மாடுகளின்மீது ஒரு அடி விழுந்ததும் மிக்க ரோஷங்கொண்டு இன்னும் வேகமாகச் செல்வதும், போய்ச் சேருகிறவரையில் அளவுமீறிய வேகத்துடன் ஓடுவதும் வழக்கம். அதற்கு இரண்டாவது அடி தேவையில்லை. அவ்விதமே நல்ல பெண்ணுக்கு என்றுவது ஒருநாள் புருஷன் சிடுசிடுத்து ஒரு சொல் சொல்லிவிட்டால் போதும். அந்த வார்த்தையிலிருந்து அவனுடைய ஸ்வபாவத்தைக் கிரகித்துக்கொண்டுஇனி அவன் குற்றஞ் சொல்வதற்கு இடமில்லாத பாதையில் நடந்துசெல்வாள். இன்னாரிடத்தில் நீ பேசக்கூடாது என்று கணவன் கண்டித்தால் அதுமுதல் அவரிடத்தில் பேச்சு வார்த்தைகள் எதுவும் வைத்துக் கொள்ளமாட்டாள். பிறகு ஒருகாலம் கணவனே அந்த மனிதரோடு நேசமாய்ப் பழகிப்போவதாயிருந்தாலும், தான்மட்டும் தனியாக ஒதுங்கிக்கொள்வாள். சம்சாரவாழ்க்கையில் கணவன் ஏதாவது ஒன்று சொல்லியிருப்பின், அவன் மறுபடியும் அதைத் திருப்பிச்சொல்ல வழியின்றி

நம்பிக்கை யுள்ள வேலையாளின் மடியிலிருந்து தன் மனைவியின் கம்மல்,மூக்குத்தி முதலிய நகைகள் கீழேவிழ,அதை அவன் பயத்துடன் எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொள்கிறான். அதை எஜமானன் கண்டு அவனை அடித்துத் திருட்டுப் பயலே என்கிறார். வீட்டு எஜமானி ஸ்நானம் செய்யப் போகையில் அவனிடம் கொடுத்துச் சென்றதாய்ப் பிறகு தெரியவர, எஜமானர் வீணே யடித்ததற்கு நாணுகிறார். சந்தேகிக்கப்பட்டோர் நிரபராதிகளா யிருப்பது முண்டு.

குடும்பப் பாதுகாப்பில் கவலையற்றவர்களுக்கு அரிசி விறகு என்ன விலைக்கு விற்கிறதென்றுகூடத் தெரியாது. இலையில் உட்காரவே தெரியும்.

நடந்துகொள்வாள். இதைக்குறித்து ஒரு சிறுகதையும் உண்டு. மிக்க அன்னியோன்னியமான தம்பதிகள் வெகுகாலம்வரையில் சுகமாக வாழ்ந்துவந்தார்கள். இருவருக்கும் விவாகம் நடந்த ஆரம்பத்தில் பர்த்தா தனது பத்தினியைப் பார்த்துச் சாதம் புசிக்கையில் ஒரு கிண்ணத்தில் சிறிது ஜலமும் ஒரு ஊசியும் போட்டுப் பக்கத்தில் வை என்று சொன்னார். அவ்விதமே அந்த மனைவி ஒவ்வொருதடவையும் ஊசியும் ஜலமும் பக்கத்தில் வைத்து வந்தாள். இவ்விதம் வெகுகாலம் நடந்துவந்தது. புண்ணியவதிக்குப் புருஷனின் முன்பாக மரணம் என்பதுபோல இந்த உத்தம மனையாளும் வியாதிக்குட்பட்டுக் கடவுளிடம் சேரவேண்டிய காலம் வந்தது. அப்பொழுது தனது பிரிய பர்த்தாவை நோக்கி, "என் மனதில் நெடுங்காலமாக ஒருசந்தேகமுண்டு; ஆனால், அதைக் கேட்க எனக்குத் தைரியம் உண்டாகவில்லை; தங்களின் உத்தரவுப்படி நடக்கவேண்டியது என் கடமையே தவிர, அது எதற்கு என்று கேள்வி கேட்பது எனக்குத் தகாது; ஆதலின், தங்களை இதுவரையில் அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை; எனினும் அதைத்தெரிந்துகொண்டாலன்றி நான் நிம்மதியாய்ப் பிராணனை விட முடியாது" என்றாள். அதற்குப் பர்த்தா, "என் பிரியமான துணைவியே! நீ எதைக் கேட்க விரும்புகிறாய் சொல்" என்றார். அதற்கு அந்தக் குணவதி, தாங்கள் புசிக்கையில் ஒரு கிண்ணத்தில் ஜலமும் ஊசியும் போட்டு வைக்கும்படி தெரிவித்தீர்கள்; அவ்விதமே நானும் கால முழுதும் செய்துவந்தேன்; என்றைக்காவது அந்த ஜலத்தையேனும் ஊசியையேனும் தாங்கள் எடுத்து உபயோகிக்கவேயில்லை; அவ்விதமிருக்க எதற்காக அவ்விதம் எடுத்து வைக்கச் சொன்னீர்களென்று தங்களைக் கேட்க என் எண்ணம்; ஆனால், கேட்க என் மனம் தைரியப்படவில்லை; இப்போது அதைத் தெரிவிக்கவேண்டும்" என்றாள். அதைக் கேட்ட பர்த்தா கண்ணீருடன், என் இனிய பெண்ணரசே! இலையில் சாதம் பரிமாறுகையில் கீழே ஏதேனும் சாதம் சிந்தினால் அதை ஊசியால் குத்தி எடுத்து ஜலத்தில் சுத்தி செய்து இலையில் போட்டுக்கொள்ளவே ஊசியும் ஜலமும் பக்கத்தில் வைக்கும்படி கூறினேன்; உன் வாழ்நாளில் நீ அன்னம் பரிமாறுகையில் ஒரு சாதமாவது கீழே சிந்தாதபடி அவ்வளவு ஜாக்கிரதையும் பயபக்தியுமாக நடந்து

௴

வெகுதூரம் வந்தபின் பணப்பையின் ஞாபகம் வந்து மறுபடி சென்று எடுத்துவரல். அதற்குள் ரயில் தவறிவிடுதல். நெடுநேரம் காத்து வேறு வண்டி ஏறி ஊர் சேர, அங்கு தானே தடுக்கிவிழுந்து கைக்கெடியாரம் ஒடிதல். பிறகு வீட்டிற்குப் போக வீடு பூட்டப்பட்டு வீட்டார் ஒரு விவாகத்திற்குப் போயிருப்பதாகஅறிதல். பிறகு விவாக வீட்டிற்குச்சென்று அலைதல். இவ்விதமாக முதல்கோணல் முற்றும் கோணலாகிறது.

சிலர் இதோ எட்டு மணிக்குச் சரியாக வருகிறேனென்பார்கள். பிறகு அவர்களைப் பார்ப்பதோ அடுத்த மாதத்திலோ வருஷத்திலோ! எப்போதும் பொய் புளுகு அளப்புதானா? என்றைக்குத்தான் உண்மையைப் பேசுவதோ?

கொண்டதால் நான் எடுத்துவைக்கும்படி சொன்ன ஊசியையும் ஜலத்தையும் ஒருநாளாவது உபயோகப்படுத்துவதற்கு இல்லாமலே போய்விட்டது. அவ்வளவு அன்பும் சிரத்தையுமாக நடந்துகொண்டாய்'' என்று சொல்ல, அந்த உத்தம மனையாளும் அதுகேட்டுத் திருப்தியுடன் கடவுளின் பாதநிழல் புகுந்தாளென்பதாகப் பெரியோர்கள் சொல்வர். இத்தகைய நற்பெண்டிருக்கு அவர்களின் வாழ்வுநாள் முழுதுக்கும் நடந்துகொள்ள எப்போதோ ஒரு தினத்தில் சொன்ன ஒரு வார்த்தையே போதுமானதாக இருக்கும். இவ்விதம் நடந்துகொள்ளும்படி பெற்றோர்கள் தங்களின் குமாரத்திகளைப் பயிற்றுவிக்க வேண்டியது அவர்களின் கடமையாகும்.

208. "குதிரை இருப்பு அறியும், கொண்ட பெண்டாட்டி குணமறிவாள்."

இதன் உண்மையை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். உத்தம ஜாதியைச்சேர்ந்த குதிரையை எங்குவிட்டாலும் தான் இருக்கவேண்டிய எஜமானனின் வீட்டையறிந்து அங்கு வந்து நின்றுகொள்ளும். தன்மீது ஏறி, அல்லது தன்னை வண்டியிற் பூட்டிச் சவாரிசெய்பவன் தன்னை அடக்கி யாளப்பட்டவன் என்பதையோ, சவாரி செய்யவே தெரியாதவன் என்பதையோ ஒரு நிமிஷத்தில் கண்டுகொண்டுவிடும். சாமர்த்தியசாலியென்று அறிந்து கொண்ட இடத்தில் அவனுக்கு அடங்கி வெகு வேகமாக ஓடும். இது குதிரைக்குள்ள சூக்ஷ்ம அறிவாகும். இவ்விதமே, ஒருவனை விவாகஞ்செய்துகொண்ட பெண்ணும் அவன் குணப்போக்குகளை ஒருநொடியில் அறிந்துகொண்டு விடுவாள். இவன் எமன்; இவனிடம் நமது பட்டிவாயும் தாய்வீட்டில் கற்றுக்கொண்ட துடுக்கும் செல்லாது என்று வந்த இரண்டொரு தினத்திலேயே கண்டுகொள்வாள். இவன் இளிச்சவாயன், மனைவியின்மீது அதிக ஆசை வைத்தவன், விட்டுப் பிரிந்துவிட ஒப்பாத கோழை மனத்தினன் என்று கண்டுகொள்கிற பெண் அதற்குத் தக்கபடி மீறி அவனை யடக்கித் தான் அரசாளப் பார்ப்பாள். என்ன அதிகத்தனமாய்த் தான் நடந்துகொண்டாலும் அவ்வப்பொழுது தன்னை அடக்கியே ஆண்டு, ஒருகாசுக்கும்கூடக் கெஞ்சிக் கேட்கும்

> மஹா அறிவாளியென்று போற்றக்கூடிய ஒருவன் ஒருகாலத்தில் ஒருமுட்டாளுங்கூடச் செய்யத் துணியாத ஒரு கேவலமான காரியத்தைச் செய்துவிடுகிறான். தவறு செய்யும் வேளையில் அறிவு துணைக்கு வருவதில்லை. தவறிவிட்டவன் பிறகு தக்கிப்பினும், மறுபடியும் தவறு குழியில் வீழ முதலில் தவறியதே வழியாகிவிடுகிறது. அதற்குப்பின் தவறுகிற ஒவ்வொரு தடவையிலும் அதுவே கடைசி என்று கூறிப் பாபியாகிறான்.

தாய்தந்தையர் தந்த முத்தங்களுக்கு வட்டியும் முதலுமாகத் தர முடியுமா?

படியான நிலையில் தன்னை வைத்துள்ள கணவனின் போக்கையும் தெரிந்துகொண்டு தன் ஆரவாரம் செல்லாது என்று அடங்கிவிடுகிற பெண்களுமுண்டு. உத்தம மனையாள் தன் கணவனின் குணஸ்வபாவங்களை யறிந்து காலமுற்றும் அவன் உள்ளம் குளிர நடந்துகொள்வாள். குதிரைக்கு இருப்பு அறிவது சுலபமாவதுபோல், பெண்டிர்க்குக் கொண்ட கணவனின் தன்மைகளை ஊகித்துக் கொள்வதும் எளிதே. அவன் ஆண்மையுள்ளவன் என்பதும், அல்லாதவன் என்பதுங்கூட அவர்கள் தெரிந்துவைத்த ரகசியமே. மற்றவர்களால் அறிந்துகொள்ள இயலாததுங்கூடக் கொண்ட மனைவியால் உணர்ந்துகொள்ள முடியும்.

209. "நாணமில்லாப் பெண்டீர்க்கு நாலு திக்கும் வாசல்."

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைக் கோட்டைகளில் நாணமே முதல் கோட்டை. ஒரு பெண்ணுக்கு முக்கியமாக வேண்டியது நாணமே. நாணம்தான் கற்புக்கு முதல் காவல். நாணமுள்ள பெண்களிடம் ஆடவரும் மரியாதையாக நடந்துகொண்டு ஒதுங்கிப் போய்விடுவர். பெண்களை வசீகரித்துக் கற்பழித்துவிடக்கூடிய சண்டாளனுங்கூட, நாணமுள்ள பெண்டிரைக் கண்டால், இந்த மான் தனது கையிற் சிக்காது என்று அந்த நிமிஷமே உணர்ந்துகொள்வான். அன்னிய ஆடவர் நிற்குமிடத்தில் தானில்லாது க்ஷணமே நாணத்துடன் ஒதுங்கித் தூரப்போய்விடும் பெண் ஒரு தேவதையைப்போல் பிறனுக்குத் தோன்றுவாள்; பத்தினிக் கடவுளாகவும் விளங்குவாள். நாணமில்லாப் பெண்டிரோ ஸ்திரீ ஜாதிக்கே ஒரு கெட்டபெயரை உண்டாக்கக்கூடிய சனியன்கள். நாணமற்ற தன்மையைக் கண்டதும் ஆடவர்க்கு உடனே சிரிப்புத் தோன்றிக்கொள்ளும். தாங்கள் அந்தப்பெண்ணை வசப்படுத்திவிடலாமென்று நினைப்பர். அதற்கேற்றபடி பேச்சுவார்த்தைகளாடி மயக்க முயல்வர். அன்றியும், நாணமற்ற பெண்கள் நல்ல குணமுடையவராதலும் அரிது. குணங்கெட்ட தன்மையாலேயே ஸ்திரீஜாதிக்கு முக்கியமான நாணத்தை அவர்கள் கவனியாது போகின்றனர். இத்தகைய நாணங்கெட்ட தூர்த்தைகள் கெடுவதற்கு நாலுதிக்கும் வாசல் இருக்கத்தான் செய்யும். அதாவது நாணும் நன்மையில்லாத நங்கையர் நானாவிதத்திலும் கெட்டுவிட வழிகள் எதிர்ப்பட்டுக்கொள்ளும் என்பது கருத்து. (தொடரும்.)

எஜமானனுக்காக வாங்கும் கடையில் தனக்கு சொந்தத்தில் வேண்டியவைகளுக்கும் எஜமானனின் பெயராலேயே கணக்கு எழுதிப் பெற்றுக்கொண்டு, பிறகு தனக்குப் பணம் வந்தபோது எஜமானனின் பெயராலேயே செலுத்திவிடுவதுமான சமர்த்து சில குமாஸ்தாக்களிடம் உண்டு. இதைக் கண்டுபிடிக்க எஜமானனால் ஆவதில்லை—முடிகிறதுமல்ல. குமாஸ்தாவின் ரகசிய சங்கதியும் வெளிவருவதில்லை.

உண்மையுள்ளவனாகுதல்.



“நீ பொய்யன் போலிருக்கிறாய்” என்று ஒருவன் ஸம்சயிப்பதற்கு ஆளாவதைப்போல் அவ்வளவு மனவருத்தம் உண்டாக்கத் தக்கது வேறொன்றுமில்லை. இந்தப் பழியை ஒருவன் ஒரு நிமிஷம்கூடப் பொறுக்கக்கூடாது. இது நியாயமே. “பொய்யன்” என்று சொல்வதைக் காட்டிலும் வேறென்ன அவமானம் இருக்கிறது? அப்படியிருந்தும் உண்மைக்கு விரோதமாக நடவாதபடி நாம் ஜாக்கிரதைப்படுகிறோமா? இல்லை. பொய் பேசுவதை ஒரு சாமர்த்தியமாகவும், மகா தந்திரசிலாக்கினையாகவும் நினைத்துவிடுகிறோம். நினைத்துவிடுவதுமட்டுமா? பொய் பேசி ஏமாற்றிவிட்டதற்கு நமது புத்திசாலித்தனத்தை எவ்வளவோ கொண்டாடிக்கொள்கிறோம். பொய்பேசி ஒருவன்மேல் கோள் குண்டுணி கூறி உத்ஸாகப் பட்டுக்கொள்கிறோம். எவ்வளவு துன்பம் பிறருக்குச் செய்யமுடியுமோ எதுவரையில் உலகை ஏமாற்றிப் பொருள் தேட முடியுமோ அவ்வளவுக்கும் துணிந்துவிடுகிறோம். தெய்வபயமென்பதையே மறந்துவிடுகிறோம். பிரதிதினமும், பிரதி நிமிஷமும் நம்முடைய உண்மையான சுபாவத்திற்கு விரோதமாயும், நம்முடைய மனதுக்கும் நல்லொழுக்கத்திற்கும் விரோதமாயும் நடக்கிறோமேயொழிய, உள்ளும் புறமும் ஒத்து ஒரேமாதிரியாயும், நமது மனதிலுள்ள உண்மையென்னும் பளிங்குக்கு கல்மிஷமுண்டாகாமலும் நடந்துகொள்வதில்லை.

இது எப்படியாகிறதென்பதைச் சற்று யோசித்துப் பார்ப்போம். முதலாவது, சிறுவர்கள் தாங்கள் செய்த தப்பிதத்தை மறைக்கும்பொருட்டு உண்மையற்றவர்களாகிறார்கள். அவர்கள் ஏதாவது தப்பு செய்துவிட்டு, இதைச் சொன்னால் தங்களுக்கு அடிகள் கிடைக்குமே யென்று நினைத்து, ஏதேனும் ஒரு பொய்க்காரணம் சொல்லி மறைக்கவாவது மறைக்கிறார்கள்; அல்லது மேற்படி குற்றத்தை வேறொருவர்மேல் சார்த்தவாவது சார்த்துகிறார்கள். நாம் செய்த தப்பிதத்தை ஒத்துக்கொண்டால் தொந்தரவு நேரிடுமாதலால் அது சற்றே கடினந்தான். ஆனால், செய்த தப்பிதத்தைச் சொல்லி, அதற்குச் சாந்தியாய்த் திட்டுகளோ கண்டிக்கப்படுவதோ, அடிகளோ அடைகிறதா? அல்லது தப்பிதத்தைப் பொய்சொல்லி மனசாட்சிக்கு விரோதமாய் மறைத்து, செய்த தப்பிதம் எங்கு வெளியாகிவிடுமோ, எங்கு வெளிவரப்போகிறதோ என்று பயப்பட்டுக்கொண்டேயிருக்கிறதா? எது அதிக கெட்டது? சிறுவர்கள் இவ்விதம் பொய் சொல்லித் தப்பித்துக்கொள்ள,

---

தங்களுக்கு வாய்த் திமிரும் தேகவலுவும் இருக்கிறதென்று மற்றவர்களிடம் கையும் வாயும் காட்டுகிறார்கள் சிலர். அவர்களுக்குச் சோதனைக்காலம் வெகு சமீபத்தில் நெருங்கிக்கொண்டிருக்கிறதென்பது தெரிகிறதில்லை.

இவர்களின் பெற்றோர்களாகிய பெரியவர்களோ அவர்களைவிட மோசமாயிருக்கிறார்கள். மனைவி தன் கணவனிடம் தன் செலவுக்கு ஏதாவது பணம் வேண்டுமென்கிறாள். கணவனோ தன் கையில் இருப்பது இரண்டே ரூபாய்தான்; அதுவும் செலவுக்கு வேண்டும்; எட்டணா வேண்டுமானால் பெற்றுக்கொள் என்கிறான். அவன் அவ்விதம் சொல்லுகையில் அவன் அருகே நிற்கும் அவனது குமாரன் தன் தந்தையின் பெட்டியில் இருபது முப்பது ரூபாய்கள் இருந்து தான் பார்த்ததையும், தன் தந்தை இப்பொழுது இரண்டுரூபாய் தான் இருப்பதாகப் பொய் சொல்லுவதையும் கவனிக்கிறான். அதிலிருந்து பொய் சொல்வது ஒரு தப்பிதமல்லவென்று எண்ணிவிடுகிறான். இத்தச்சமயம் வீட்டுவேலையாள் தனக்குச் சென்றமாத சம்பளமே தரவில்லையென்று தன் குடும்ப கஷ்டத்தைச் சொல்ல வருகிறான். வீட்டுக்காரனுக்குக் கோபம் பொங்குகிறது. "சம்பளம் இன்னும் வாரம் பொறுத்துத்தான் முடியும்; பல செலவுகள் இருக்கு. இந்தா தொலைத்துக்கொள். பாக்கி வாரத்திற்குப் பிறகுதான்" என்று சொல்லிப் பெட்டியைத் திறந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து எறிகிறான். அதை மனைவி பார்த்துவிட்டு "இரண்டே ரூபாய்தான் இருக்கிறதென்றீர்களே; இப்போது மேற்கொண்டு ஐந்து ரூபாய் எங்கே வந்தது?" என்கிறாள். பையன் "அப்பா பெட்டி நிறைய பணம் இருக்கு அம்மா" என்கிறான். வீட்டுக்காரன் மூலமாய் மனைவி, குமாரன், வேலையாள் இம்மூவருக்கும் இங்கே பொய் கற்பிக்கப்பட்டுப் போகிறது. பொய்யன் கடவுளுக்குத் துணிந்து மனுஷனுக்குப் பயப்படுகிறவனாகிறான். ஃ

என்ன கெடுதி வந்தாலும் பயப்படாமல் மெய்யைச் சொன்னதைப் பற்றிச் சரித்திரசம்பந்தமான ஓர் கதை யுண்டு. சென்றதற்கு முந்திய நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் நடந்த ஒரு பெரிய கலகத்தில் லாம்பேல் என்னும் ஒரு ராஜகுமாரத்தி ராஜகட்சியில் சேர்ந்திருந்ததற்காகக் கலகக்காரரால் சிறையாக்கப்பட்டாள். அப்போது பாரிஸ் நகரத்துக்கு எஜமானர்களாயிருந்த பயங்கரமான சில கொடியர்கள் அந்த மனுஷியைத் தங்கள் முன்னே இழுத்துவரச் சொல்லி, "ஜனங்கள் எல்லாரும் சமானர்; எல்லாரும் சுயாதீனராயிருக்கவேண்டும்; அரசனும் அரசியும் குடிகளுக்கு விரோதிகள்" என்று சொன்னபொழுது, அவள் "முதலில் சொன்னவை இரண்டும் சரியே; கடைசியில் சொன்னது, அதாவது அரசனையும் அரசியையும் பகைக்க வேண்டும் என்பது மாத்திரந்தான் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல" என்றாள். அதைக்கேட்ட அந்தக்காதகர்கள் அவளைச் சுற்றிக்கொண்டு, தங்கள் ஈட்டிகளை அவளுடைய மார்புக்கு நேராகக் குறிவைத்து, நீ "ராஜாங்கத்தை வெறுப்பதாகச் சத்தியம் பண்ணுகிறாயா, கொன்றுவிடட்டுமா" என்று பயமுறுத்த, அவள் அதற்கெல்லாம் அஞ்சாமல், "நான் மனதிலுள்ளதற்கு விரோதமாய் ஒன்றும் சொல்லமாட்டேன்" என்று மறுக்கவே, அவர்கள் அவளைப் பயங்கரமாய்க் கொலை செய்தார்கள். பார்த்தீர்களா! அவளுடைய தீரத்தை! உயிர்போனாலும் உண்

தன்னை ஈன்ற விருக்ஷத்தின் தளர்ந்த தசையில் அதனைத் தாங்கிக்கொண்டு ஆலமரத்து வேர்கள் காக்கின்றன. ஆலவேர்களுக்குள்ள நன்றிகூட மானிடரிடத்துக் காணுவிடின் அவர்கள் தோன்றிப் பயனென்ன?

மைக்கு விரோதம் சொல்லாத உத்தமியாயிருந்தாள். இதைப் பார்த்தால் அற்ப தொந்தரவுக்காகப் பொய் சொல்லுகிறவர்கள் வெட்கப்பட வேண்டாமா? ஃ

வேறு சிலர் தாங்கள் செய்த தப்பிதத்தைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு பிரத்தியக்ஷமான பொய் பேச அஞ்சுவார்கள். ஆனால், அவர்கள் சில சமயங்களில் பொய்க்குச் சமானமான பேச்சுகளைப் பேசுவதுண்டு. எப்படியெனில், அவர்கள் தங்களுடன் பேசுகிறவர்களுக்குச் சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கும்பொருட்டு தாங்கள் உண்மையாகக் கண்டதற்குமேல் கொஞ்சம் கூட்டியும் குறைத்தும் சொல்வதுண்டு. இப்படித் தாங்கள் சொல்வது யதார்த்தமல்லவென்பதை அறியார்கள் போலும். ஒருவர் இன்னது சொன்னார் என்று இன்னொருவருக்குச் சொல்லுகையில் தாங்களும் சில பேச்சுகளைக் கூட்டிவிட்டு ஒரு கலகத்திற்கு ஏதுவானவிதமாக ஜோடித்துவிடுவதும் உண்டு. மத்தியான நேரத்திற்குப் பிறகு எதிர்வீட்டு ஏகாத்தாளும், பக்கத்துவீட்டுப் பராபரக்கண்ணியும், மூலைவீட்டு முறுக்குவிற்கும் அம்மாளும், நாலாந்தெரு நாச்சியாரும் கூடிப்பேசுகிற கூட்டத்தில் மலிந்துகிடக்கிற பொய்களைச் சொல்லவும் வேண்டுமா? சயன அறைச் சங்கதிகள்முதல் அங்கு கொண்டுவந்து பிரஸ்தாபிக்கப்படுமன்றோ? ஒரு சிறு சங்கதியை எவ்வளவோ பெரிதாக்கிவிடுவார்கள்.

ஃ

எல்லோருமே இவ்வாறு அணுவை மேருவாகக் கற்பித்துச் சொல்லாவிட்டாலும், அளவுக்கு மிஞ்சிப் பேசுகிறவர்கள் அநேகருண்டு. பேச்சை இறைத்துவிட்டால் மீண்டும் பொறுக்கலாகுமா? நாம்ஒருதரம் பேசிவிட்ட வார்த்தைகள் நம்மைவிட்டு நீங்கிவிடுகின்றன. மேலும், நம்முடைய பேச்சினால் உண்டான கெடுதி இன்னதென்று நாம் அறிகிறதில்லை.

'தீயினாற் சுட்டபுண்
ணுள்ளாறு மாறாதே—
நாவினாற் சுட்ட வடு."

என்றபடி பேச்சுகள் மனதைக் கூரிய கத்திகளைப் பார்க்கிலும் அதிக கடுமையாய் அறுக்கும். சில வார்த்தைகள் இறக்குமளவும் ஒருவனைச் சுட்டுக்கொண்டிருக்கும். இவ்விதமான ப்யோசனையற்ற வீண்பேச்சுகள் எத்தனை ஆப்தமானசிநேகிதர்களை மனஸ்தாபமுண்டாக்கி விரோதிகளாக்கின! எத்தனைபேருடைய கீர்த்தியை அழித்து அவமானப்படுத்தின! எத்தனைக் குடும்பங்களில் சச்சரவு உண்டாக்கிச் சமாதானத்தைக் கெடுத்தன! தொடர்ந்து நடந்துகொண்டிருந்த எத்தனைக் கடித வரத்துப் போக்குகளை நிறுத்திவிட்டன! அதிலும் நிரபராதியைத் தூஷித்துப் புண்ணாக்குவது இன்னும் அதிக கொடுமை! ஃ

பேச்சினாலும் செய்கையினாலும், விஷயம் ஒன்றிருக்க, அதை வேறுவிதமாய் நினைத்துக்கொள்வதினாலும், இன்னும் அநேக விஷயங்களாலும் மனுஷர் பொய்யர் என்று காட்டுகிறார்கள். எல்லாப் பொய்த் தோற்றங்களும், நம்முடைய உண்மையான ஸ்திதிக்குமேல் காட்ட முயலும் எல்

வியாபாரம் இப்பொழுது குறைவாயிருந்தாலும் விளம்பரங்கள் அதிகமாய்விட்டன. பழய நாளில் விளம்பரம் குறைவு, வியாபாரமோ அதிகம்.

லாக் காரியங்களும் பொய்க்குச் சரியான குற்றங்களே. சதா அண்டிவிட்டுப் புகார் செய்பவர்களும் இக் குற்றக்கூட்டத்தில் சேர்ந்தவர்களே.

ஃ

ஒருவன் ஸர்வாதிகாரியாகிய கடவுளின் கண்ணுக்கு முன் தான் இருக்கிறன் என்பதை நினைத்து, எப்போதும் உள்ளும் புறமும் ஒரேமாதிரியாய் ஒழுகினுல் அதுதான் உண்மைக்குப் பிரமாணம். இப்படிப் பொய்யைத் தள்ளுவது அதிக வருத்தமான காரியமாயிற்றே என்று அதைரியப்படாதே. ஏதாவது உன்னையும்மறந்து ஒரு பொய் சொல்ல நேர்ந்தால உடனே அதைப் பொய்யென்று ஒப்புக்கொண்டு உண்மையைச் சொல்லு. அப்படிச் சொல்வதனுல் உனக்கு உண்டாகும் மனவருத்தத்தை நீ கவனிக்கவேண்டாம். என்ன நஷ்டம் வந்தாலும், கையில் ஒரு காசு இல்லாவிடினும் "சத்தியவான்" என்று பேர் எடுக்கவேண்டும். அத்தகைய சத்தியவந்தன் வாய்திறந்து ஒரு ஆயிரம் வேண்டுமென்பானுகில் எத்தனையோ பேர் அவன் காலடியில் கொண்டுவந்து ரூபாய்களைக் கொட்டச் சித்தமாயிருப்பார்கள். காரணம் அவனது யோக்கியதையே. அந்த யோக்கியதை ஒன்றுக்கே லக்ஷம் ரூபாய் மதிப்பு வைக்கிருர்கள். ஆனுல், அந்த சத்தியவந்தனே வாய்திறந்து ஒன்றையும் கேளான். அதிக உண்மையுள்ளவராகிய ஒரு பெரியவர், தான் சிறுவனுயிருந்தபொழுது ஒரு பொய் சொல்லி, அதனுல் அதிக வருத்தப்பட்டதனுல், அதுமுதல் உண்மையையே விரும்பிப் பொய்யை நீக்கினதாக எழுதியிருக்கிருர். ஆகவே, ஒரு காலத்தில் ஏதாவது ஒரு பொய் தப்பிச் சொல்லிவிட்டால் அந்தக் காரணத்துக்காகப் பிறகு நாம் ஒருபொழுதும் மெய்சொல்ல முயலலாகாதா? அப்படியல்ல; தெரியாமல் சொன்ன முதல் பொய்யே ஒருவனை உண்மையுள்ளவனுகத் தூண்டவேண்டும். எப்போதும் உண்மையுள்ளவனுவதே உலகுமதிக்க உன்னதம் பெற்று வாழ்வதற்கு வழி.

"எல்லா விளக்கும் விளக்கல்ல
சான்ரோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

என்ன ?—எதற்காக ?—ஏனே ?

நித்திரைபுரியும் அத்தனை பெண்களையும் மிதித்துக்கொண்டு அப்பாற் செல்லும் அவசரம் என்ன? மீண்டும் அவர்கள்மீது ஏறி கடந்துத் திரும்பிவந்து ஒவ்வொரு பெண்ணையும் முகம் நோக்கிவிட்டு, கடைசியில் ஒரு பெண்ணிடம் நெருங்கி அவளையடித்துத் தொந்தரைசெய்து, கூந்தலைப் பற்றியிழுத்து நித்திரையைக் கெடுப்பது எதற்காக? இதனை மற்றவர் கண்டும் காணுததுபோற் செல்வது ஏனே? இப்படித் தொந்தரை செய்பவர் யார்?



பெரியாரின் மொழிகள்



(491-ம் பக்கத் தொடர்ச்சி.)

591. Difficulties increase the nearer we approach the goal.

நமது இலக்ஷ்யத்தின் முடிவை நெருங்க நெருங்கக் கஷ்டங்களும் அதிகமாகத் தோன்றும்.

592. To expect a pleasure is itself a pleasure.

இன்பத்தை எதிர்பார்த்து நிற்பதே ஓர் இன்பமாகும்.

593. Everyone knows best where his shoe pinches him.

தன் கால் செருப்பு எவ்விடத்தில் 'கடிக்கிற' தென்பதை அவனவனே நன்கு அறிவான்.

594. Do not throw away the old things till the new ones reach you.

புதிய வஸ்துக்கள் உன் கையைச் சேரும்வரையில் பழைய வஸ்துக்களை எறிந்துவிடாதே.

595. Either don't attempt or go through with it.

(ஒரு காரியத்தை) ஆரம்பிக்கவே ஆரம்பிக்காதே. அல்லது அதைப் பூர்த்தியாகச் செய்துவிடு.

R. இராமகிருஷ்ணன் M. A.

II

596. —loan oft loses both itself and friend; And borrowing dulls the edge of husbandry.

தன்னையும், சிநேகிதர்களையும் இழக்கும்படி கடன் அடிக்கடி செய்கிறது. வாங்குவது வேளாண்மையின் கூர்மையை மழுங்கும்படி செய்கிறது.

597. How sharper than a serpant's tooth it is to have a thankless child!

பாம்பின் பற்களைவிட, நன்றி காட்டப்பெறாத குழந்தையை வைத்திருப்பது எவ்வளவு கூர்மையானது!

P. G. குலசேகரன்.

எம்மை இளமையில் என் தண்டித்துத் திருத்தவில்லை யென்றே மக்கள் பிற்காலத்தில் பெற்றோரை எதிர்த்துத் தண்டிக்கின்றனர்.

" அட சண்டாளா! எத்தனை நாளைக்கு உன்னோடு நான் இப்படி வாதாடி உன்னிழ வெடுப்பேன்! கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை யெல்லாம் துஷ்டத்தனமாய்ச் செலவிட்டு மதுக்கடையில் வீணாக அழுதுவிட்டு வந்தாயே! பாவி!" என்கிறாள் ஒரு குடியனின் மனைவி.

தான் வயிறு நிறையச் சாதம் இடாவிடினுங்கூட மூத்தாள் மக்கள் தன் கணவன் முன்பு பசி பசியென்னக் கூடாதாம். அது தன்னைத் தாழ்த்திக் கேவலப்படுத்துவதாகுமாம். வயிற்றெரிச்சல் இந்த மாற்றாந்தாயைச் சுற்றாது விடுமா? மூத்தாள்போல் இந்த ஆத்தாளும் கண்மூடிச் செத்தாலோ—?

பகவத் சிருஷ்டியிலுள்ள ஞானம்

ஆற்றுவெள்ளம் வடிந்தோடுவதைப் பார்க்க ஒருநாள் மாலை வேளையில் காவிரிநதிக்கரையிலே நான் உல்லாஸமாக உலாவித்திரிகையில், பொழுது போகிற தருணமாயிற்று. அச்சமயத்தில் மேற்றிசையிலே தோன்றிய செவ்வானத்தின் அதிசயங்களைக் கண்டு அகங்களித்து நிற்கையில், சிற்சிலவாய் அச்செவ்வானமெல்லாம் மறைந்து போயின. உடனே நக்ஷத்திரங்களும் கிரகங்களும் ஒவ்வொன்றாய்த் தோன்ற சீக்கிரமே ஆகாயமுழுதும் அவற்றால் அடர்ந்து ஓர் அழகொளி பரப்பியதுபோலாயிற்று. அதற்கேற்க, அந்த இராக்காலத்தின் சிறப்பினாலும், நக்ஷத்திரங்களின் ஒளி மிகுதியாலும் ஆகாயம் அதிக நீலமாய்ப் பார்க்கப் பதினாயிரம் கண்ணும் போதாமலிருந்தது. இவ்விதமான விநோதக் காட்சியைப் பூர்த்தி பண்ணப் பூர்ண சந்திரனும் உதயமாயிற்று.

ஃ

முன்னமே வெகுவிசித்திரமாய்த் தோன்றும் ஆகாயத்தில் தேஜோமயமாய்ச் சந்திரன் எழுந்து வரக்காணும்போது என் இருதயத்தில் ஒரு எண்ணமுண்டானது. கடவுளுடைய கைத்தொழிலான ஆதியந்தமில்லாத அற்புதமான ஆகாயத்தையும், அவ்வாகாய மகா சபையைச் சிங்காரிக்கும் சோதி மண்டலமான சந்திரனையும், இன்னும் இப்பூமியைப்போலவே சூரியனைச்சுற்றிவரும் செவ்வாய், சனி, சுக்கிரன்முதலிய நவக்கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும்நினைத்துப் பார்த்தேன். சர்வேசுவரனுடைய சரீரத்தில் மயிர்க்காலுக்கு மயிர்க்கால் ஒவ்வொரு அண்டம் தொங்குகிறதென்று சொல்லப்படுவதையும் சிந்தித்தேன். இவ்விதம் நான் மெய்மறந்து பகவத் சிருஷ்டியின் அதிசயங்களையெல்லாம் எண்ணி எண்ணி, ஆ! இப்படிப்பட்ட பல உலகங்களுக்கு முன்னே நாம் எவ்வளவு பொருள்; ஆயினும், கருணைக்கடலான கடவுள் நம்மையும் மறவாமல் அன்னமிட்டுக் காத்தருளுகிறாரல்லவா என்று ஆநந்திக்கலானேன்.

ஃ

இங்கே நமக்கு ஒளி கொடுக்கின்ற சூரியனும் அதைச் சுற்றிய கிரகங்கள் முதலிய யாவையுமே அழிந்துவிடினும் என்ன? கடற்கரையில் ஒரு கருமணல் காணாமற்போனாலும், கடலில் ஒரு நீர்த்துளி குறைந்தாலும் என்ன குறைவு உண்டாகுமோ, அதைப் பார்க்க அதிகமான குறைவு இந்தச் சிருஷ்டியில் உண்டாகாது. ஈசுவர சிருஷ்டி முழுமையும் ஆய்ந்தோய்ந்து பார்க்கையில், அதில் இவ்வண்டம் அமைந்திருக்குமிடம் அவ்வளவு சொற்பமானது. இவ்வண்டம் முழுதும் இல்லாமற்போனாலும் அதனால் இந்த சிருஷ்டி மகா சமுத்திரத்தில் ஒரு குறைவு மில்லை. தாம் முதலில் படைக்கப்பட்ட நாள் முதல் தம் ஒளி இன்னும் இப்பூமிக்கு வந்து சேராத அவ்வளவு உயரத்திலும்

உலகில் பெறற்கரிய நவநிதிக் குவியல்களைப் பெற்றிருப்பினும், அன்னோருக்குப் "பெற்றோர்" என்ற பெயர் ஏற்படுவதில்லை. அருங் குழந்தைகளைப் பெற்றோர்க்கே "பெற்றோர்" என்ற பெயர் வழங்குகிறது.

அநேகம் நக்ஷத்திரங்கள் இருக்கலாமென்று ஹைஜினியஸ் என்னும் பண்டிதர் ஒருவர் சொல்லியிருக்கிறார். சர்வ சக்தியுள்ளவரும், கைம்மாறு வேண்டாத கருணைக்கடலுமான கடவுள் தமது அளவிலா வல்லமையையும் மகிமையையும் வெளியிடும்பொருட்டு இந்தப் பிரபஞ்சத்தைப் படைப்பதாகிய விநோத விளையாட்டைக் கைக்கொண்டாரென்றால், அவருடைய படைப்புக்கு இவ்வளவென்று எல்லையேற்படுத்த நம்போன்ற அல்பபுத்தியுள்ள மனிதரா லாகுமோ?

ஃ

ஆ! நம்முடைய மதியீனத்தை என்னென்று சொல்வது! ஒன்று மறியாத நம்மைப்போலவே எல்லாம் அறிந்த கடவுளையும் நினைத்துவிடுகிறோம். ஒரே சமயத்தில் பல காரியங்களைக் கவனிக்க நம்மாலாகாது. ஏதோ ஒரு காரியத்தில் நாம் கவனம் வைத்ததில் மற்ற காரியங்களை உபேக்ஷை செய்வது நமது இயற்கை. எவ்வளவு வல்லவராயினும் அவரவர் மதிக்குத் தக்கபடி இந்தக்குறைவு மனிதர் அனைவரிடத்திலும் உண்டு. கடவுளால் படைக்கப் பட்டவர் எப்படிப்பட்டவரானாலும் சரி, அவர் சஞ்சரிக்குமிடம் மிகவும்சொற்பமாதலால், அதற்கேற்றபடி அவர் அறிந்த பொருள்களும் அளவிட்டவையாகவே இருக்கும். நாம் செய்கிற செய்கைகளும் அறியும் பொருள்களும் அவரவர் மதிக்கேற்றபடி ஏறத்தாழப் பல அளவாயிருக்கும். நம்முள் ஒருவன் எவ்வளவு அதிகமாய் அறிந்தவனாயிருப்பினும் அவன் அறிவும் ஓரளவுள்ளதேயொழிய அளவு கடந்ததன்று. சர்வஞ்ஞான கடவுளைப்பற்றி ஆலோசிக்கும்போதும் அவருடைய அறிவும் இப்படி ஓர் அளவுள்ளதே என்று நம்மைப்போலவே நினைத்துவிடுகிறோம். நன்றாய் ஆய்ந்தோய்ந்து பார்க்கும் அளவில் இப்படிப்பட்ட குறைவு ஒன்றும் கடவுளிடத்தில் கிடையாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தோன்றும். "அவனன்றி அணுவும் அசையாது."

ஃ

ஆதலால் ஈசுவரன் தனக்கிருக்கிற பல தொழிலில் நம்மை மறந்து உபேக்ஷை செய்வாரோவென்றெண்ணி நாம் அணுவளவும் அச்சப்படவேண்டுவதில்லை. அவர் சர்வ வியாபி யென்பதையும், சர்வஞ்ஞரென்பதையும் எண்ணிப் பார்ப்போமானால் அந்த அச்சம் உடனே நீங்கிவிடும். கருப்பைக்குள் பாலகனையும், கல்லுக்குள் தேரையையும் மறவாமற் காக்கின்ற கடவுள் நம்மை மறந்து போவாரோ?

ஃ

கடவுள் சர்வ வியாபியாகையால், இந்த சிருஷ்டியிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் தான் உட்புகுந்து அதது செய்யவேண்டிய செய்கைகளைச் செய்வித்து இந்தப் பிரபஞ்சம் முழுமையும் தானே தாங்குகிறார்; இந்த சிருஷ்டியில் அவரில்லாத இட மில்லை. சித்தோ அசித்தோ, அணுவோ மகத்தோ எந்த வஸ்துவிலும் அவர் அந்தர்யாமியாயிருக்கிறார். இந்தப் பிரபஞ்சத்தில் எந்தப் பொருளையும் விட்டு ஒழியக்கூடாமலிருப்பதே கடவுளுக்கு ஒரு குறையென்று சொல்லவேண்டுமேயொழிய மற்றொரு குறையுமில்லை. ஈசுவரனாகிய ஒரு மகா சக்கிரத்திற்கு மையம் எங்கு மிருக்கிறது; சுற்

தான் ஈன்ற காய்களாலேயே சிதைவுறும் வாழைமரத்தைப் போன்று, தாம் அருமையாய்ப் பெற்ற குழந்தைகளாலேயே அலங்கோலப்பட்டுக் கண்ணீர் விடுவோரும் உண்டு.

றெல்லை எங்குமில்லை என்று ஒரு மகாவித்துவான் வர்ணித்துச் சொல்லியிருக்கிறார்.

ஃ

இந்தப் பிரபஞ்சமெல்லாம் பரமாத்துமாவான கடவுள் தமக்கென்று தாமே நிருமித்துக்கொண்ட ஒரு பெரிய ஆலயமென்றும், அவருடைய சரீரமென்றும் சொல்லுகிறார்கள். ஆய்ந்து பார்க்குமளவில் இவ்வுலகமெல்லாம் அவருடைய ஞானேந்திரியமென்றே சொல்லவேண்டும். அதனாலே அவர் எல்லாம் அறிந்தவராகிறார். ஜீவாத்துமாவானது இந்த சரீரத்தைவிட்டு எழுந்து போமானால், பின்பு அதற்கு எங்கும் யதேச்சையாய்ச் சஞ்சரிக்க சக்தி உண்டாகையால், எவ்வளவு தூரம் போனாலும் எங்கும் கடவுளுடைய சக்தி அமைந்திருக்கக்கண்டு அதிசயிக்கும்படி யாகும். ஆ! இப்படி எங்கும் உள்ளவரும் எல்லாம் உணர்ந்தவருமான கடவுளை நாம் காணக்கூடுமானால் நமக்கு எவ்வளவு ஆநந்தமாயிருக்கும்? முன்னே பார்த்தாலும் அவர் நமது கண்ணுக்குத் தென்படவில்லை; பின்னே பார்த்தாலும் அவரை அறியக்கூடவில்லை. பக்கங்களில் பார்த்தாலும் காணப்படவில்லை. அவர் எங்கும் உள்ளவராயினும், எங்கே பார்த்தாலும் நமது கண்ணுக்குமட்டும் அவர் காணப்படவில்லையே? இதென்ன ஆச்சரியம்!

ஃ

இப்படிப் பலவிதமான கடவுளுடைய நித்திய கலியாண குணங்களையெல்லாம் நினைத்துப் பார்க்கையில் அவரவர் மனதிலுள்ள எவ்விதமான அஞ்ஞான விருளும் அந்தக்ஷணமே ஒழிந்துபோகின்றது. தமது சிருஷ்டியில் அகப்பட்ட பொருள் எதையும் அவர் உபேக்ஷை செய்வதில்லை. அவற்றுள்ளும் நம்மை ஒருவேளை கடவுள் கைவிடுவாரோவென்று அஞ்சி அவரையே நம்பி நடப்பவர்களை அவர் முக்கியமாய்க் கண்ணுற்று வருகிறார். நாம் எண்ணுகிற ஒவ்வொரு எண்ணமும் இப்படிப்பட்டதென்று அவர்க்கு நன்றாய்த் தெரியும். அவர் ஒருபோதும் நம்மை உபேக்ஷை செய்வதில்லையாதலால் நாம் அவரைப் பூர்ணமாய் நம்பி நடக்கக்கடவோம். நமது பசியைத் தினமும் ஆற்றி உதவுகிறவரும் அவரே. சிருஷ்டியை நோக்கிச் சிருஷ்டி கர்த்தாவைக் கண்டுகொள்வதில் அதிகமான பக்குவஞானம் பெறக்கூடும்.

வீட்டுக்குக் கொள்ளி!

தன் வீட்டுக்குள்ளாகவே குடியிருந்துகொண்டு, தன்னவரோடு சண்டைகள் பிடித்தும், தாயாதிகள்போல் பகைத்தும், ஆபத்தும் பிணியும் வந்தகாலத்து ஜாடையாய் விலகியும், கதறிக்கொண்டிருந்தாலும் கவனியாதபடி சென்றும் உர் என்றிருப்பவர்களை வீட்டிற்குப் பெரிய கொள்ளிகளென்று நினைத்து எவ்விதமும் வீட்டைவிட்டு வெளியேற்றிவிடப்பார். வீட்டைப் பிடிக்கவந்த ஏழரைநாட்டுச் சனியன்கள் இது. அது தொலையும்வரை பெருந்தொல்லையே. சீக்கிரம் தொலைய முயற்சிசெய்.

மூளைக்கு வேலை

விடு கதை வினா?

1. துரை என்னும் ஓர் சிறுவன் தெருவின் வழியே சென்றுகொண்டிருந்த ஒருவனை "உலர்ந்த மரமேறி, உலர்ந்தமரம் கையேந்திப் போகும் பிள்ளாய்!" என அழைத்து, "உன் பெயர் என்ன"? என்று வினவ, அதற்குச் சென்றவன் "'க' எழுத்தில் பதினொன்றும், 'ப' எழுத்தில் ஐந்தும் சேர்ந்தால் என் பெயர்" என விடை தந்தான். மறுபடியும் அவனை நோக்கி,

துரை:—"நின் இல்லம் யாது?"

சென்றவன்:—"காருக்குங் கலப்பைக்கும் நடுவே."

துரை:—"எப்பொழுது வந்தாற் காணலாம்?"

சென்றவன்:—"இந்த ராஜன் போய் மறுராஜன் வந்து, குளம் வற்றிக் கோபுரந் தாழ்ந்து, உலர்ந்தமரம் உலர்ந்த மரத்தோடு படும்பொழுது வந்தாற் காணலாம்" என்றான்.

அப்படியானால் (1) சென்றவன் எதன்மீதேறி எதைக் கையேந்திச் சென்றான்? (2) அவன் பெயர் என்ன? (3) இல்லம் எவ்விடத்திலுள்ளது? (4) எச்சமயம் சென்றால் காணலாம்?

2. ஜாதியிலோ நான்குண்டு மனிதரல்ல; ஜாதிக்கோர் மன்னனுண்டு அவர்களிலே; மன்னனுந் தான் பத்னியுடன் வாழ்கின்றான் மனிதரைப்போல்; ஒவ்வொரு மன்னனுக்கும் சுதர்களுமோ பதினொன்று கணக்கிலாவர்; சண்டையிலோ வெகு சமர்த்தர் வீரரைப்போல்; சண்டை முற்றி வெகுவாகச் சிறைவாசம் செல்வதும் அவர்கள் இயற்கையாகும்; வாழ்விலோ பாண்டவர் போல் ஒற்றுமையாய் ஓர் வீட்டில் வாழ்கின்றார் இனிமையாக; அவர்கள் பிறந்த ஊர் வீட்டின் முன் பதித்திருக்கும் யாவர் அறிய. அவர்கள் யார்?

3. உச்சியிலே கண்ணுண்டு குடுமியுண்டு மனிதனல்ல; உடல் முழுதும் உரோமமுண்டு கரடியல்ல; உருட்சியான வடிவமுண்டு புட்பாலல்ல; உடலெல்லாம் ஓடுண்டு ஆமையல்ல; உட்பாகம் வெளுத்திருக்கும் முத்துமல்ல; செக்கிலிட்டு ஆடினால் எண்ணெய் வரும் எள்ளுமல்ல; சுபத்துக்கும் அசுபத்துக்கும் முன் நிற்கும். அது என்ன?

D. இரத்தின முதலியார்.

விடுவிப்பு:—

கார்த்திகை மாத ஸஞ்சிகையின் 483-ம் பக்கத்தி லுள்ளதற்கு விடை:

(1) 25-வெள்ளரிக்காய்.

(2) 36-பேர்கள்.

வாடகைக்கிருந்த வீட்டிலிருந்து புறப்படுகையில் ஏற்படுகிற சச்சரவில் அதற்குமுன் பாராட்டி நின்ற உறவு—நேசங்க ளெல்லாம் தீப்பிடித்துச் சாம்பலாகின்றன.

(3) குப்பத்துச் செட்டி மகள்
அப்பத்திற்கு ஆசைப்பட்டாள்
முப்பத்து மூன்று பணியாரம்
சிப்பத்தில் கட்டி யனுப்பு.

(4) பறந்த குருவிகள் 36.

[ஒரு குளத்தில் பூவொன்றுக்கு ஒரு கிளியாக உட்கார, ஒரு கிளிக்கு இடமில்லை. பிறகு பூவொன்றுக்கு இரண்டு கிளியாக உட்கார, ஒரு பூ மிச்சம் என்று ஒரு பழய விடுகதை யுண்டு. இதற்கு 3-பூ, 4-கிளி என்பது விடை. இந்த விடுகதையை நமக்கு இதுவரை 23-பேர்கள் எழுதியனுப்பியுள்ளார். ஒருவர் அனுப்பும் விடுகதைபோலவே இன்னொருவரும் அனுப்பிவிடுகிறார். எதைப் பிரசுரிப்பது? விடுவிப்பை அனுப்பவேண்டாம். ப-ர்.]

நிருப நேயர்கட்கு :—

வியாசங்கள் அனுப்புமுன் தாங்கள் ஒரு பிரதி வைத்துக்கொண்டு அனுப்புக. வியாசத்துடன் ஸ்டாம்பு அனுப்பினாலன்றித் திருப்பி யனுப்பப் படமாட்டா. இரண்டு வாரங்கட்குப் பிறகு எந்த வியாசத்தைப்பற்றியும் விசாரிப்பதிற் பய னில்லை. பிறகு ஸ்டாம்பு அனுப்பினும் திருப்பி யனுப்ப இயலா. பதிலுக்கு ரிப்ளை கார்டாவது ஸ்டாம்பாவது அனுப்புக. ப-ர்.

நாடக P. பாலாமணி.

"கன்னி பாலாமணி வாழ்க" என்பது ஒரு பாட்டு. நாடக உலகில் பிரசித்திபெற்ற இந்தப் பாலாமணியை ஒரு காலத்தில் சென்னைக் கவர்னரான லார்ட் ஆம்தில் பிரபு கை குலுக்கிப் பேசினார். துர்நடத்தை கொண்ட ஒரு பெண்ணுடன் கை குலுக்கியது, அவ்விதமான கை குலுக்குதலுக்கே ஒரு இழுக்கென்று அக்காலத்துப் பத்திரிகைகள் கண்டித்தன. கிழவியாய்விட்ட இப் பாலாமணி ஒரு நாடகத்தில் இராஜ குமாரத்தியாகவர, யாவரும் வெறுத்து உள்ளே போ போ போ என்று கூச்சலிட்டனர். ரூபசம்பன்னையா யிருந்தபோது ஏற்றுக்கொண்ட உலகம் பிறகு கிழவியானதும் தூற்றத் தொடங்கியது. பாலாமணியின் பெயர் தமிழ்நாட்டில் ஒரு வியாபாரப் பொருளுமானது. பாலாமணி என்று இப்போது ஒரு நாவலுக்கும் பெயர்!

தந்தை ஒரு போக்கிரியும், ஊர் மெச்சிய துஷ்டனுமாக இருந்தால் அவனுக்குப் பிறக்கும் மக்கள் அதற்குமேல் மீறி எறி கோணி நிற்பார்களாம்!



ஹாஸ்ய சஞ்சீவினி



ராமன் :—சில்லரை கேட்டால் ஐந்து ரூபாய் நோட்டுக்கு நாலு ரூபாய் தருகிறீர்களே ?

முனிசிபல் மந்திரி :—நீங்கள் தர வேண்டிய வீட்டுவரி ஒரு ரூபாய்க்கு எத்தனையோ நாள் கேட்டுக்கேட்டு அலைந்தானது. அதை எடுத்துக் கொண்டு கொடுத்திருக்கிறேன.

மாமியின் அமிர்த வசனம்:—என்னிடம் தங்க நகையிருக்கா, என் செலவுக்கு உதவ? எல்லாம் அந்த முண்டைக்குப் போட்டுத் தொலைத்து விட்டேனே !

எதிர்வீட்டு அம்மாள்:—நான்தான் தோசைக்கு மாவு அரைக்கப் போகிறேனே, நீ ஏன் ஆப்பத்திற்கு மாவு இடிக்கப் போகிறாய் ?

பக்கத்து வீட்டுப் பெண்:—நீங்கள் எங்களிடம் வாங்கினால் அது வீட்டிலே சுட்ட ஆப்பம் என்று சும்மா சும்மா சாப்பிடுவீர்கள். நாங்கள் உங்களிடம் வாங்கினால், அது விலைக்கு விற்கிற தோசை யென்று காசு கொடுத்தல்லவா வாங்கவேண்டும்? அந்தக் கஷ்டம் வேண்டாமென்றுதான் ஆப்பத்திற்கு அரிசி போட்டேன்.

—"அந்த வரிக்குப் பதில் எழுதாமல் விட்டுவிட்டு, அடுத்த வரிக்குப் பதில் எழுதுகிறாயே அது ஏன்?"

—"அதுதான் கடிதம் எழுதுகிற சாமர்த்திய வித்தை. பிழைக்க இதையெல்லாம் கற்றிருக்க வேண்டாமா?

சுப்புரத்தினம் :—என்னைப் பற்றி குருடன் என்று பத்திரிகையில் எழுதியிருக்கிறீர்களே ? அது சரியா ?

பத்திராசிரியர் :—சரியல்ல தான். "திருடன்" என்று நான் எழுதிக் கொடுத்தது அச்சுத் தவறுதலாகக் குருடன் என்று விழுந்துவிட்டது.

உஸ்மான் சாகிபு:—நெடுந்தூரத்திலிருந்து வந்தவருக்கு ஏதாவது தாக சாந்தி செய்வித்து ஒரு சாலணா வெற்றிலைப் பாக்காவது வாய்நிறையக் கொடுக்கக் கூடாதா?

ஹாபீஸ் சாகிபு :—அதவெல்லாம் காசு செலவல்லவா? வாய் உபசாரமாகவே பேசி கை கடிக்காமல் அனுப்பிவிடுவதுதான் சுகமான வழி.

சேஷி:—ஏண்டி! உன் புதுப் புருஷன் எப்படி யிருக்கிறான்? நல்லவன் தானா ?

சுப்பி :—நீ கேட்கிறதைப் பார்த்தால் எனக்குப் பழய புருஷர்கள் வேறே இருக்கிறார்கள் என்றல்லவா கதை கட்டிவிடுகிறாய் ?

சேஷி:—உன்னை விவாகம் செய்து கொள்ள நினைத்து எவ்வளவோ கேட்டும் முடியாமல் ஏமாறியவர்களெல்லாம் பழய புருஷர்கள்தானே !

நாணு :—அந்த வீடு வாங்கி விட்டாயா? பணம் தந்தானதா?

வேணு:—நல்லவேளை, என் அதிர்ஷ்டத்தால் தப்பினேன். பத்திரமும் எழுதி வெள்ளிக்கிழமை காலையில் ரிஜிஸ்தராபீசில் 4000 ரூபா

உலக அநுபவத்தில் அக்கிரமக்காரர்களும், அநியாயம் செய்தவர்களும் தான் நன்றாக உடுத்து உண்டு வாழ்கிறார்கள். நல்லோர்தான் நசிக்கின்றனர்.

கட்டிவிட இருக்கையில் வியாழன் இரவு வெள்ளம் வந்து மழையில் வீடு அப்படியே விழுந்துவிட்டது. பத்திரம் ஆனபின் விழுந்திருந்தாலோ?

—•—

காமாக்ஷி:—வயிற்றைத் தூக்கிக் கொள்ளு என்று சொல்லி உன் தாய் மாமன் அந்தத் தங்க ஒட்டியாணத்தை உன் இடுப்பில் போட்டுத் திருத்தினுனே? சிறு பிள்ளையில் தொட்டது போல் இப்போதும் உன்னை அப்படித் தொடுவது சரியா?

விசாலாக்ஷி:— அவருக்கு இல்லாத சொந்தமா மற்றவர்களுக்கு?

—•—

—"ஏது உமது மனைவிக்கு 60 ரூபாயில் பட்டுச் சேலையாக வாங்குகிறீர்களே?"

—"எனக்குப் போர்த்துக்கொண்டு தூங்குவதற்கும் உதவுமென்றுதான்."

—•—

முத்து:—காபி ஹோட்டலுக்கு நீ வந்தது அதிசயமே. வீட்டிலேயே பார்த்துக்கொள்கிறவனுயிற்றே?

ரத்தினம்:—பாதி சட்டி மாவு உங்களுக்கென்று தோசை வார்ப்பதில் தீர்ந்துவிடுகிறது; மிச்ச மிருக்கிற பாதி போதவில்லையென்று என் மனைவி சொன்னுள். அதனுல் ஹோட்டலுக்கு வந்துவிட்டேன். வாங்கி வந்து போடுகிற எனக்கு வைப்பதில் இந்த சொட்டுப் பேச்சு வேறேயா?

—•—

சாமீவேல்:—நீ எந்த மாதப் பத்திரிகையைத் தருவித்துப் படிக்கிருய்?

ஜான்:—இரவலிலேயே பார்த்துவிடுகிறேன். பத்திரிகைக்குள் இன்னும் கொஞ்சம் போட்டி ஏற்பட்டு ஒரு ரூபாய் சந்தாவுக்கு நூறு பக்கங்களாய் விட்டால் அப்போது ஒரு சமயம் வாங்கலாமென்று யோசனை.

—•—

—"அவர்தான் உனக்கு அவ்வளவு காரமாகக் கடிந்து எழுதினுரே; அவரை என் ஒன்றுக்குப்பத்தாகத் தூக்கி வைத்துப் பேசுகிருய்?"

—"அதற்கு மயக்கு வித்தை யென்று பெயர். இந்தப் புகழ்ச்சியிலே அவர் ஏமாறிவிடலாம்.

—•—

பத்மாவதி:—இவ்வளவு சீக்கிரம் என் மகன் பெரிய மனுஷி ஆகிவிடுவாளென்று எண்ணவில்லை. இனி இங்கு இரான். என்ன செய்வது?

பார்வதி:—பெரியபெண் ஆனுலும் கவலைதான்; ஆகாவிட்டாலும் கவலைதான். பேரன் பேர்த்தியை இனி சீக்கிரம பார்க்கலாமல்லவா?

—•—

தனது பெண்ணுக்கு நல்ல இடம் கிடைத்தவுடனே அந்த மமதையில் கர்வித்து எவரையும் லக்ஷியம் செய்யாதிருந்தோரின் கடைசி முடிவு எவ்வாறுனது தெரியுமோ? அந்த ஏமாற்றத்தை விவரித்தல் துயரப்பெருக்கே.

நாயகனுக்கு நாயகியும், நாயகிக்கு நாயகனும் உணவுக்குச் சுவை தரும் உப்புபோல் உள்ளார். இவர்களைப் பிரித்து விடிலோ உப்பற்ற பண்டமே.

கணவனின் ஆசைதீர அனுபவிக்கும்படி விடாமல் மறுத்துப் பெண்கள் தங்கள் தேகத்தை எதற்காகப் பத்திரப்படுத்துகிறுர்களோ? நாளைக்குப் பிடி சாம்பலாகும் சரீரம்தானே இது? கணவன் போயின் பிறகு அது எதற்கு?

படிப்பின் பெருமை.



மனிதர்களுக்குப் படிப்பே பெருந் துணையாம். அது அவர்களுக்கு எவ்வகை நன்மையையும் விளைவிக்கின்றது. எவர்க்கும் படிப்பு மிக மனக்களிப்பு உண்டாக்குகின்றது; ஓர் உயர்ந்த ஆபரணமாகின்றது; சிறந்த சாமர்த்தியமும் சம்பாதிக்கின்றது; ஏகாந்தமாய் உட்கார்ந்திருக்கும் பொழுது படிப்பு மிக்க மனமகிழ்ச்சி தரும்; பண்டிதர்களுடைய சபையிலே போய்ப் பிரசங்கம் செய்யும் பொழுது அத்தனையும் ஓராபரணமாகும்; யுக்தா யுக்தமறிந்து வியாபாரங்கள் நடத்துவதில் மிகத் திறமையுண்டாக்கும். அந்தந்த சமயங்களில் அததற்கு ஏற்றபடி யோசித்து நடப்பதும், நியாயாநியாயங்களை அறிந்து நியாயாதிகாரிகள் தீர்ப்பு செய்வதும், பின்னும் பற்பல காரியங்களைத் தக்கபடி நடத்துவதும்—இவை முதலியவெல்லாம் படிப்பினால் அமைந்த திறமையேயன்றி வேறென்ன? படிப்பில் நெடுநேரம் பொழுதுபோக்குவது சோம்பலாகும். அதை ஆபரணமாக அடிக்கடி உபயோகிப்பது மிகவும் இகழ்ச்சியாகும். படிப்பின் திறமையை அதிகமாக உபயோகிப்பதும் பொல்லாங்கு செய்வதாகும். படிப்பானது அவரவருடைய சுபாவசித்தமான குணங்களைப் பரிபூரணமாக்குகின்றது. இயற்கையான திறமைகள் இயற்கையாய் உற்பத்தியாகின்ற செடிகள்போன்றவை. படிப்பாகிய ஆயுதத்தைக்கொண்டு அவற்றின் தழைகளைக் கழித்துவந்தாலல்லது அவை செம்மையாக வளரமாட்டா. அந்தப் படிப்பையும் உலக நடவடிக்கைகளைக்கொண்டு ஒரு நிதானத்தில் நிறுத்தாவிடின் அதன் செய்கைகள் யாவும் அளவுகடந்ததாகிவிடும்.

ஃ

தந்திரசாலிகள் படிப்பைப் பகைக்கிறார்கள்; ஒன்றும் தெரியாத சாமானியர்கள் படிப்பைப் புகழ்கிறார்கள்; விவேகிகள் அதை உபயோகப்படுத்துகிறார்கள். விவேகிகள் தங்கள் புத்திக்குத் தோன்றியபடியே நடப்பதில்லை; பிறருடைய அபிப்பிராயங்களை நன்றாய்க் கண்டறிந்து அதற்கேற்க நடக்கிறார்கள். நாம் படிப்பது ஆக்ஷேபனை செய்வதற்கும், எதிர்த்துப் பேசுவதற்கும் அன்று; எதையும் உண்மையாக நம்பி அப்படியே அங்கீகரிப்பதற்கன்று; வீண் வாதாடிப் பொழுது போக்குவதற்கன்று; எதையும் ஆய்ந்து ஆலோசித்து யுக்தப்படி நடப்பதற்காகவே. ஃ

படிக்கவேண்டிய பல புஸ்தகங்களுள் சிலவற்றை ருசியை மாத்திரம் பார்த்து அறிந்துகொள்ளவேண்டும்; சிலவற்றை அப்படியே விழுங்கிவிட வேண்டும். சிலவற்றை நன்றாக மென்று தின்று ஜீரணப்படுத்திக் கொள்ளவேண்டும். அதாவது, இங்குமங்கும் உள்ள விசேஷங்களை மட்டும் கண்டறிந்துகொள்ளவேண்டிய புஸ்தகங்கள் சில; ஒருவாறு முழுதும் படிக்கவேண்டியவை சில; சிறிதும் தப்பாமல் முழுதும் மிக்க ஊக்கத்தோடு கருத்தாய்ப் படித்து முற்றும்

முடியும் என்று துணியின் எது முடியாதது? முடியாதது—விதியால்.

மறவாது வைத்துக்கொள்ளவேண்டியவை சில; பிறரைக்கொண்டு படிக்கச்செய்து அவற்றின் முக்கிய தாற்பரியத்தைமட்டும் எழுதி வைத்துக்கொள்ளவேண்டியவை சில; அற்ப விஷயங்களும் உபயோகமற்ற விஷயங்களும் உள்ள புஸ்தகங்களுமே இவ்விதமானவை. ஃ

படிப்பினுல் மனிதன் பூரணமாகிருன்; சிந்தனையினுல் சமுசயமற்றவனுகிருன்; எழுதுவதனுல் தவாற்றவனுகிருன். விஷயங்களை எழுதிவைத்துக்கொள்ளாதவனுக்கு ஞாபகசக்தி விசேஷமாக வேண்டும். சிந்தனை செய்யாதவனுக்குப் பிரீதியை அதிகமாக்கவேண்டும். படியாதவனுக்குத் தான் படியாதவனல்லவெனப் பார்ப்போரைப் பிரமிக்கச் செய்ய சூது விசேஷமாக வேண்டும்.

ஃ

சரித்திரங்களைப் படிப்பதனுல் மனிதர்களுக்கு ஞானம் அதிகமாகும். காவியங்களைப் படிப்பதனுல் சாதுர்யம் அதிகமாகும். கணிதத்தில் பழகுவதனுல் புத்தி சூக்ஷ்மம் உண்டாகும். பிரகிருதி தத்துவ சாஸ்திரங்களைப் படிப்பதனுல் ஆழ்ந்த அறிவும்—நியாய புத்தியும் உண்டாகும். தர்க்க சாஸ்திரமும் அலங்கார சாஸ்திரமும் படிப்பதனுல் வாதம் செய்யத் திறமையுண்டாகும். ஃ

புத்திசாதுர்யத்திற்கு எவ்விதமான இடையூறுமில்லையென்ருலும், படிப்பைக்கொண்டு அதை மிகவும் சீர்திருத்தலாம். சரீரத்தில் உண்டாகும் உபாதிகளுக்குப் பலவிதமான தேகப்பயிற்சி பண்ணி பரிகாரம் செய்வதுபோல், புத்தி செம்மைப்படுவதற்கும் பயிற்சி செய்யலாம். பந்தாடுவது குடல்களுக்கும், வில்லடித்து வேட்டையாடுவது சுவாசப்பைக்கும், இருதயத்திற்கும், மெதுவாய் உலாத்துவது இரைப்பைக்கும், சவாரி செய்வது சிரசுக்கும் வலிவு தரும். இப்படியாகச் சரீரப்பயிற்சிகள் பலவுள.

ஃ

அதே விதமாகவே புத்திநிலையில்லாமல் அல்லாடுகிறவன் கணித சாஸ்திரம் படிக்கலாம். அதில் உள்ள நியாயங்களை நிரூபித்துக்கொண்டிருக்கும்பொழுது புத்தி சிறிதளவு சலிக்குமானுல் மறுபடியும் அடியைப் பிடிக்க வேண்டியதுதான்; அதாவது மறுபடியும் முதலிலிருந்து அந்த ஆராய்ச்சி தொடங்கவேண்டுமென்பது பொருள். பகுத்தறியும் திறமையில்லாதவன் உபாத்தியாயத் தொழிலைக் கற்கலாம். இவ்வாறே ஒவ்வொரு விதமான மனக்குறையை மாற்ற ஒவ்வொரு வழியுண்டு. படிப்பிலே திறமையுள்ளவர்கள் வியாசம் எழுதும்பொழுது தாங்கள் கற்ற கலவியின் ஆழத்திலிருந்து பொறுக்கிச்சேர்த்து சிரமப்பட்டுக் காரியத்தை முடிப்பார்கள். படிப்புடன் லோக அநுபவமும் வாய்ந்தவர்கள் அந்த அநுபவத்துடன் படிப்பு பின்தொடர்ந்துவரும்படியாகச் செய்துகொண்டு யாதொரு சிரமுமின்றி வெகு சுலபத்தில் வியாசம் வரைவர். ஃ

யாரோ சில கொடியர்களுக்குப் படிப்பு பொல்லாங்குக்கு ஏதுவாகிறதென்ருலும், வெகுவாகக் கொடுமை, முரட்டுத்தன்மை, மடமை முதலிய குற்றங்களை நீக்கி, ஐயம் திரிபு அற எல்லா விஷயங்களையும் எளிதாக விளங்கச் செய்கிறது. கடைசியாக, படிப்பு சன்மார்க்கத்துக்கு அடுத்ததாக நின்று, அந்த சன்மார்க்கத்தைச் சிறப்பிக்கத்தக்கவிதமாக அதை நாம் பயிற்சி செய்துகொள்ள ஒவ்வொரு நாளும் முயலவேண்டியது.

———



பதிபசு பாச விளக்கம் :—

[மொழி பெயர்ப்பாசிரியர் ஸ்ரீமான் D. கோபால செட்டியாரவர்கள். உயர்ந்த கிளேஸ் காகிதப் பதிப்பு. விலை வெகு சகாயமாக ரூ. 1-8-0. டபிள் கிரௌன் 1x16 அளவில் 504—பக்கங்கள் கொண்டது.]

இது உயரிய வேதாந்த நூல். ஸ்வீடன் தேசத்தில் திருவருள் பெற்ற அரும்பெறல் அனுபூதிமானாகிய சுவாமியார் ஸ்வீடன்பர்க் என்பவரால் கி. பி. 1763-ம் வருஷத்தில் லத்தீன் பாஷையில் இந்நூல் இயற்றப்பட்டது. இது சிவஞான போத கோட்பாடுகளுக்கு ஓர் பெரும் பாஷியமாகவே யிருக்கிறது. அன்பே சிவம் என்பதும், பதி, பசு, பாசத்தின் தன்மைகள் உறவுகள் முதலியனவும் இந்நூலில் அதியற்புதமாய் விவரிக்கப் பெற்றுள்ளன. எத்தனை சுலபமாகத் தெளிவுபடுத்தி யிருப்பினும், இது 'வேதாந்த நூலாதலின் சாமான்ய அறிவுடையார்க்கு விளங்குதல் கஷ்டம். நடை அதிசுலபமா யிருப்பினும் எடுத்தாளும் விஷயங்கள் மகத்தான ஞானுனுபவங்களாதலின் ஊன்றி வாசித்தால்தான் விளங்கும். இதன் நயமான விலையும் குறிப்பிடத் தக்கது.

இராமாமிர்தம் எம். ஏ.,

ஆசிரியர் ஸ்ரீமான் K S. சுந்தரம் அவர்கள் இயற்றியது. விலை அணு 4. டபிள் கிரவுன் 1x16-ல் 22-பக்கங்கள்.

இராமாமிர்தம் என்ற பிராமண வாலிபர் எம். ஏ. பட்டம் பெற்றும், லௌகிக ஞானக் குறையாலும், போதிய அதிர்ஷ்டம் இன்மையாலும் ரூபாய் 40சம்பளத்திற்கு ஒப்புக்கொள்ளும் பரிதாபமான காட்சியை இந்த நாடகம்விவரிக்கின்றது. வியாபாரத்திலாகட்டும், உத்தியோகத்திலாகட்டும் விருத்தி கொள்ளக்கூடிய அதிர்ஷ்டசாலிகள் விருத்தியடைந்து விடுகிறார்கள். அந்த அதிர்ஷ்டம் இல்லாதவர்கள் எவ்வளவு உயர முயன்றும் சித்திக்கிறதில்லை.

பர்மிய பால போதினி:—

[ஆக்கியோன் : ஸ்ரீமான் சி. நாகையா அவர்கள். முதல் பாகம் பக்கம் 16. அணு 4. இரண்டாம் பாகம் பக்கம் 16. அணு 4. இரங்கூன் நவீனகதா புஸ்தகசாலைப் பதிப்பு.]

பர்மாவுக்குச் சென்று பண மூட்டை கட்டிக்கொண்டு திரும்பும் அதிர்ஷ்டம் குறித்த ஒரு சிலருக்கே கிடைக்கிறதாயினும், பொதுவில் கல்வியை உத்தேசித்து இந்நூலின் முதல் இரண்டு பாகங்களையும் அப்பியஸிக்கலாம். பர்மிய எழுத்துகளுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும், உச்சரிப்பு விவரங்களும், பர்மிய பதங்களுக்குப் பொருளும் விவரமாகக் கொடுக்கப் பட்டுள்ளன. ஆசிரியர்

"அவரா ?—அன்னதாதா ! ஆபத்ஸகாயி! இன்னலறுத்தோன்! நகையாளன் ! உண்மை நேசன் ! ஊரெல்லாம் புகழ்வோன் ! எண்ணருந் தயாளன்! ஏழைகள் தஞ்சம்"—என்று உன்னைச் சொல்லும்படி பெயர் பெறு.

இதனை ஆக்கிய சிரமம் போற்றற்பாலதே. ஆனால், வருந்திக் கற்கார்க்கு எதுவும் வாராது. முயற்சியுடையாருக்கு இச்சிறுநூல் போதும். புஸ்தகக் கல்வி எவ்வளவு பெறினும், ஜனங்களிடை பழகியறியும் வழக்கக் கல்வியில்லாவிடில் ஏட்டுக்கல்வி எதற்கும் பயன்படாது.

அண்டிமேன் (On Demand):—

[மோல்மேன் ஹையர் கிரேட் பிளீடர் ஸ்ரீமான் V. இராமசாமி பிள்ளை அவர்கள் இயற்றியது. இரங்கூன் நவீனகதா புஸ்தகசாலைப்பதிப்பு. டெ-கி. 1x16. 84 பக்கங்கள். அணா 8.]

அண்டிமென் அதாவது பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துக் கடன் வாங்குவதும், எழுதிப் பெற்றுக்கொண்டு கடன் தருவதும் குடும்பத்திலாகட்டும், வியாபார உலகிலாகட்டும் ஸர்வசாதாரணம். இது சம்பந்தமான சட்டவிதிகளை ஜனங்கள் அறிந்திருந்திருப்பின் மோசம் போக ஏது விராது. இந்நூலில் இதைக் குறித்த சட்ட அமிஸங்களையும் கையெழுத்திடும் முறைகளையும் அநுபவபூர்வமாய் விவரித்து, கோர்ட்டுத் தீர்ப்புகளின் குறிப்பும் காட்டப்பட்டுள்ளது. பொதுஜனங்கட்கு இது விசேஷமாகப் பயன்படுமென்று நம்புகிறோம்.

தாசில்தாரும் குதிரையும்.

பல வருஷங்களுக்கு முன் பம்பாயிலுள்ள கமிஷனர் ஒருவர் தமது குதிரையை ஜாக்கிரதையாகப் படகிலேற்றி ஆற்றின் அக்கரையில் சேர்க்க வேண்டுமென்று ஒரு தாசில்தாருக்கு அறிவித்தார். உடனே தாசில்தார் ஒரு படகோட்டியைக் கூப்பிட்டு, அக்குதிரையை ஜாக்கிரதையாய் அக்கரை சேர்க்கும்படி உத்தரவு செய்ததும், அவ்விதமே படகோட்டி அக்குதிரையைப் படகிலேற்றிக்கொண்டு போக, தற்செயலாக அக்குதிரையானது ஆற்றோடு போய்விட்டது. ஆகவே, கமிஷனர் கோபங்கொண்டு, "ஆறுகளே யில்லாத இடத்தில் இருந்தால், குதிரையை ஜாக்கிரதையாகப் படவிலேற்றிக்கொண்டு போகவேண்டிய அவசியம் இராது. ஆதலின், பொட்டல் காடான ஓரிடத்திற்கு மாற்றியிருக்கிறோம்" என்று உத்தரவு செய்துவிட்டார். அவ்விதமே தாசில்தார் அந்த இடத்திற்குப் போய், குதிரையைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதும் உத்தியோகக் கடமைபோலெண்ணி "எவ்வளவோ பக்தியுடன் உழைத்தும் பலன் இதுதானோ?" என்று வருந்துவதானார். அங்குள்ள அனைவரும், சரி, கமிஷனருடைய குதிரையை ஜாக்கிரதையுடன் கொண்டுபோகாததற்குத் தகுந்த பிராயச்சித்தம் தாசில்தாருக்குக் கிடைத்தது என்று அறியலானார்கள்.

சுபாவ சுத்தி

நற்குண நற்செய்கை அனைத்திற்கும் மூல காரணமாய் இருக்கின்ற குணம் சுபாவ சுத்தியே. எப்படியெனில், தனக்கு வேலைக்காரி ஒருத்தி வேண்டுமென விரும்பி அவள் குணங்களைக் கேட்கப் புகுந்த ஒருவன் ஊக்கம், பொறுமை, பரிசுத்தம் முதலிய பல நற்குணங்கள் உடையவளென்றாலும், சுபாவ சுத்தியொன்று இல்லையெனக் கேட்டால், அவளிடத்தில் உள்ள உத்தமகுணம் அத்தனையும் உபயோகமற்றதென நினைப்பான். ஆதலின், சவுக்கியமும் செல்வாக்குமாக வாழ்நாளைக் கழிக்க விரும்புகிறவர்கள் எவ்விஷயத்திலும் அணுவளவும் பிசகாது யதார்த்த வாதியாயிருக்க வேண்டு மென்பதை இளமை முதற்கொண்டே அப்பியாசப்படுத்த வேண்டும். சுபாவ சுத்தியாவது ஒருவனுக்கு இயற்கையிலேயே பரிசுத்தமான தன்மை ஏற்பட்டிருப்பதாம். அவனுடைய நெஞ்சு களங்கமற்று வெள்ளைமனமாக இருப்பதாகும். இவ்விதமாக சுபாவ சுத்தியுடன் இருப்பதில், அது தூக்குமரம், சிறைச்சாலை இவைகளுக்கு ஆளாக்கத்தக்க துர்க்குணங்களை மட்டுமே விலக்கி நிற்பதன்று; அற்பமேனும் மகத்தேனும் மோசத்திற்குக் கிஞ்சித்தும் இடம் கொடாமல், தீயவழியில் ஒன்றைப் பெறவோ, திரவியம் சம்பாதிக்கவோ வேண்டு மென்னும் ஆசையை முற்றுந் துறந்த மாசற்ற மனநிலையாம். ஃ

கோபாலனென்னும் ஒரு சிறுவன் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை மாற்றிக் கொண்டு வருவதற்குக் கடைக்குச் சென்றான். கடைக்காரன் அவசரத்தில் அவன் நோட்டை வாங்கிக்கொண்டு ரூபாயும் சில்லரையுமாகப் பணத்தைக் கொடுத்தனுப்பினான். வீட்டிற்கு வந்து பார்க்கையில் அரைரூபாய்க்குப் பதிலாக ஒரு சவரன் இருக்கவே உடனே கடைக்கு ஓடிச் சென்று, "ஐயா! நீங்கள் கொடுத்த பணத்தில் தப்பிதமிருக்கிறது" என்று சொல்ல, அதற்குக் கடைக்காரன் நான் சரியாகத்தான் தந்திருப்பேன்; நீ கீழே எங்கேயாவது போட்டிருக்கலாம், போ போ என்றான். அதற்குச் சிறுவன் நான் பத்திரமாகவே கொண்டுபோய் வீட்டில் விளக்கின் அருகில் பார்த்தேன் என்று சொல்லுகையில், கடைக்காரன் என்னகுறைந்தாலும் நான் ஒப்புக்கொள்ள முடியாது போபோ என்றான். இந்த சச்சரவைக் கடையின் எஜமானன் கேட்டு, "பிள்ளாய்! என்ன குறைகிறது?" என, கோபாலன்! "ஒன்றும் குறையவில்லை ஐயா! அரை ரூபாய்க்குப் பதில் ஒரு சவரன் இருந்தது; அதை எடுத்துக்கொண்டு அரை ரூபாய்கொடுங்கள் என்றான். அதைக் கேட்ட எஜமானன், "அப்படியே தருகிறேன் அப்பா! உன் உத்தம குணத்தைக் காண எனக்கு அதிக சந்தோஷமாகின்றது. உன்னைப் பார்க்கையில் மிகவும் எளியவனாகத் தோன்றுகிறதே. இந்தப் பணத்தை

"ஒரு நாளைக்கு ஒன்பது சண்டை தொடுக்கும் கள்ளி! நீ எனக்கென்று எங்கிருந்து மனைவியாக—எமனாக—வந்து முளைத்தையோ பாவி!"

நீயே வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசையுண்டாகுமே யல்லது, கொடுத்துவிட வேண்டுமென ஒரு போதும் எண்ணம் உண்டாகாதே; அந்த ஆசையை நீ எப்படி மறந்தாய் மகனே!" என்று பிரியத்தோடும் கேட்டான். ஃ

அதுகேட்ட அச்சிறுவன் "ஐயா! பிறர் நமக்கு எவ்விதமாகச் செய்ய நாம் விரும்புவோமோ அவ்விதமே நாம் அயலார்க்குச் செய்வது நமது கடமை என நான் ஆதிமுதல் அப்பியாசம் செய்திருக்கிறேன். நான் ஏமாந்து அயலார் கையில் ஒரு காசு கொடுத்தாலும், அதை அவர் நம்மிடம் கொடுத்துவிட வேண்டுமென்பது என் அபேக்ஷை; அவ்விதமே பிறர் ஏமாறித் தந்ததை நானும் அவர்களிடம் சேர்ப்பித்துவிட வேண்டுமென்று எண்ணப்பட்டவன். அதிலும் இத்தன்மையான பெருந்தொகைக்குக் கேட்க வேண்டியதில்லையே! ஆனதுபற்றியே இதை நாமே வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் துராசை மனதில் தோன்றுவதற்கு முன்னமே யான் இதை இவ்விடத்திற்கு எடுத்துக்கொண்டு விரைந்தோடி வந்தேன்" என்றான்.

ஃ

அதைக் கேட்டு எஜமானன் "இச்செய்கையினால் உன் விவேகமும் பெருந்தன்மையும் பிரத்தியக்ஷமாகின்றன. இவ்விதமே என்றும் நியாய மார்க்கத்திலேயே உன்னை நடத்தி வரும்படியாக நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். இந்த உன் உபகாரத்திற்கு என்னிடத்திலிருந்து நீ என்ன விரும்பினாலும் நான் கொடுக்கிறேன்" என்றான். அதற்கு அச்சிறுவன் என்னைத் தாங்கள் யோக்கியன் என்று அறியவேண்டுவதொழிய வேறில்லை" என்றான். அதுகேட்டு எஜமானன் உன் யோக்கியதையை அறிய இப்போது நீ நடந்து கொண்டதே போதுமானதால் நீ விரும்பினால் என் கடையில் காலியாக இருக்கும் ஒரு வேலைக்கு உன்னை நியமித்து விடுகிறேன்; முன்னமே ஒருவன் இவ்வேலைக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறான். அவன் தேகவலுவும் சுறுசுறுப்பும் சாமர்த்தியமும் உள்ளவனாம். மிகத் தந்திரசாலி யென்று அவனை இதற்கு முன் வேலையாளாக வைத்திருந்தவன் சொல்லுகிறான். தந்திரம் என்கிற பெயரே என்னிடத்தில் உதவாது. தந்திரமுள்ளவன் கபடமுள்ளவனே. உன் பெற்றோர்கள் ஒப்பினால் உன்னை இங்கு வைத்துக்கொள்கிறேன். இத்தருணத்தில் கண்ட உன் நடக்கையே உனக்கு யோக்கியதா பத்திரமாகும். உத்தம குணங்கள் அனைத்திலும் "சுபாவ சுத்தி"யையே நான் ஸர்வோத்தமமாக நினைப்பவன்" என்றான். ஃ

மறுநாட் காலையில் அச்சிறுவன் பெற்றோர்களின் சம்மதத்தின்பேரில் அந்த எஜமானனிடம் வேலையாளாய் அமர்ந்து நம்பிக்கை, நாணயம், சுறுசுறுப்பு முதலிய நற்குணங்களால் எஜமானனுக்குத் திருப்தியாக நடந்து கொண்டு நாளடைவில் மேன்மையான நிலைமையை யடைந்து சுகமாக வாழ்ந்திருந்தான். இதனால் சுபாவசுத்தியின் சிரேஷ்டமும் அவசியமும் ஒருவாறு விளங்கும்.

தாமே வஞ்சக சமுத்திரமா யிருந்து கொண்டு நிரபராதியான ஒரு பேதையின் மீது அபாண்டமான பழியைச் சுமத்திவிடும் அநியாயக்காரர்கள் எத்தனை பேர்?

வாழ்க்கைக் குறிப்புகள்.

1. ஒவ்வொருவருக்கும் இயற்கையாக உள்ள ஸ்திரீ புருஷ உணர்ச்சி, அவர்களுடைய உற்பத்தி மனோபாவத்தின் ஒரு அம்சமாகவே இருக்கிறது. இந்த உற்பத்தி உணர்ச்சியை (அதாவது, தன்னையொத்த ஒன்றை ஜெனிப்பிக்கத் தூண்டும் உணர்ச்சியை) கலைவழியில் செலுத்திவிட்டால் சரீர சம்பந்தமான உணர்ச்சி அதற்கு கட்டுப்பட்டதாகிவிடுகிறது. விச்சையின் வழியே மனம் பிரவர்த்தித்து ஒன்றை நுட்பமாய் ஆராயச் சென்றுவிட்டால் காமசம்பந்தமான உற்பத்தி உணர்ச்சி அங்குக் குறைவுபட்டுப் போகிறது. ஆனால், தற்போதைய கல்வியின் நிலையிலோ, அதன் ஆராய்ச்சி வழியிலேயே சிந்தையைச் செலுத்தி, அந்த வித்தியா ஞான அநுபவிப்பிலேயே மயங்கியிருந்துவிடக்கூடியதான,——— புதிய சாஸ்திரீயக் கருத்துகளை உலகினிடை தோற்றுவிக்க—ஜெனிப்பிக்க வல்லதான,—உற்பத்தி உணர்ச்சி குறைவுபட்டுப் போயிருப்பதால், குறைவாகவே இருப்பதால், அதில் புத்தி செல்லாமல் ஸ்திரீ புருஷ உணர்ச்சியிலேயே சிந்தையூன்றிப் போய் அந்த உணர்ச்சியே எங்கும் அதிகமானதாகிவிட்டது. கலைவழியிலே ஒருவன் பெறக்கூடியதான மானஸீகமான உணர்ச்சி யில்லாததால், சரீர உணர்ச்சி அதிகரித்துவிட்டது. சரீர உணர்ச்சியின் விளக்கநூலான மதன சாஸ்திர பாராயணமே தற்போது நித்தியானுசந்தானமாக முடிந்துவிட்டது. இந்த சரீர உணர்ச்சியானது நல்லவழியிலுங்கூட அடியோடு மாறுதல் ஏற்படும்படி செய்துவிட்டது. அதன்பயனாக, கற்பழித்தல், ரகசிய சோரம், விபசாரம், முறைதவறிய சேர்க்கை, ஸ்திரீ புருஷ ஸம்சயம்—இவைபோன்றன யாவும் வாழ்க்கையில் பெருகிப் போயின. ஸ்திரீயின் உருவம் காமதாக சாந்திக்கான ஒரு கருவியாக மட்டுமே மதிக்கப்பட்டுப் போகும்படியான அத்துணைக் கேவல நிலையில் சரீர உணர்ச்சி தர்ம நியாயங்களை ஒருபுறம் தள்ளி மிதம்மீறிக் கெட்டுவிட்டது. ஸ்திரீபுருஷ வாழ்க்கையிலே அநேகமாய்த் தற்கால நிலை இதுவே.

2. திடசரீரியான ஒருவனது சுவாசாசயத்தில் சுவாசிப்பதற்கான காற்று சுமார் 200-அங்குல கனம் வரையும் தங்கியிருக்கிறதாயினும், சுவாசிப்பின்போது வெளிவருவது 30-அங்குல கனமுள்ள காற்றுதான். பெரும்பான்மையான காற்று உள்ளுக்குள் அடங்கி பிராணதாரமாய் நிலைத்து நிற்கின்றது. தேகசம்பந்த காலத்தில் சிலருக்கு இந்த சுவாசிப்பு மிதமீறிப்போய், அந்த அளவுகடந்து விடுகிற மூச்சின் சப்தம் மற்றவர் செவியிலும் படக்கூடியதாய்விடுகின்றது. இதன் காரணம் அவர்களது ஹிருதயம், குண்டிக்காய், ஈரல் முதலிய இராஜகருவிகளிலே நோய் பிடித்தும், மெலிந்தும், பலஹீனம் மிகுதிப்பட்டுப்போயும், அதன் மூலமாக அந்த சோர்வு ஜனனேந்திரியங்களையும் தாக்கிவிடுவதுமேயாகும். தேகசம்பந்தகாலத்திலும் சரி, ஏனைய காலங்களிலும் சரி, பலஹீனமான தேகிக்குத்தான் சுவாசம் அதிகமாக வெளிப்படும். போதிய தேகபலமுள்ளவன் மிதமாகவே சுவாசம் விடுவான். அதுவும் அவனறியாமலே நடந்துகொண்டிருக்கும். மூக்கினால்

சுவாசம் இழுத்துவிடுவதில்தான் தேகாரோக்கியம் அடங்கியிருக்கிறது. பலஹீன சரீரி மூக்கினால் சுவாசம் இழுத்து வெளியில்விட அசக்தனாய் அடிக்கடி வாய்மூலமாய்விடுகிறான். இது அவனது தளர்ச்சிபட்டுவிட்ட சரீர அவயவங்களின் கேவல ஸ்திதியைக் குறிப்பிடுகின்றது.

3. இரத்தமே சரீரத்தின் மூலாதாரம். அது தேகமுற்றும் ஓடிப் பாவுவதைப் பொறுத்து ஆரோக்கியமும் இருக்கிறது. இந்த ரத்தம் பெரிய நாடிகளுக்குள் ஒரு விநாடிக்குப் பதினோரு அங்குலவீதம் சென்று வியாபிக்கின்றது. ஆனால் அதிசூக்ஷ்மமாய் அமைந்துள்ள சின்னஞ்சிறு நாடிகளுக்குள் இந்த ரத்தம் ஒரு அங்குலம் செல்வதற்கு இருபது விநாடிகள்வரையில் ஆகக்கூடுமாம். சுத்தமான ரத்தம் போதுமான அளவு இருந்தால்தான் நுட்பமான நாடிகளுக்குள் விரைந்துவருதற்குக் கூடும். பத்து துளி ரத்தம் ஒரு துளி இந்திரியமாவதால், ரத்தத்தினது சுகநிலையையும் அதன் பெருக்கையும் பொறுத்தே தேகசம்பந்த சுகானுபவமும் அடங்கியுள்ளது. இரத்தம் கெட்டுவிடில் சம்பந்தகாலத்தில் இன்பமே தோற்றாது போய்விடும்.

4. நரம்புக் கூட்டங்களால்தான் தேகம் நிர்மாணமாய் இருக்கின்றது. ஜனனேந்திரியக் கருவிகளில் நரம்புகளின் திரள்களே மிகுதி. அவை வெகு நுட்பமானவை. ஒருவன் ஒரு யுவதியைப் பார்க்கின்றான். அவளது லாவண்யம், ரமணீயமான காந்தி, முகவிலாஸம் இவைகள் அவனது மனதைக் கவர்கின்றன. உடனே இச்செய்தியை மூளைக்குத் தெரிவிக்க ஒரு கூட்ட நரம்புகள் ஓடுகின்றன. இவ்விதம் செய்தி தெரிவிக்கும் நரம்புகள் ஒருவகை. இச்செய்தி மூளைக்கு எட்டியதும், அங்கிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை அந்தந்தக் கருவிகளுக்கு அறிவித்து அவ்வவை செய்யவேண்டிய வேலைகளுக்குத் தூண்டுதல் புரிபவை மற்றொரு வித நரம்புக்கூட்டங்களாகும். இதன் பயனாக, அவன் அந்த சுந்தரியினிடத்துக் காமபரவசனாகி அவளை இச்சித்து அதற்கான குறிகளைத் தன் அங்கத்திலே தோற்றுவித்துக்கொள்கின்றான். இதன்பின்பு அவன் அந்த ரமணீமணியை நெருங்கிச் செல்வதற்குக் கால்கள் விரைவான நடையைத் தருகின்றன; கைகள் அதற்கேற்ற அபிநயங்களைச் செய்கின்றன; நாவும் வாயும் தான் கற்றிருக்கும் வசிகர வார்த்தைகளைக் கொட்டுகின்றன. எட்டிப்பிடித்துத் தாவப் புத்தி போகின்றது. இத்தனைக்கும் பொருத்தமாக அந்தந்த அவயவங்களை ஆட்டங்கொள்ளும்படி ஏவிவிடுவது வேறொரு நரம்புக்கூட்டங்களின் வேலை. இனி அந்த யுவகனும், யுவதியும் பரஸ்பரம் காதலாகி மனது பொருந்தி ஒன்றுபட்டுக்கொள்ளுங்காலையில் அதுசமயம் தேக அவயவங்கள் செய்யவேண்டிய வேலைகளில், ஒரு ஒழுங்கு, ஒரு கிரமம், ஒரு அளவு இவைகளுக்குள் அவ்வவற்றை அடக்கி நிதானமான ஆட்சி நடத்தும் ஊழியத்தை இன்னொருவகையான நரம்புகள் தம்மிடத்தே கொண்டுள்ளன. இவ்வாறாக இந்த நரம்புக்கூட்டங்கள் நான்கு வகையான காரியங்களைச் செய்வித்துத் தேகத்தைத் தாங்கி நிற்கின்றது. வீரிய ஸ்கலிதத்துடன் திருப்தி ஏற்பட்டுவிடும்படியாக நரம்புகள் தூண்டிவிட்டுச் சிற்றின்பத்தை ஒரு அளவுக்கு உட்படுத்தி வைத்திருப்பது எவ்வளவு ஆச்சரியகரமான வேலையெனலாம்.



நமது கடையில் இன்று ஊறுகாய்ச் சித்தர் "உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்" என்பதைப்பற்றிப் பேசினார். "புருஷனுடன் வாழாமல் மாமியுடன் பெரும் போரிட்டுக்கொண்டு தன் தாய் வீட்டுக்கு வந்திருந்த பெண்ணை யருகில் வைத்துக்கொண்டு ஒரு அம்மாள் ஊர் கதையை மென்றுகொண்டிருந்தாள். அதில் இந்த வாழாப் பெண்ணும் சேர்ந்து தாளம் கொட்டி நின்றாள். அந்த சமயம் பக்கத்து வீதியிலுள்ள பெண் தன் புருஷனின் கைவிரலைக் கடித்துவிட்டதான சங்கதியை ஒரு சுந்தரி வெளியிட்டாள். அதற்கு வாழாப்பெண் ஆ! இப்படியும் கொண்டவன் கையைக் கடிப்பாளா என்றும் பழித்து, முகத்தை ஒரு முழநீளம் இழுத்துக் காட்டினாள். இதைக் கண்ட அவள் தாய், போதுமடி, நீ பேசுவதை நிறுத்து; புருஷன் கையைக் கடித்த பெண் உன்னைப்போல் வாழாவெட்டியல்ல, மாமியுடன் சண்டையிட்டுத் தாய் வீடு போனவளுமல்ல, புருஷனிடம் சொல்லாமல் ஓடிவந்து விட்டவளுமல்ல, எவ்வளவோ நல்ல பெண்ணை இரண்டாந்தாரமாகத் தள்ளினார்கள்; அவள் தன் புருஷனின் அடிகளைத் தாங்கச் சக்தியில்லாமல் ஆத்திரத்தால் விரலைக் கடித்தாள். அவரும் அதற்குப் பிறகு அடிக்காமல் மௌனமாய்ப் போய்விட்டார். பிறகு அவளே தான் கடித்தவிரலுக்குச் சுண்ணாம்பும் மஞ்சளும் தடவி, துணி சுற்றிவிட்டு, தன் செய்கைக்கு வருத்தப்பட்டுக் கொண்டாள். அவள் செய்த தப்பிதம் என்ன தெரியுமா? 10-வயதுள்ள மூத்தாள் மகனுக்கு அன்னமிடக் கூடாதென்று வீட்டுக்காரர் திட்டம் செய்தார். அவனோ தன் தந்தையில்லாத சமயம் கொல்லைப் பக்கமாய் வந்து இவளிடம் சாப்பிட்டுவிட்டு ஓடிவிடுவான். இப்படிப் பத்துநாளாக நடந்து கொண்டிருக்க, இன்று கொல்லைப் பக்கத்தில் அவனுக்கு இவள் சாதம் போடுகையில் வீட்டுக்காரர் அங்கே வந்துவிட்டார். தன் உத்திரவு மீறி எப்படி அன்னம் போடலாமென்று அவர் கேட்க, அதற்கு அவள், பாவம்! தாயில்லாப் பிள்ளை, என்ன செய்தாலும் பொறுத்துககொள்ளத்தான் வேண்டும் என்றாள். நீயா எனக்குப் புத்தி சொல்வது என்று ஓங்கிப் பல அடிகள் அடிக்க, அவர் குமாரன், அதைத் தாளாமல் அவர் கால்களைப் பிடித்திழுக்க, இவள் அவர் கைவிரலைக் கடித்தாள். அவரும் தான் கோபித்தது ஒழுங்கல்ல என்று வெளியில் போய்விட்டார். இதில் அந்தப்பெண் என்ன கெட்டுப்போனவள்?—என்ன துற்குணம் அவளிட மிருந்ததென்று நீ பழிக்கிறாய்? மூத்தாள் குமாரனைத் தன் வயிற்றுப்பிள்ளையாக நினைத்து அவனுக்காகக் கணவனிடம் அடிபட்ட உத்தமியைப் பழிக்கிறதற்கு உனக்குத் தகாது என்று இடித்துக்

கண்டோர் நகைத்துக் காரியுமிழ உடம்பு எடுப்பானேன்? கொண்டவன் குடிக்குச் சனியன் ஆனதேன்?

காட்டவே, 'உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்' என்பது போல வாழாப்பெண்ணும் தன் முகத்தைக் கோணிக்கொண்டு எழுந்து போய் விட்டாள். இவ்விதமே ஊர் சங்கதி என்றால் வெகு தித்திப்பாகப் பேசுகிறார்கள்; கேட்கிறார்கள், அதற்காகவே ஒரு கூட்டமும் போடுகிறார்கள். ஆனால், அதில் தன்னையே ஒருவர் குறிப்பிட்டுப் பேசி விட்டாலோ உடனே ஆத்திரப்படுகிறார்கள் அவன் குடிகாரப்பயல் என்று ஒருவர் நால்வருக்கு மத்தியில் பேசுகிறார். நீரும் ஒரு குடிகாரர்தானே என்று அந்த சமயம் அங்குள்ள ஒருவர் நடுவில் கேட்டுவிட்டால் உடனே கோபம் பொங்கிக் கொள்கிறது" என்றார்.

ஃ

"உள்ளது சொன்னால் யாருக்கும் நெஞ்சு வேகும்தான். உண்மைக்கு எந்த நாளிலும் எங்குமே உதை தான். தன் அத்தை ரகசியமாய் விபசாரம் செய்வதை யறியாத ஒரு பையன் ஒருநாள் தன்னையவள் அடித்து விட்டதற்கு அவளைத் தட்டுவாணி என்று வைதான். தான் வைத பதத்திற்கு என்ன பொருள் என்பதை அந்தச் சிறுவன் எதுமே அறியான். ஆயினும், தனது விபசாரத்தைக் கண்டுபிடித்து அவன் தட்டுவாணி என்று எசியதாக அத்தை அதைப் பிரமாதச் சொல்லாக எண்ணிக் கனத்த கோபம் கொண்டாள். இதுபோலவே உண்மையான சங்கதியைத் தெரியாதவிதமாகவே சொன்னாலுங்கூட, அது குற்றமுள்ளவர்களின் நெஞ்சைக் குத்தித் தொளைத்து வாட்டுகிறது. அதற்கு யாரென்ன செய்யலாம்" என்று உக்காபிரதர் உரைத்தார்.

ஃ

"உறவு தான் பயிரில் கை போடாதே" என்பதுபோல, வெகு உறவும் நேசமுமாகப் பேசிக்கொள்ளும் கூட்டத்திலேகூட, அவரவர்களின் சொந்தச் சங்கதியாகிய பயிரிலே கை போடாமல் ஜாக்கிரதையாய்ப் பேச வேணுமென்றும், அந்த சமயத்தில் எவரையும் சுட்டிக் காட்டிப் பேசிவிடக் கூடாதென்றும், அப்போது தான் பேச்சுக் கூட்டமும் நீண்டு சந்தோஷமாக முடியுமென்றும் தாண்டவக்கோன் சாற்றினார்.

ஃ

"வியாதியோ, அபாயமோ இன்னாருக்குத்தான் உண்டு, இன்னாருக்கு இல்லையென்று ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? பிறருடைய ஆபத்தான வியாதி காலங்களில் பக்கத்திலிருந்தும் எட்டிப் பார்ப்பதில்லை. அருகிலிருந்துங்கூட வருவதில்லை. அந்த சமயம் இராவானால் தூங்குவது போல் பாசாங்கு போடுவது! என்ன விரோதம் பகையிருந்தாலும், அபாய நேரத்தில் யாவும் மறந்து உதவி புரியாத ஜன்மம் இருந்து எதுக்கு? அந்த நிமிஷத்தில்தான் பழய சங்கதிகளையும் கலகங்களையும் ஞாபகப்படுத்திக்கொண்டு, "அப்படித்தான் வேண்டும்" என்று உள்ளுக்குள் வைது கொள்கிறார்கள். இது மனுஷ்ய ஜன்மங்கள் செய்கிற வேலையல்ல, மிருகங்களிலும் கீழ்பட்ட, கடைபட்ட ஜென்மங்களின் காரியமாகும். இவ்விதம் பிறரது நோயிலோ, ஆபத்திலோ சந்தோஷிப்போர் தங்களுக்கு எந்தப் பிணியும், அபாயமும் நேரா

இவ்வுலகிலே சொற்ப வாழ்வு. மேலுலகிலோ நித்ய வாழ்வு. எனினும், இவ்வுலகில் தனக்குரிய கடமையை முற்றிலும் செய்த நீர்க்காவிடில் நித்திய வாழ்வு அரிது. சோம்பேரிக்கல்ல நித்திய வாழ்வு; உழைப்பவனுக்கே அது.

தென நம்புகின்றார்களா ? ஆம் தங்கட்கு வாரதென்பதே அவர்களின் நிச்சய எண்ணம். இத்தகையோர் பிறகு ஆபத்தில், வியாதியில் சிக்கிக்கொள்ளும்போது அந்த சமயம் மட்டும் தங்களுக்குப் பிறர் உதவிசெய்ய வேண்டுமென்று அலறுகிறார்கள். இவர்கள் முன்பு அருகே வாராததை மனதில் வைத்து இப்போதைக்கு எட்டிப் பாராமலே இருந்துவிடுகிற பகை சாதிக்கும் முற்றிய பருப்புகளுமுண்டு. கடைசியில் எல்லா மொச்சைக்கொட்டைகளுமே பச்சைப் பல்லாக்கு ஊர்வலம் காணவேண்டியவர்களே. இருக்கிறதோ இங்கே சிலநாட்கள்! அதிலே இறுமிக் கொள்வதும், உறுமிக் கொள்வதும், இடித்துக் கொள்வதும், உதைத்துக்கொள்வதும் சில நாள்கள் போலும்!" என்று தொந்தி செட்டியார் கூறினர்.

ஃ

"வழியில் ஒருவர் சந்தித்து, நமது வியாபாரப் பொருளைப்பற்றி மிகவும் அக்கரையாய்க் கேட்டு வாங்கிக்கொள்வது போலும் கொண்டு வரும்படியம்பேசுகிறார். அப்பொழுது அன்புடனே அவர் முகம் தென்பட, அதை நம்பிக்கொண்டு நமது வியாபாரப் பொருளை நாம் அவரிடம் கொண்டுபோய்விடக்கூடாது. அது மதிப்புக்குக் குறைவு. வலியவே நாம் கொண்டு போவதானால், நமக்குக் கூடவா விலைபோட்டுத் தருவது என்ற போக்கில் வார்த்தைகள் தொடங்கலாம். அல்லது பாதிவிலைக்குக் கேட்கலாம். அல்லத் கடனுக்குத் தரும்படி சொல்வதாகலாம். ஆகவே, நமது வியாபாரப் பொருளை அங்கு கொண்டுபோய் நமது மதிப்பு கெடாதபடி எப்போதும் கிராக்கியிலேயே இருக்கவேண்டும். அவர் பல முறை கொண்டுவரும்படி கேட்டும், நாம் கொண்டுபோகாமலே, எங்கே ஒழியவில்லை, நீங்களே நமது வீட்டிற்கு (அல்லது கடைக்கு) வாருங்கள்; வந்து பெற்றுப்போங்கள் என்று சொல்லிவிடுவது கௌரவம். பிறகு அவரே நம்மிடம் வந்தால் எப்போதும் உள்ள ராங்கியைக் காண்பித்து அவரைவிட நாம் தாழ்ந்தவர்களல்லவென்று உணர்த்திக்கொள்ள முடியும். அப்போது நமது வியாபாரப் பொருளுக்கும் ஒரு நல்ல மதிப்பு ஏற்படக்கூடும். இதில் சற்று தவறி ஏமாந்தால் நமக்கு இளிச்சவாயன் என்ற பட்டமே கிடைக்கும்" என்றார் இராவண நாயுடு.

ஃ

"சில சமயங்களில் இவ்விதம் நமது வியாபாரப் பொருளைத் தாம் வாங்கிக் கொள்வதாகவும் கொண்டு வரும்படியும் சிலர் கேட்பதும், நாம் ஆகட்டுமென்று தலையசைப்பதும், பிறகு அவர்கள் கேட்காமல் ஜாடையாக இருந்துவிடுவதும், நாமும் நமது பொருளைக் கொண்டுபோய்க் காட்டாமலிருந்து விடுவதும், மேலுக்கு மட்டும் பரஸ்பரம் வேறு உபசாரப் பேச்சுகள் பேசிக்கொள்வதுமாக அவ்வளவில் முடிந்துவிடுவது முண்டு. இதன் உட்கருத் தென்னவென்றால், விலைக்கு நாம் கேட்டால் அவர் இனாமாகவே தருவார் என்று கேட்பவர் எண்ணிக் கொள்வதும், இந்த ஆள் பணம் தரக்கூடிய பேர்வழியல்ல என்று இவர் எண்ணிக்கொள்வதும், இந்த இருவரும் தங்கள் எண்ணங்களைத் தங்கள் நெஞ்சியிலேயே வைத்

பெண்கணுயகமே! உன்வீடு முழுதும் ஸதாகாலமும் முகமலர்ந்து, அகமகிழ்ந்து சிரித்துப் பூரிக்கவும், உன் கைபட்ட எப்பொருளும் நாகரத்தினம் போல் துலங்கி ஒளி வீசவும் செய்.

துக்கொண்டு மவுனமாய் விடுவதுமே யாகும்'' என்று கண்டபோண்ட பாஷியார் பகர்ந்தார்.

ஃ

"குழம்பு வாங்கிப் போனவளும், காப்பித்தூள் வாங்கிப் போனவளும், வெகு உருக்கமாகப் பேசக்கூடிய தயிர்க்காரியும் வீட்டு ஸ்திரீக்கு ஆபத்து வந்ததும் மெதுவாகப் பார்த்துவிட்டுத் தூரப்போய் விடுகிறார்கள். அவள் வாந்தி யெடுத்து வயிற்றுப்போக்கால் படாத பாடு பட எவரும் அருகில் வருவதேயில்லை. எல்லாம் ஜாடையாகக் கண்டுவிட்டு, தன்னை எங்கே அழைக்கிறார்களோ என்று மெதுவாகக் கம்பி நீட்டுவதே காணும் காக்ஷி! இவர்களுக்கு ஊற்றிக் கொடுப்பதிலும், மடிதனுக் கொடுப்பதிலும், எடுத்துக் கொடுப்பதிலும், தூக்கிக் கொடுப்பதிலும், கொட்டிக் கொடுப்பதிலும் ஒரு பயனுமில்லை. என்ன தூஷித்தாலும் பந்துக்கள் பந்துக்களே; அன்னியர் அன்னியரே. சிலர் வெகு சொந்தம் காட்டி நின்று இரவல் வகையில் நன்றாகப் பறித்துக் கொண்டு, கடைசியில் ஒன்றைக்கேட்டுத் தராமற் போனதைப் பெரிய விரோதமாக முடிந்துகொண்டு அந்த விரோதத்தைக் காட்டியபடி எவ்வளவு அலங்கோலத்தில் கிடந்தாலும் எட்டிப் பாராமல் ஜாடையாகச் சென்று விடுகிறார்கள். இவர்கள் கேட்டபோதெல்லாம் இல்லையென்னாமல் எடுத்தெடுத்துக்கொடுத்ததற்கு இதுதானா இவர்கள் செய்யும் உதவி? துரோக புத்திக்கும் நன்றியற்ற தன்மைக்கும் பழிக்குப்பழி வாங்குதல் என்றைக்கேனும் இல்லாமற் போகாது; யாவும் நேரில் காண்கிற கடவுளே அதைச் செய்வார், மனிதன் செய்யவேண்டியதில்லை'' என்று நீண்ட கொம்பு பேசினர். இத்துடன் நமது கடையும் முடிவு பெற்றது.

'பஹதூர்' பொன்வண்டு செட்டியார்.

கோழிக்கறி புலாவ்!

பாவச் செயல்களை மாற்றுப்பெயர்களால் அழைப்பின் அவை புலப்படாவென்று என்னுவது உலகத்தாரின் இயல்பு. இன்று "கோழிக்கறி புலாவ்!" என்று ஹோட்டலில் விளம்பரப் பலகை காணப்படுகிறது. அதற்காக வென்று ஏழு எட்டு கோழிகளைக் கழுத்தை யறுத்து இரத்தம் ஒழுக நிலத்தில் எறிந்தபோது, அவை தலைதூக்கிக் களைப்புடன் தலையை மறுபடியும் கீழேபோட்டுப் பிறகு உடல் துடித்துச் சிறுகச் சிறுகப் பிராணனை விட்டதை அதை யுண்போர் நினைத்துப் பார்க்கிறார்களா? அதற்குக் "கோழிக்கறி புலாவ்" என்று பெயர்வைத்து மறைத்து விடுகிறார்கள்! இது மனித பலத்தின் திமிரல்லவா?

"ஐயோ பாவி! நான் எண்ணிய எண்ணத்தைத் தலை கீழாக்கி விட்டாயே? இறைவா! என் உள்ளத்து உண்மையை நீர் அறிவீர்."

சிறுமணித்திரள்

("பன்னிரு மரகதங்களின் மர்மம்" என்ற நூலினின்றும் திரட்டியது)

(முன் பக்கம் 493-லிருந்து)

755. இன்றைய அன்பினர் இனி வரும் காலந்தன்னிலும் இவ்விதமே இருப்பாரா என்பது ஒரு மர்மம்.

756. விவாகத்திற்குப் பின்னர் அவரவர்களின் குணங்கள் எவ்வெவ் வாறு என்பது ஒரு மர்மம்.

757. பெண் கொடுத்தவர்களும், கொண்டவர்களும் பிறகு வளர்ப்பது உறவையா—பகையையா என்பது ஒரு மர்மம்.

758. தன் புத்திரியைத் தரும் இடமும், மருகியைக் கொள்ளும் இடமும் எங்குளதென்பதும் ஒரு மர்மம்.

759. குடும்பத்தில் வாழ்கிற பெண்களுக்குக் கிடைக்கும் அடிதடிப் பரிசுகளும், அவர்கள் படும் பாடுகளும் எவ்வளவு உழைததாலும் விசுவாச மற்றிருக்கும் புருஷர்களின் தன்மை யும் என்னென்று கூற? (பக்கம்—2.)

760. வழக்கமல்லாத ஒன்றைப் புதிதாய்ச்செய்ய முயல்வதில், பரிசுத் தமான இருதயம் வெகுதூரம் பின் னுக்கு இழுக்கும். (3)

761. மாமிச பக்ஷணியல்லாத ஒருவன் முதன் முதலில் தன் ஜாதிக்கு விரோதமாய் அவ்வழக்கத் தைத் தொட்டுக்கொள்ளப் பார்க்கும் போது அவனது மனசாக்ஷி அவனைப் படுத்தும் பாடு சொல்லமுடியாது. (3)

762. படித்தவர்களுடைய நெஞ் சிலே உண்டாகக்கூடிய யோசனைக ளுக்கும் சிந்தனை அலைகளுக்கும் அளவு சங்கை ஏது? (9)

763. எவ்வளவு அன்புடன் இருந் தாலும் புத்திரவதியாகாத ஒரு பெண்ணை எல்லோரும் வெறுப்பது எங்கும் சகஜமே. (11)

764. மனிதர்களுக்கு நல்ல வார்த்தைகள் சொல்லிக்கொண்டு, அவர்களின் மனதுக்கு இதமாய் நடந் தால்தான், அவர்களுக்கு உலக பாசத்தின்மீது ஒரு பற்றுதல் விழுந்துவிட்டுப் பிரிந்து போகாமல் ஒட்டிக்கொண்டிருப்பார்கள். (13)

765. ஒருவனுக்கு ஒரு சோதனை ஏற்படும்போது அதிலிருந்து அவன் எப்படித் தப்புவிக்கிறான்? அல்லது யார் தப்புவித்துவிடுகிறார்—என்பதை அவன் சாமான்யமாக அறிவதில்லை.

766. தெய்வத்தினிடத்தில் ஒரு வனுக்கு நம்பிக்கை யில்லையானால் அவன் ஏதோ அகஸ்மாத்தாகத் தன் ஆபத்துகளிலிருந்து தப்புவதாக நினைக்கிறான். தெய்வபக்தியுள்ளவன் 'கடவுள் என்னைக் காப்பாற்றினார்' என்கிறான். (22)

தனது தம்பியின் மனைவி என்று அண்ணன் விசுவாசத்துடன் நினைக் கப்போக, தம்பியோ தன் சொந்த மனைவி என்ற அதிகாரத்துடன் அண்ண னைப் பிரித்து, புறப்படு உடனே என்று தன் மனைவியை அதட்டுகிறான்.

767. எல்லா நம்பிக்கையும் போய், இனியார் நமக்குத் துணையென்று திக்கற்றுத் தவிக்கும் போதெல்லாம, எங்கிருந்தோ அத் 'துணை' வந்து சேருகிறது. (23)

768. ஆபத்து சமயத்தில் தெய்வத்தைப் பிரார்த்திப்பது ஒரு குருட்டு நம்பிக்கை யாகாது. (23)

769. சாப்பிடுவது, குடிப்பது, தூங்குவது, அல்லது நடப்பது, எவ்வளவு உண்மையோ, அதைவிட அதிகமான உண்மை தெய்வத்தின் அருள். உண்மையாகச் சொல்லுமிடத்து அதுதான் ஸத்தியம்; மற்றதெல்லாம் உண்மையல்ல. (27)

770. அந்தரங்க சுத்தியுடன் எவன் தெய்வத்தைத் தியானிக்கிருனே, அன்புடன் எவன் அவரை நாடுகிருனே, பணிவாக, எவன் அவரைத் தேடுகிருனே, அவனுக்குத் தெய்வ சகாயம் கட்டாயம் கிடைக்கும். (23)

771. வாலிபர்களை வாலிபர்கள் நாடுவதும், விருத்தர்களை விருத்தர்கள் விரும்புவதும், குழந்தைகளோடு குழந்தைகள் கூடுவதும் அவ்வப்பருவத்தின் தன்மைக்கேற்றசேர்க்கைகளாகும். 24

772. தன் பர்த்தாவைப் பிராணனுடன் மற்ருெருத்திக்கு ஒப்புக் கொடுக்கத் துணியும் பெண்கள் உலகில் அரிது. (24)

773. ஒருமித்த சிந்தை மறுதாரங்களில் காண்பது அபூர்வ சம்பவம் தான். (24)

774. தெய்வம் நல்லதைச் செய்தாலும் மனிதர்கள் அதில் திருப்தித் தன்மையைக் கொள்ளுவ தில்லை. அதற்குள் ஒரு குறையை ஆராய்ந்து தேடிப் புகவிட்டுக்கொண்டு, அந்தக் குறையையே பெரியதாய் நினைத்து மனம் வாடித் தவிப்பது சாதாரண சம்பவம். (26) (தொடரும்.)

P. G. குலசேகரன்.

சாமான்களை நீயே வாங்கிவிடு.

கதவு பெட்டி முதலியவைகளைப் பழுதுபார்ப்பதற்குத் தச்சனுரைத் தருவித்தால் அவர் சாமான்கள் ஆணிகள் எல்லாம் தான் போட்டுக்கொள்வதாயும் இரண்டு ரூபாய் தரும்படியும் கேட்பார். அருகிலுள்ளோர் ரூபா 1-8-0-க்குப் பேசி முடிப்பர். வேலை செய்தபிறகு பார்க்கப்போனல் தச்சனர் கொண்டுவந்த ஆணி இரும்புப்பட்டை இவற்றின் செலவுகள் அணு மூன்றுக்குமேல் இராது. ரூ. 1-5-0 அவருக்குத் தக்ஷிணையாகிறது. இதைவிட வேண்டிய சாமான்களைத் தச்சனுரை யழைத்துச் சென்று கடையில் நீயே வாங்கிவிடுவதாகச் சொல்லிக் கூலிமட்டும் பேசிவிடு. ஏமாருதிருக்க வழி—ஏமாறிய பிறகே தெரிகிறது.

விவேகம்
விநோதம்
வசீகரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரிய
ஆநந்தம்

மார்கழி ! மார்கழி !! மார்கழி !!!



மார்கழி ! மார்கழி !! மார்கழி !!! பிறந்தது !!!!
கார்த்திகை மாதம் கடந்தது ! பறந்தது !!
நஞ்சான் குஞ்சான் நம்பிகாள் ! தம்பிகாள் !!
அஞ்சாது திருடும் ஆலயப் பூனைகாள் !
ஆடிப் பாடும் அன்பர்தம் சேனைகாள் !
கூடிக் குலாவும் குணமுடை ஏனையீர் !
உற்சவம் காண உவப்பொடு செல்வீர் !
சிற்பரன் ஏசுவின் சீரிய தொண்டர் !
எல்லோர் தாமும் இன்னல் மறந்தும்
உல்லாச மாக உவந்திடும் மாதம்!

ஃ

சீர்த்தியில் சிறந்தது ! தெய்விகம் நிறைந்தது !
ஆர்த்தியோ டன்பர் ஆண்டவனைத் தொழு(து)
ஏத்தி மகிழ்வதற்(கு) ஏற்றஇம் மாதம் !
நேர்த்தியாம் பொங்கல் நித்தம் வயிற்றில்
சேர்த்திடும் காலைச் சிரப்பின(து) இம்மதி !
பார்த்திபர் தொட்டுப் பஞ்சையர் வரையிலும்
அனைவர் தமக்கும் ஆனந்தம் ஊட்டும்
புனிதத் தன்மை பொதிந்த(து) இத்திங்கள் !

ஃ

பிறந்தது ! பிறந்தது !! பிறந்தது !!! மார்கழி !!!!
பறந்தது துன்பம் ! பறந்தது சோர்வு !!
இம்மா தத்தில் எய்திடும் சிறப்பு
அம்மா ! என்னென அறைவது ? விகடன்
கூறுமச் சிறப்பைக் கொட்டி அளப்பேன் !
தேறுதல் பெறுவீர் ! சிந்தை களிப்பீர் !

ஃ

கடவுளைத் தொழவும் கலைகளைப் பயிலவும்
உடற் பயிற்சியினை உவப்புடன் செய்யவும்

ஸ்திரீயும், குதிரையும், ஆயுதமும், வீணையும், வாக்கும், தனமும், மனிதனும், புஸ்தகமும் எவர்கள் கையில் படுவார்களோ, அவர்கள் கையாளும் திறமைக்குத் தக்கபடி நல்லவர்களாகவோ கெட்டவர்களாகவோ ஆவார்கள்.

தெளிமனத்தோடு சிந்தனை செய்யவும்
களிப்புடன் இன்னிசைக் கலைகளிற் பயிலவும்
இனியகங் காலையே ஏற்ற வேளை : அத்
தனிபுகழ் மார்கழி தனக்கே உளதாம்.
சிவ சமயத்தார்க்குத் திருவெம்பாவையும்
தவமுனி உடையவர் தம்மடி யார்க்குப்
பகர் திருப்பாவையும் பாராயணம் செய்(து)
உகந்(து) இறை அருள்பெற உரியது இம்மாதம்!

ஃ

பனிசொரி காலையில் படுக்கைவிட் டெழுந்து
தனிதெளி மனத்தொடு நதிக்கரை நாடி
குள்ளக் குளிரக் குடைந்து நீராடி
தெள்ளிய அறிவொடு தேவனை ஏத்தி
பலரொடு கூடி பஜனைகள் செய்து
குலவும் குதுகலம் கூறவும் படுமோ!

ஃ

பொம்பொம் பொம்பொம் பொம்பென முழங்க
நம்பியாம் ஆண்டி நற்சங்கத்தினை
ஊதித் தெருத்தொறும் உலவியவாறே
கீதங்கள் பாடக் கேட்டவர் பலரும்
துயில்விட் டெழுந்து தூய நீராடிக்
கயிலை நாதனையும் கண்ண பிரானையும்
ஏத்திப் போற்றி இன்புற விரும்பும்
சீர்த்தி உடையது சீரிய இம்மதி!

ஃ

படர்ந்த பரங்கியில் பயனின்றி வாடிக்
கிடந்த மலர்கள் கிள்ளப்பெற்று
சாணப் பீடம் தன்னில் அமர்ந்து
காண இனியவாய்க் காரிகை மாரால்
வாசல் தோறும் வைக்கப் பெறுவன
நேசமோடு சேரும் இம்மதியில்!

ஃ

மணிகளின் ஒலியும் வாத்திய முழக்கமும்
பணிந்து சிறந்த பக்தர்கள் பாக்களை
அன்பர்கள் ஓதும் அழகிய ஓசையும்
இன்பம் இம்மதியில் இருசெவிக்(கு) ஊட்டும்.

கிழட்டுப் புருஷனென்று தன் கணவனை விட்டுவிட்டு ஒரு யுவகனுடன் சேர்ந்து மகிழ்ந்த பெண்ணொருத்தியை, அந்த யுவபுருஷன் ஒரு தப்பிதத்திற்குத் தடிகொண்டு சாத்த, "ஐயோ இந்த அடி என் புருஷன் அடித்தால் எவ்வளவோ கௌரவம், இந்தப் பாவி யடிப்பது ஊர் சிரிக்குமே, ரகசிய சங்கதி வெளிக்குத் தெரிந்துபோயிற்றே" என்று அழுதாளாம்!

ஆலயந் தோறும் அதி காலையிலே
சீலமாய்ப் பூசைகள் செவ்விதில் நிகழும்.

ஃ

திருமால் உறையும் திருக் கோயில்களுள்
பெரிய கோயிலாய்ப் பிரசித்தி பெற்ற
திருஅரங்கத்தில் சிறந்த இம்மதியில்
பெரிய ஏகாதசிப் பெயர்விழா நிகழும்.
"வையாளி" என்று மாண்பு சிறந்த
ஒய்யார நடையினை உகந்து சேவிக்க
ஆலயம் அடையும் அளவிலர் தம்முள்
சீலமோ(டு) இறையைச் சேவிக்க எண்ணி
வந்தவர் சிலரே: மற்றோர் பலரும்
முந்துவர் பிறரை மோதியே சென்று
ஆலயதாசி ஆட்டம் காணவும்
சீலமல்லாத செய்கை முன்னிட்டும்
அந்தோ! அரங்கன் அருள்பெற வந்தும்
சிந்தை வேறிடத்தில் செலுத்தியதாலே
இழந்தனர் பேற்றை, எய்தினர் பாவம்;
உழந்திடும் அவர்க்கும் உய்நெறி உண்டோ?
நாடகக் கொட்டகை நண்ணியும் சீட்டுகள்
ஆடியும் பிறவிளை யாட்டுகள் செய்தும்
இரவு விழிப்பின் ஏகாதசிப் பயன்
பரம னருளால் பண்புறக் கிட்டுமோ?

ஃ

"அண்டைவீட்டான் அகமுடையாளைக்
கொண்டிங்கு வந்தேன் கூட்டுதி எம்முள்
மனமொன் றாக்கி மகிழ்வுறச் செய்வாய்!"—
எனச்சிலர் கோருவர் இறைவனை : பிறசிலர்
வகைவகையான வயிர ஆபரணம்
தொகைமிகு சேலை சோபித மாக
பிறர்மேல் கண்டு பெருவிருப்புடனே
இறைவனை வேண்டுவர் எய்தஇங்(கு) அதுபோல்

ஃ

"என்னுடன் பகைத்து எதிர்வழக் கிடுவோன்
தன்னின் பெருந்திமிர் தனைஒழித்(து) எனக்கே
வெற்றி யுண்டாக விரைந்தருள் செய்வாய்!
மற்றிதன்மேல் யான் வேண்டுவதொன்றிலை!"—
என்று வேண்டுவர் இறைவனைச் சிலரே.
புன்றொழிலார் அவர் புன்மையை நினைப்பின்

வயது கொஞ்சம். அதில் வருகிற வியாதிகளோ அனந்தம். பெரிய கிழவர்கள் சுகமாக இருப்பதும், இளைஞர்கள் நோயுற்றுச் சாவதும் என்னே!

விகடன் தனக்கும் விளையும் சிரிப்பே!
பகர்மொழி 'அன்பு' எனும் பணபினை இழப்பின்
உயர்வுறு பிரார்த்தனை உவந்து செய்தாலும்
பயனிலை! அந்தோ! பயனிலை!! பயனிலை!!!

"பூட்டினன் தாலி புருஷன்: இன்று அவன்
நாட்டினன் சிந்தையை நாரிவே றொருத்திமேல்;
முன்போல் என்னோடு மொழியாடுவதும்
அன்போ டிருப்பதும் அகன்றன: அந்தோ!
எனக்கே உரிய என்னுயிர் நாதன்,
தனக்குறு தருமம் தனைமறந்(து) இன்று
சேர்ந்தனன் வேறொரு சிறுக்கியை: அம்மயல்
தீர்ந்தவன் என்பால் சேர்ந்திட அருள்வாய்!"—
என்று கடவுளை ஏத்துவோர் சிலரே!
நன்று! நன்று! அவர்நாட்டம் இருந்தது!!

வேசியி னாட்ட வினோதம் கண்டு
ஈசனை வேண்டுவர் இசையதன்னோ(டு) அவள்
சிலர்; "அவ்வின்பம் சேர்த்திடாய்!"—என்றே.
பலபல ஆர்த்தர் பற்பல வாறு
இறைவனை நோக்கி இயற்றும் பிரார்த்தனை
முறைகளை விரித்து மொழிந்திட விகடன்
கூசி நிற்கின்றேன்: கூறுவ(து) எவ்விதம்?
பேசுங்கால், அவை பிரார்த்தனை யாமோ?
நெறியலா நெறியில் நேர்படும் இழிஞர்
அறிவிலா தாராய் ஆண்டவன் றனையும்
அறநெறி வழுவிய அகவிருப்பங் கட்(கு)
உறுதுணையாய் நின்(று) உதவுவா(ன்) என்றே
எண்ணி பிரார்த்தனை இயற்றும் வினோதம்—
எண்ணிடில் விகடன் என்னெனச் சொல்வேன்?

திருக்கோயில் சென்று திரும்பினேன் என்று
செருக்குடன் உரைக்கும் செல்வர்கள் பலரும்
எதன்பொருட்டு ஆலயம் எய்தினோ மென்றும்
அதன்பயன் பெற்றதென்?—அடைந்தபின் என்றும்
சிறிதள வேனும் சிந்தித் திருப்பரோ?
அறிவின் பயனை அடைந்தவர் ஆவரோ?
'பள்ளி யெழுச்சி' பகர்ந்திட இயலார்,
விள்ளுவர் விப்பிரர் 'திருப்பட்சி' என்றே.

எல்லா காலத்திலும் ஒருவருக்கு ஒரே விதமான அபிப்பிராய மிராது. ஒரு காலத்தில் ஒரு அரிய பொருளைக் கொடுக்கும்படி தோன்றியமனம், மற்றொருகாலத்தில் ஏன் அதை வீணாகக்கொடுக்க என்று பேதப்பட்டாலும் படும்.

பெருகும் ஆசையினால் பெரும்பணம் திரட்டக்
கருதி நூல்கள் கணக்கில கொணர்ந்து
கடைபல பரப்பிக் கைச்சில வுக்கும்
தடைபட, வர்த்தகம் தக்கவா றின்றி
மிக்க மந்தமாய் விடவே வருந்தி
தக்க விலையையும் தள்ளி யளிக்கக்
கருத்துங் கொண்டு கால்விலை அரைவிலை
வருத்தத் துடனே வந்த விலைக்குத்
தந்தும் தம்முன் தகவின்றி நிகழும்
சிந்தைப் பிணக்கால் செய்வ(து) என்னறு
போட்டி போட்டுப் புத்தகங்கள் தமைக்
கேட்ட விலைக்குக் கேட்பவர்க் களித்தும்
புத்தகக் கொலைசெயும் புன்மை இம்மதியில்
மெத்தவும் இழிந்த வினையது அந்தோ!

ஃ

கடவுளைக் கண்டு கைதொழ வந்த
இடமதிற் பிடுங்கல் எண்ணில அந்தோ!
"தட்சிணை எங்கே? தந்திடாய்!" என்பர்.
"இரண்டணா உளதேல் ஏகுதி உள்ளே;
இரண்டணா இலதேல் ஏகுதி வெளியே"
என்பர் வாயிலில் இருப்போர்: கோயில்
என்பதும் காட்சி எனும் மனை தானோ?
சந்தைக் கடைபோல் சத்தமும் பிணக்கும்
நிந்தைக் கிடமாய் நிகழ்சில குறைகளும்
அகலும் நாளே அரங்கன் திருவுளம்
உகந்திடும் இனிய உத்தம நாளாம்.

ஃ

சிவசமயத்தார் சிரிதாய்ப் போற்றும்
உவமையில் உயர்வுடை உத்தம சிதம்பரம்
தன்னில் இம்மாதந்தனில் ஆதிரைநாள்
தன்னிக ரில்லாத் தரிசனம் நடக்கும்.
பொன்னம் பலவன் பொற்கலன் புனைந்து
அன்னை சிவகாமி அம்பிகை யோடு
எழுந்தருளுங்கால், எண்ணிலர் அவரைத்
தொழுவதோர் காட்சி சொல்லவும் படுமோ?
பலமணி நேரம் பகவனைத் துதித்தும்
சில நிமிஷங்களும் சேவித்தற் கின்றி
சிற்சில நிமிஷமே சிற்சபேசனை அவ்
உற்சவந் தன்னில் உறுவோர் காணச்

பிறருக்கு நேர்ந்த துக்கத்தில் அவர்களுக்கு அப்படித்தான் வேண்டுமென்று தான் சந்தோஷித்தால், அந்த துக்க சோதனையே தனக்கும் எண்ணாத விதமாய்த் திடீரென்று திரும்பிவந்து கலங்கவைத்துவிடுகிறது.

செய்வர்: அப்பெருங்குறை சீர்கொளும் தன்பில்
தெய்வ பக்தியில் சிறந்தவர்க்(கு) உறுமே!

ஃ

கருணையின் உருவாய்க் கடவுளின் தூதாய்ப்
பெருகிய அன்பொடு பிறந்த இயேசு
அவதரித்ததும் இவ் அரியநன் மதியில்;
தவமுனி அவர்தம் சன்மார்க்கத்தை
நலமுறக் கொண்ட நற்கிறித் தவர்க்கும்
இலைபிறி(து) இதனினு(ம்) இன்பம் தருவதே!

ஃ

மொத்தத்திற்கு மொழிமார்கழிமணி
முத்தாம்: மாதவ முனிவர் பிறர்க்கும்
வற்ற மாதம்: அவ் எழிலுறு மார்கழி
சாற்றினேன் விகடன் தன் வர்க்கத்தினர்க்(கு)
இன்பமாய் முடிக என்றே; இறைவனை
அன்பொடு வாழ்த்தினேன் அவ்வாறு அமைய.
ஆம்! ஆம்! இதுவே அருமைசேர் மாதம்
ராம்! ராம்! சுபம்! ஞு! சுவாஹா!! சுவாஹா!!!

ஆரியூர் — வ. பதுமநாப பிள்ளை.

[ஸ்ரீமான் பதுமநாப பிள்ளையவர்கள் சென்ற மாதம் நம்மைச் சந்தித்த சமயம் நாம் தெரிவித்த விஷயங்கட் கிணங்க, நேரில் இக்கவிதையை அன்புடன் புனைவாராயினர். அதன் உயர்வுக்கு மகிழ்கின்றோம். ப-ர்.]

அவள் பிரியப்படி விட்டுப் பார்.

“இங்கு நான் இனி இரேன், என் தாய் வீடு போகிறேன்” என்று துடுக்குத்தனம் காட்டும் மனைவியை அவள் துணிவின்படியே போகவிட்டுப் பார். அதில் அதிக நன்மையும் உண்டு. நாலு இடத்தில் தங்கி மதிப்பு குன்றி எங்கும் இகழப்பட்டுக் கடைசியில் உன்னிடமே வருவாள். நீ அவளைவிட்டு இருக்கமாட்டாயென்று அவளை நினைப்பதால் தான் இத்தனை பிகுவும் அடமும் காட்டுகிறாள். நீ உதறி விட்டுப் போய்விடக்கூடியவன்போல் நடித்தால் அவளும் ஒரு ஒழுங்குக்கு வந்துவிடுவாள். இதில் உன் பிரியத்தை உள்ளடக்கிநிற்கிற உன் மனோவுறுதிதான் தக்க மருந்து.



இருக்கிற கடன்களையெல்லாம் மார்கழிமாத வரும்படியில் தீர்த்து விடுவதாகச் சிதம்பரமும் ஸ்ரீரங்கமும் சொல்லிக்கொண்டதுகளாம்!

ஃ

'அடங்காப் பிடாரிகள்' பத்திராசிரியர்கள்தானாம்! அவர்கள் அன்புக்கும் நீதிக்கும் அல்லால் வேறெதற்கும் அடிமைப்படவோ அடங்கவோ மாட்டார்களாம்! ஃ

மற்றவர்களின் பிள்ளைகளிடம் விருந்தினர் கொஞ்சுவது ஒரு காரிய தந்திரமாம்! ஃ

பிறர், மாத்திரை—மருந்துகள் வாங்கியபிறகு, மெதுவாகச் சிரித்து அதில கொஞ்சம் இலவசத்தில் பெறக் கைநீட்ட வேண்டுமாம்! அப்பொழுது தனக்குப் பணச் செலவு இராதாம்!

ஃ

மாற்றாந்தாய் தனது நியாயமற்ற கொடுஞ்சூரித்தனத்தைத் தானே எடுத்துச்சொல்லவும் நாணுவாளாம்!

ஃ

புருஷனும் மனைவியும் ஒன்றாகி ரமிப்பதற்கு ஒரு தடைக்கல்லாய் வழி நடுவிலே படுத்துக் கண்விழித்துப் புரளும் அறிவிலாக் கொச்சைமக்களைக் கழுவி லேற்றவேண்டுமாம்!

ஃ

சனிக்கிழமையிற் பிறந்தோர் பரஸ்திரீ ஸம்போகியாவாரென்று ஒரு புஸ்தகத்திலிருந்ததைக் கண்ட ஒருவர் தானும் சனிக்கிழமை பிறந்ததால் தன்னைச் சந்தேகிப்பார்களென்றெண்ணி அந்தப் பக்கத்தையே கிழித்துவிட்டாராம். அதைக்கண்ட விகடன் நீர் அப்பக்கத்தைக் கிழித்தாலும், உலகத்தில் நடப்பதை மறைக்க முடியாது; ஊரில் நடப்பதைத்தான் முன்னோர்கள் அந்தப் புஸ்தகத்தில் குறிப்பிட்டார்கள் என்று சொன்னானாம்! ஃ

அவன் அவளைக் கூப்பிட்டதும், அவள் உள்ளே போனதும் தான் பார்த்துவிட்டிருந்தாலும் வெளியில் தமுக்கு அடிக்க முடியவில்லையாம்! ஏனெனில், அவர்கள் ஊர்நாடு அறிந்த புருஷன் பெண்டாட்டியாம்!

ஃ

பொய் பிறந்தது புலவர் வாயில்,
மெய் பிறந்தது பெண்ணின் வயிற்றில்
நெய் பிறந்தது கடைந்தவெண்ணெயில்
நொய் பிறந்தது கோதுமையில்,
கை பிறந்தது கழுத்தின் கீழ்,
தை பிறந்தது மார்கழி சென்றபின்,
மை பிறந்தது மங்கையர்களிடம்
பைபிறந்தது அணா ரூபா தோன்றவதற்கே.

ஃ

ஏககாலத்தில் தன் மூன்று பெண்களுக்கும் பிரசவமானால் எந்தப் பெண்ணின் பிரசவத்திற்கு தாய் போகிறதென்று ஒருவர் கேட்கிறார்!

ஃ

"இயேசுநாதர் பிறந்தார்—கேசு புட்டி திறந்தார்—என்று மதுரை வீரர் இந்த மார்கழியில் சந்தோஷிக்கிறாராம்! ஃ

கொஞ்சம் பக்ஷணம் சுட்டுக் கொண்டுபோனால்—போகிற வீட்டில் அந்த உறவுடன் பலநாள் இருக்கலாமாம்! ஃ

வீட்டுராணிகள் சம்மதித்துவிட்டால் எத்தனை நாளைக்கும எவரும் இருக்கலாமாம்! ஃ

ஆப்பம் ஆபீஸ், இட்டிலி ஆபீஸ்களெல்லாம் சிலருக்குப் புருஷன் போனபிறகு தொடங்குகின்றனவாம்!

ஃ

விசுவாசக்காரர்களுக்கு எங்கெங்கும் எச்சும் பேச்சும்தான் பரிசாம்!



1. "சாப்பிட்டுவிட்டுப் போங்களேன்" என்கிறாள் அவ்வீட்டுக்காரி. சுவற்றில் மாட்டியுள்ள கடிகாரத்தைப் பார்ப்பவன்போல் அபிநயித்து "1—மணிக்கு வரும் வண்டிக்கு என்னுங்கோ அவசரம்; இப்போது 12-மணிதானே" என்கிறான் வீட்டுத் தலைவன். இந்தப் பேச்சிலேயே கால்மணி பறந்துவிடுகிறது. அதற்குள் வீட்டுக்காரி பருப்பு இல்லை, வாங்கி வந்து விடுங்கள் என்கிறாள். இலை இருக்கா என்கிறான் வீட்டுத்தலைவன். ஏதோ கட்டாயப்படுத்திச் சொல்லுகிறார்களே, இருந்து சாப்பிட்டு 10-நிமிஷத்தில் புறப்பட்டு விடுவோமென்று நினைத்தவன் பருப்பு—இலை இல்லை யென்றதைக் கேட்டதும் பதில் பேசாமல் உபசாரம் போதுமென்று ரயிலுக்கு ஓடிவிடுகிறான். இது ஒய்யார ஒப்பாரி உபசாரம்.

2. நான்கு நாள் தங்குவதாகச் சொல்லிய நண்பன் அன்றைய தபாலைப் பார்த்துவிட்டு அவசரமாய் ஒரு மணி வண்டிக்குப் புறப்பட வேண்டுமென்று 12-மணிக்குச் செல்லுகிறான். உடனே வடித்த சாதத்தில் தயிர் ஊற்றிப் பிசைந்து ஒரு துவையலுடன் வைத்து உண்ணச் செய்து, அதையே வழிக்கும் கொஞ்சம் கட்டிக் கொடுத்துத் தன் நண்பனை ரயிலுக்கு அழைத்துப் போய் வண்டி ஏற்றிவிட்டு, வீட்டி லிருக்கிற சுகத்திற்கு உடனே கடிதம் எழுதும்படியும், இன்னொரு தடவையில் அதிகநாள் வந்து தங்கியிருந்து போகும்படியும் கேட்டுக் கொள்கிறான். திடீரென்று உண்டான பிரிவுக்கும் வருந்துகிறான். இது மனஸ்பூர்வமான உபசாரமாகும். அந்த வெறும் தயிர் சாதமானது புலாவ் சாதத்திலும் எவ்வளவோ உயர்ந்தது.

3. மருமக்கள்மார் இருவரில் ஒருத்தி தன் மாமிமுன் உட்காரலாமாம். இது சொந்த மருமகளாம். மற்றொரு மருகியோ அதிக மரியாதையுடன் இருக்கவேண்டுமாம். இவ்வேற்றுமை அன்னிய வகையிலிருந்து வந்த மருமகள் விஷயத்திலாம்.

4. "என்னைத் தவிர்த்து வேறு யாருக்காவது கல்யாணம் செய்து கொடுத்தால் நான் உலகில் தங்கேன்" என்று உன் தாயிடத்தில் கூறிய நீ, என்னை உலகில் தங்காமலிருக்க வேண்டிய முயற்சிகளைச் செய்து முடித்தாயடி பாவி—என்று புலம்புகிற ஒரு தனிக்காலமும் பிறகு வருவதுண்டுதான்.

5. "எத்தனை நாள் இந்த முண்டையோடு போராடித் தொலைவது? காவிவேஷ்டி கட்டியாவது, அல்லது கண்காணாத இடமாகிலும் போய் விடலா"மென்று நினைத்தால் அந்த சமயம் எதிரே தனது கைக்குழந்தை தவழ்ந்து நடந்து தன்னருகே வருகிறது. ஆசைக் குமாரத்தியின் மீதுள்ள பாசத்தை விடமுடியாத கவலை ஒரு பக்கம். இதனால் மறுபடியும் வீட்டுக்குள் புகுந்து மனைவியுடன் இணங்கிப் போக நேருகிறது.

6. "அடி முண்டையே!" என்று சொகுசுடனும், வாய் கூசாமலும் சொல்லிவிடுகிறான் கணவன். இது

எப்போது என்பதை மட்டும் அவன் எண்ணுகிறதில்லை போலும்!

7. வெந்நீர் வைத்துக் கொடுங்கள் என்று கெஞ்சிக்கேட்க வந்தவர், உடனே நாம் அதற்கு சம்மதித்ததைப் பார்த்து, அந்த வெந்நீரில் கொஞ்சம் டீயோ காபியோ போட்டுக் கொண்டுவந்தால் ரொம்பவும் நல்லது என்கிறார். அப்படியே நாம் செய்து தந்தால் அதில் பால் விடவில்லை, சர்க்கரையில்லை என்று குறை சொல்ல ஆரம்பிக்கிறார். முதலிலேயே வெந்நீர் வைக்க முடியவில்லை யென்று சொல்லியிருந்தால் எந்தக் குறையும் அவர் சொல்லாமல் எழுந்து போயிருக்க முடியும். நம்முடைய முன்புத்தி யில்லாத சங்கதியால் நேர்ந்த அனுவசிய தொல்லை யிது?

8. தாழ்ந்த ஜாதி (?) யான் ஒருவன் கையெடுத்துக் கும்பிட்டால், பதில் கையெடுப்புடன் 'சுகமாயிரு' என்னும் ஆசிர்வதிப்பும் நடந்துவிடு சாமர்த்தியத்தினாலும் அவன் வரவாப் வணக்காரனாகி வந்தான். அவனும் அவன் மனைவியும் காலைமுதல் மாலைவரை கஷ்டப்பட்டு உழைப்பார்கள். அவர்கள் காலையில் யாவர்க்கு முன்பே எழுந்திருந்து இரவில் யாவர்க்கும் பின்பே படுக்[illegible]சாவதித்[illegible]வார்கள். அத[illegible]ப்பதெப்படி?

9. என் பேத்தி என்றும், நான் அயர்ந்த காலத்தும், சோர்ந்த காலத்தும், உதவுவாள் என்று ஒரே பிடிவாதமாய்க் கொண்டுவந்து விவாகம் முடித்துவிட்டேன். என்னவோ அந்தக்காலத்தில் எனக்கு அப்படி யிருந்தது மனம்; இப்போதோ அந்த நாய் என்னுடைய வீட்டில் கால்வைத்ததே தப்பு என்று தோன்றுகிறது என்கிறுன் ஒரு பெரிய மனுஷி.

A. அங்கமுத்து.

II

10. மகள் தன் மருமகனோடு கொஞ்சிக் குலாவையில் வரும் ஆநந்தம் மகனோடு மருமகள் பேசும்போது மட்டும் ஏன் ஏற்படவில்லையோ?

11. ஒருவர் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண் டிருக்கும் பொழுது மற்றொருவர் தான் ஏதோ வேலை பார்ப்பதுபோன்ற நடிப்புடன் கவனித்துக்கொண்டிருந்து, முதலில் பேசியவர் வெளியில் சென்றவுடன் அவருக்கு முந்தி அக்காரியத்தைத் தானே செய்து லாபமடைகிறார். தன் தமயனின் குமாரனுக்குப் பெண் பார்த்த இடம் தெரிந்துகொண்டு அவர்கள் கேட்க வருமுன் தான் போய்க் கேட்டுத் தனக்கு நிச்சயம் செய்துகொண்ட சிற்றப்பனு முண்டு.

12. ஒரு மனிதரிடத்தில் அவருக்கு வேண்டாதவர் ஒருவரின் பெயரைச்சொல்லி அவர் தனக்கும் பகைவர் கூடாதவரென்று விளம்பித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறார். பிறகு யாரைக் கூடாதவரென்று கூறினாரோ அன்னவருடன் உண்மைச் சிநேகிதராகக் காணப்படுகிறார். தன்னுடைய விஷயம் முடியும் வரையில்தான் அந்தப் பாசாங்கு.

13. தேனினு மினிக்கும் செந்தமிழ்ப் பத்திரிகையொன்றைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுது ஒருவர் வந்து எதையாவது பேச முன் வந்துவிடுகிறார். பத்திரிகையின் ஞாபகமாய் இருக்கும் இவர் அவசியமில்லாத அப்பேச்சைப் பிறகு பேசிக்கொள்ளலாமென்றுசொல்லிவிட முடியாமலும் பத்திரிகையைப் படிக்க முடியாமலும் வருந்துகிறார். பத்திரிகையின் சுவை அதை யருந்தி அனுபவித்தவருக்குத்தான் தெரியும்.

14. கபடமில்லாத வொருவரிடத்தில் அவருடைய வியாபார ரகஸ்ய விஷயங்களை அவருக்கு நன்மை செய்பவன்போல் நடித்துத் தெரிந்து கொண்டு தனக்கே அதன் வழியாய் லாபத்தைத் தேடிக் கொள்ளுகிறான்.

15. ஒரு வியாபாரக் கடையில் சிறிய வேலைக்கு அமருகிறார் ஒருவர். பின்பு படிப்படியாக உயர்ந்து அக்கடைக்கே மானேஜராகுந் திறமைவந்து விடுகிறது. அப்பொழுது அக்கடையை விட்டு விலகி இன்னொருவருடன் கூட்டு வியாபாரந் துவங்கிக்கொண்டு பழையமுதலாளிக்கு எதிரியாக வேலை செய்கிறார். முன்னர் அவருடைய தயவை எதிர்நோக்கிப் பணிந்து நின்றநிலை மறந்தே போய்விடுகிறது.

16 அந்நிய நாடு சென்றவர் தன் இல்லம் வந்து சேர்ந்த மூன்று நான்கு நாள்வரையில் தான் இராஜோபசாரம். பின்பு பழைய நிலைமை தோன்றிக் கொள்ளுகிறது.

17. அறிவில் பெரியவர்களுடன் நேசமானால் சற்சபைகளுக்குக் கூடிச் செல்வார்கள். அதின் மூலம் அறிவு வளர்ச்சிக்கு இடமுண்டு. அறிவிலிகளின் சிநேகமோ அவர்களால் விரும்பப்படும் தாசிகள் வீடு சூது மகாசபை முதலியவற்றிற்கு அடிமையாக்கும்.

18. தன் புருடன் உடனிருக்கும் போதே மற்றொருவனைப் பார்த்துச் சிரிக்கவோ அல்லது தன்னுடைய அன்பை முகத்தினால் தெரிவிக்கவோ முயற்சிக்கும்போது, அதைச் சாடையாகக் கணவன் கண்டுவிடுகிறான். கலகக்கொள்ளி பற்றிக் கொள்கிறது. சந்தேகப் பேய்பிடித்துக் கொள்கிறது. பிறகு நேருவது யாதோ!

19. அண்ணனையும் அண்ணியையும் சதா கண்காணித்துக் கலகமுண்டாக்கும் பெண்ணுக்குத் தன் கணவன் வீட்டில் நாத்தியொருத்தி இருந்துவிட்டால் அதுவிஷயம் மனதை எவ்வளவுக்கு நோகவைக்கிறதென்று அனுபவத்தில் தெரிந்து கொள்ளுவாள்.

... முயற்சிகளைச் செய்து ...டித்தாயடி பாவி—என்று புலம்பு...ற ஒரு தனிக்காலமும் பிறகு வருவ...ண்டுதான்.

"எத்தனை நாள் இந்த முன்...டு போராடித் தொலைவது? ... கட்டியாவது, அல்லது ... இடமாகிலும் ...

ஆண்டவனை மக...

பாசங்கள் நீக்கிப் பாவங்கள் போக்...
நேசங் கடவுள்பால் நித்தம் பெருக்கித்
தூய சிந்தையனுய்த் துலங்கிடுமாறு
தாயினும் இனிய தண்ணருள் பொழியும்
இறைவனைத் துதிக்க எய்துவ(து) ஆலயம்
முறையுடைத் தென்றே மொழிந்தனர் முன்னோர்
சிறுபயன் விரும்பித் தெய்வத்தை வேண்டல்
குறுகிய தாய கொள்கையே அன்றோ!
உள்ளத் தூய்மையை உவந்து வேண்டுவதே
வள்ளல் ஆண்டவனை மகிழ்விப்பதாகும்.



நமது கதாப் பிரஸங்கி.

இலியாஸின் கதை.

(ருஷியாதேசத்து மகான் லியோ டால்ஸ்டாய் எழுதிய கதை

உவா அரசாட்சியின் கீழ் இலியாஸ் என்று ஒருவனிருந்தான். அவனுடைய தகப்பனார் அவனுக்கு மணம் செய்து வைத்த ஓராண்டின்பின் காலமானார். அவர் இலியாஸிற்கு வைத்துவிட்டுச் சென்ற ஆஸ்தி மிகவும் சொற்பம்; அதாவது ஏழு பெண் குதிரைகளும், இரண்டு பசுக்களும், இருபது ஆடுகளுமே. தன் சிக்கனத்தினாலும் சாமர்த்தியத்தினாலும் அவன் வரவரப் பணக்காரனாகி வந்தான். அவனும் அவன் மனைவியும் காலைமுதல் மாலைவரை கஷ்டப்பட்டு உழைப்பார்கள். அவர்கள் காலையில் யாவர்க்கும் முன்பே எழுந்திருந்து இரவில் யாவர்க்கும் பின்பே படுக்கைக்குச் செல்லுவார்கள். அதனால் ஒவ்வொரு வருடமும் அவர்கள் செல்வமும் அதிகரித்து 35-வருடங்களில் அவர்கள் ஓர் பெரிய செல்வத்திற்கு அதிபதியானார்கள். அவனுக்கு இப்போது 300-குதிரைகளும், 150 - மாட்டு மந்தைகளும், 2000-ஆடுகளும் இருந்தன. அவனுடைய ஆடுமாடுகளை மேய்க்கவும் பால் கரப்பதற்கும், குதிரைகளைப் போஷித்து வளர்ப்பதற்கும் மற்றுமுள்ள வேலைகளைச் செய்வதற்கும் அவனிடத்தில் பல ஆண் பெண் வேலையாட்கள் இருந்தனர். அவன் இவ்வாறு பலரும் கண்டு பொறாமைப் படக்கூடிய நிலைமையிலிருந்தான். "அவன் மிக்க அதிர்ஷ்டமுடையவன்; அவனுக்கு வேண்டியதெல்லா மிருக்கின்றது. அவனுக்கு இல்லாமையின் கொடுமையால் சாகவேண்டிய அவசியமில்லை" என்றுபலரும் சொன்னார்கள்.

இப்போது பல பிரபல மனிதர்கள் இலியாஸிற்கு நண்பராயினர். பக்கத்திலிருந்தும் தூரத்திலிருந்தும் அடிக்கடி பலவிருந்தினர்கள் ஓயாமல் வந்துகொண்டிருந்தனர். அவன் அவர்களை யெல்லாம் மிக்க அன்புடன்வரவேற்று, மிகவும் உயர்ந்த அன்னபானாதிகளுடன் அவர்களுக்குத் தாராளமாய் விருந்தளித்தான்.

இலியாஸிற்கு இரண்டு பிள்ளைகளும் ஓர் பெண்ணும் இருந்தனர்; அவன் அவர்களுக்குச் சரியான காலத்தில் மணம் செய்வித்தான். அவன் ஏழையாயிருந்த காலத்தில் பிள்ளைகள் கஷ்டப்பட்டு அவனுடன் உழைத்தார்கள். ஆனால், அவன் பணக்காரனான பிறகு அவர்கள் மிக்க மிருகத்தன்மையான கேவல வாழ்வை அனுசரிக்க ஆரம்பித்துவிட்டனர். மூத்த பிள்ளை குடிவெறியில் போட்ட ஓர் சண்டையில் மரணமடைந்தான். இளையவன் மனைவி ஓர் மமதை கொண்ட பிடிவாதக்காரி. அவனும் தகப்பன் சொற்படி நடவாமல் பல அடாத செய்கைகள் செய்து தகப்பனை எதிர்த்துக்கொண்டான். அதனால் இலியாஸ் அவனுடைய பாகத்

தைக் கொடுத்து அவனை வெளியே அனுப்பிவிட்டான். ஃ

சில காலத்திற்குப் பிறகு ஆடுகளுக்கு ஓர் வியாதி வந்து பல ஆடுகள் இறந்துவிட்டன. ஒரு வருடம் கொடிய பஞ்சம் வந்து விளைச்சலே ஒன்றுமில்லாது போய் விட்டது. மழை காலத்தில் பல ஆடு மாடுகள் மரித்துவிட்டன. கிக்கிஸ் என்னும் கூட்டத்தார் அவனுடைய மிகவும் உயர்ந்த குதிரைகளை யெல்லாம் திருடிச் சென்றுவிட்டனர். இலியாவின் செல்வம் இவ்வாறு மிக்க குறைந்து விட்டது. அவனுடைய தேகவலிமையும் குறைந்தது. கடைசியாக அவன் தன்னுடைய 70-வது வயதில் மிக்க ஏழ்மை நிலைமையை அடைந்தான். யாரிடமாவது கூலிவேலை செய்து பிழைப்பதைத் தவிர வேறு வழியில்லாது போய்விட்டது. அவனுடைய ஓர் மகனும் தூரதேசம் சென்றுவிட்டான். மகளும் இறந்துவிட்டாள். ஆதலால் உதவிசெய்ய ஒருவருமில்லை. ஃ

இலியாஸ் இருந்த இடத்திற்கு சமீபத்தில் மகமமதுஷா என்று ஒருவனிருந்தான். அவன் அதிக பணக்காரனுமல்ல, ஏழையுமல்ல. ஆனால் மிக்க நல்லவன். அவனுக்கு இலியாவின் பெருந்தன்மையும், நற்குணமும் நன்ருய்த் தெரியும். அவன் இலியாவின் நிலைமைக்காக மிகவும் வருந்தி, இலியாவைக் கூப்பிட்டு, "நீயும் உன் மனைவியும் என்னுடனிருங்கள். கோடைகாலத்தில் உங்கள் சக்தியா வியன்றமட்டும் என்னுடைய தோட்டம் தறவுகளைப் பார்த்துக்கொள்ளுங்கள். மாரி காலத்தில் ஆடுமாடுகளைப் பார்த்துக்கொண்டும் மற்றுமுள்ள வீட்டின் சில்லரை வேலைகளைப் பார்த்துக் கொண்டுமிருங்கள். உங்களுக்கு வேண்டிய ஆகாரம் துணி முதலிய யாவும் நான் அளிக்கிறேன். மற்றும் எது வேண்டி யிருந்தாலும் என்னைக் கேளுங்கள்; தருகிறேன்" என்று சொன்னான். இலியாஸ்: 'சரி' என்று சொல்லி, தன் மனைவியுடன் தங்களால் கூடியமட்டும் பாடுபட்டு வேலை செய்து வந்தார்கள்.

மகம்மதுஷா சீக்கிரத்தில் இவ்வாறு இவர்களைத் தன்னிடம் வைத்துக்கொண்டது லாபமே என்று கண்டுகொண்டான். ஏனெனில், இலியாஸும் அவன் மனைவியாகிய ஷாம்சிமாகி என்பவளும் தாங்களே வறியவர்களாயும் செல்வர்களாயுமிருந்தவர்களாதலின் எவ்வேலையும் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. அவர்களும் சிறிதும் சோம்பலின்றி மிகவும் பாடுபட்டு உழைத்தார்கள். ஆதலால் மகம்மதுஷாவிற்கு அவர்களிடம் இரக்கமும் அன்பும் அதிகரித்தது.

சில காலத்திற்குப் பிறகு ஓர் நாள் மகம்மதுஷா வீட்டிற்குச் சில விருந்தாளிகள்வந்தனர். அதில் கல்வி கேள்விகளில் சிறந்த முல்லா ஒருவர் இருந்தார். மகம்மதுஷா அன்று இலியாவை சமையல்செய்யும்படிச் சொன்னான். இலியாஸ் மிக்க நன்ருய்ச் சமையல்செய்து விருந்தாளிகளுக்குத் திருப்தியாகப் பரிமாறினன். பிறகு மகம்மதுஷாவும் விருந்தாளிகளும் பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில் தன்னுடைய வேலைகளைச் செய்துவிட்டு இலியாஸ் அவ்விடத்தை விட்டு அகன்ருன். மகம்மதுஷாவிருந்தாளிகளை நோக்கி, "இப்போது இங்கிருந்து செல்லும் கிழவனைப் பார்த்தீர்களா?" என்ருன். விருந்தாளிகள், "ஆம் அவனைப்பற்றி என்ன?" என்ருர்கள். மகம்மதுஷா, "அவன் ஒரு காலத்தில் இங்கு நிகாற்ற

செல்வவந்தனாக இருந்தான். அவன் பெயர் இலியாஸ். நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்" என்றான். "ஆம். கேள்விப்பட்டிருக்கிறோம்; ஆனால் பார்த்ததில்லை. அவனைப்பற்றிப் பல தூர இடங்களில் உள்ளவர்களுக்கும் நன்கு தெரியும்" என்றார்கள் விருந்தினர். "இப்போது அவனும் அவன் மனைவியும் என் வீட்டில் வேலை செய்து காலம் கழித்து வருகிறார்கள்" என்றான் மகம்மது ஷா. விருந்தினர்கள் இதைக் கேட்டு அதிசயித்தனர். ஒருவன், "ஆம்; அதிர்ஷ்டம் என்பது ஓர் சுழலும் சக்கரத்தைப் போன்றதே. ஒருவனை மேலே தூக்குகையில் மற்றொருவனை அடியில் கொண்டுபோய் விடுகிறது" என்றான். "இலியாஸிற்குத் தற்போதைய வாழ்க்கை மிக்க வெறுப்புள்ளதாகவே யிருக்கும்; பாபம். அவனைக் கூப்பிட்டு நாங்கள் கேட்கலாமா" என்று கேட்டான் மற்றொருவன். "அது என்னவோ: அவன் தன் வேலையை நன்றாகவும், ஒழுங்காகவும் பொறுமையுடன் செய்கிறான். நான் அவனை இதோ கூப்பிடுகிறேன்" என்று சொல்லி உடனே இலியாஸைக் கூப்பிட்டு அவனை அவனுடைய மனைவியுடன் அங்கு வரும்படிச் சொன்னான். வந்தவுடன் இலியாஸ் அவர்களை யெல்லாம் வணங்கிவிட்டு, கடவுளையும் துதிசெய்துவிட்டு சதவின் ஓரத்தில் உட்கார்ந்தான்.

(மறு ஸஞ்சிகையில் முடிவு.)

டி. எஸ். வெங்கடசுப்பய்யர் B. A.,

தடபுடல் 'பஹதூர்' மனிதர்கள்.

இவர்களின் ஆரவாரம் அதிகம். கையிருப்பில் பணம் காசு வெகு கொஞ்சம். ஆனால், அவர்கள் வீட்டிற்குப் பிறர் வருகையில் நடக்கும் விருந்துகளும் செலவுகளும் வெகு தடபுடல். அது எத்தகையோரையும் மயக்கிவிடும். ஏராளமான வருமானத்தில் ஊஞ்சலாடுவதுபோல் நடிப்பர். தங்களைப் பெரிய கோபுரமாக நினைத்திருப்போரிடம் வெகு அவசரமாகக் கடன் கேட்டு நாளை மாலையில் வந்துவிடுமென்றுபெறுவர். பிறகு இவர்களைக் கண்டுபிடிப்பது வெகு பிரயாசை. வீடுதேடிச் சென்றால் பம்பாயில் இருக்கிறார், கல்கத்தாவுக்குப் போனார் என்று பதில் வரும். தப்பித் தவறி கண்ணுக்கு நேரே எதிர்பட்டுவிட்டால் சிக்கிரம் கொடுத்துவிடுவதாக இராகம் பாடுவார்கள். கொடுத்த பணத்திற்கு எந்த ஆதாரமும் இல்லை. கடைசியில் இழந்த மாதிரிதான். ஆனால், இரண்டொரு ரூபாய் கடன்வாங்கியிருந்தால் அதைமட்டும் வெகு நாணயமாகத் திருப்பித் தந்து மயக்குவித்தை காட்டிக் கபடநாட்டியம் புரிவர். இதைக்கொண்டு இவர்களிடம் ஏமாறிவிடக்கூடாது.

" அமிர்த குணபோதினி ".

பிரமோதூத வருஷத்திய மார்கழி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்.	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
பி-அ	15 டிஸம்பர்௴ (சபா) (5—20)	1	தி	தச 7-54, சித் 38-15, சாபரவி 22-38 தனுர்மாஸ பூஜை [ஆரம்பம் அகஸ் 28-5.
சி-ம	16	2	செ	ஏகா 5-1, ஸ்வா 37-17, ஏகாதசி திதி.
சி-அ	17	3	பு	துவா 2-47 விசா 37-3, துவாதசி திதி.
சி-பி	18	4	வி	திர 1-21, அநு 37-35.
ம-அ	19	5	வெ	சதி 0-45, கேட் 39-3, அகஸ் 28-4, தொண்டரடிப் [பொடியாழ்வார்.
சி	20	6	ச	● 1-10, மூல 41-36.
சி-அ	21	7	ஞா	பிர 2-43, பூரா 45-17, புஷ்யசுத்தம் சாக்கியர். [1உ.
ம-அ	22	8	தி	துவி 5-33, உரா 50-13, மகராயனம் 31-38, ஷாபான்மீ
சி	23	9	செ	திரி 9-33, ஶ்ரவ 56-18.
பி	24	10	பு	சது 14-50, அவி 60-0. பஞ்சமிதிதி, அகஸ் 28-4.
சி-ம	25	11	வி	பஞ் 21-1, அவி 3-51, அதிதி.
சி	26	12	வெ	ஷஷ் 27-40, சத 10-55, ஷஷ்டீதிதி.
சி	27	13	ச	ஸப் 34-13, பூட் 18-33, வியதீபாத புண்ணியகாலம்.
அ	28	14	ஞா	அஷ் 39-58, உட் 25-42, கற்போட்டமாரம்பம்.
சி	29	15	தி	நவ 44-20, ரே 31-35, அகஸ் 28-5, வாயிலார்.
சி	30	16	செ	தச 46-54, அசு 35-46.
சி-அ	31	17	பு	ஏகா 47-23, பர 37-59, வைகுண்ட ஏகாதசி, ரகூத்தமர்.
ம-உ	1 1931௵ ஜனவரி௴	18	வி	துவா 45-42, கிரு 38-9, கிருத்திகாவிரதம், திருப்பதி [தீர்த்தம்.
ம-சி	2	19	வெ	திர 42-6, ரோ 36-24.
சி	3	20	ச	சதி 36-52, மிரு 32-59, உதயம் ஆருத்திராதரிசனம்.
சி	4	21	ஞா	○ 30-19, ஆரு 28-14, சடையர். [அகஸ் 28-7.
அ-சி	5	22	தி	பிர 22-49, புந 22-32, பிரதமதிதி.
சி	6	23	செ	துவி 14-55, பூச 16-26, திதிதுவயம்.
சி	7	24	பு	திரி 7-5, உப 52-30, ஆயி 10-26, சதுர்த்தி திதி.
அசிம	8	25	வி	பஞ் 52-46, மக 4-46, உப 55-2, அகஸ் 28-10.
சி-அ	9	26	வெ	ஷஷ் 46-54, உத் 55-52, இயற்பகை, சத்தியகாமர்.
ம	10	27	ச	ஸப் 42-7, ஹஸ் 52-59, கூடாரவல்லி, கற்போட்ட
சி	11	28	ஞா	அஷ் 38-30, சித் 51-15. [முடிவு, நரஹரி.
அ-ம	12	29	தி	நவ 36-6, ஸ்வா 50-42, நவமிதிதி, மானக்கஞ்சாறர்.
ம-சி	13	30	செ	தச 34-50, விசா 51-13, தசமிதிதி, மகரரவி 48-42, [அகஸ் 28-14, போகிபண்டிகை, தனுர்மாஸ [பூஜை முடிவு.

ரா			குரு
	15உக்கு ராசி.		செ
பு,ச,ர	சுக்		கே